பக்கங்கள்: முப்பத்து இரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 17 சனிக்கிழமை (03.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 007



07 பட்டதாரிகள் நேற்றுப் பேரணி



25 ஜெயாவுக்கு பிரதமர் கடிதம்



29 மீண்டது மேற்கிந்தியா

## தெரிவுக் குழுவில் பங்குபற்றுமாறு சம்பந்தனைக் கேட்பார் ஜனாதிபதி

### விரைவில் சந்தித்துப் பேசுவதற்கும் முடிவு

கொழும்பு, டிசெம்பர் 03

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தாம் பங்கேற்கப் போவதில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ள நிலையில், இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் நேரடிப் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராகி வருகிறார் என்று தெரியவருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு இல்லாமல் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முழுமையடையாது எனக் கருதும் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ, தலைவர் சம்பந்தனு டன் நேரடிப் பேச்சு நடத்தி இதனை விளக்கும் அதேசமயம் அதில் இணைந்து இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முன் வருமாறு வலியுறுத்துவார் என்று ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக நேற்றுமுன்தினம் கருத்து தெரிவித்திருந்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், இரு தரப்புப் பேச்சுகளில் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர்தான் தெரிவுக்குழு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராயும் எனத் தெரிவித்திருந்தார்.

கூட்டமைப்பின் இந்த நிலைப் பாட்டை அரசின் மூத்த அமைச்சர்

பக் 31

## கல்வி அமைச்சின் கண்காணிப்பு எம்.பியாக மொஹான் நியமனம்

கொழும்பு, டிசெ.3

ஐ.தே.கவிலிருந்து 'பல்டி' அடித்து அரசுடன் இணைந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிறேரோ, கல்வி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்தத் தகவலை ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்தார்.

இந்த நியமனம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## ஹிக்கடுவ நகரசபை தலைவருக்கு மறியல்

கொழும்பு, டிசெ.3

ஹிக்கடுவை நகர சபையின் தலைவர் வின்னீ காரியவசத்தை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று உத்தர விட்டார்.

நகர சபையின் அங்கத்தவர் ஒருவருக்குக் கொலை

பக் 31

## சர்வாதிகாரப் போக்கையே இலங்கையில் காண்கிறோம்

### நல்லிணக்க முயற்சியும் இல்லை என்கிறது கனடா

கொழும்பு, டிசெ.3

இறுதிக்கட்டப் போரின்போது இடம் பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது. எனினும் இலங்கையில் வளர்ந்துவரும் சர்வாதிகாரப் போக்கையே நாங்கள் காண்கிறோம்- என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயட் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் விமர்சித்திருந்தார். இதனையடுத்தே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயட் இதனைத் தெரிவித்தார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த சில நாடுகள் 10 வருடங்களை எடுத்துள்ளன. சில நாடுகள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேயில்லை. ஆனால் இது மிக முக்கியமானது என ஜோன் பயட்

பக் 30

## திருநெல்வேலியில் 7 கடைகளில் நள்ளிரவில் திருடர் கைவரிசை!

### பல லட்சம் ரூபா பணம், பொருள் சூறை



யாழ்ப்பாணம், டிசெ.3

திருநெல்வேலியில் பலாலி வீதியில் உள்ள ஏழு கடைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு உடைக்கப் பட்டு அவற்றில் இருந்து இலட்சக்கணக்கான ரூபா பணமும், பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் திருடப் பட்டுள்ளன. நள்ளிரவுவேளை அடுத்தடுத்துள்ள ஏழு கடைகளில் இந்தத் திருட்டு நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டுள்ள தாகத் தெரிய வருகிறது.

திருநெல்வேலியில் உள்ள கணினி நிலையம், நல்லைக் கந்தன் களஞ்சியம், ஹரிகரன் சுப்பர் குறோசறி, சக்தி அழகு சாதன நிலையம், அரவிந் பிரகாஷ் வியாபார நிலையம், ஆஷா வியாபார நிலையம், மருதடி அழகு சாதன நிலையம் ஆகியனவே நள்ளிரவில் உடைக்கப்

பக் 31

## புலிகள் இயக்கம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு அரசு தடை

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.3

விடுதலைப் புலிகள் தொடர்பான பிரசாரங்கள், வைபவங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு அரசு தடைவிதித்துள்ளது.

- இவ்வாறு ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று தெரிவித்தார்.

இதை ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டுமென இராஜதந்திர மார்க்கங்களூடாக அரசு கோரும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் கடந்தவாரம் நடந்த சம்பவம் குறித்துத்

பக் 31

## கொல்லன் கலட்டியில் படைத் தலைமையகம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

உடுவிலில் அமைந்திருந்த 513 பிரிகேட் இராணுவ முகாமை மக்கள் மீள்குடியமர்வுக்காக அண்மையில் விடுவிக்கப்பட்ட கொல்லன்கலட்டி, மாவை கலட்டிப்பிரதேசத்தில் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

யாழ்.குடாநாட்டின் முக்கிய

பக் 30

## வைத்தியசாலைகள் அமைக்கும் போர்வையில் அமெரிக்கப் படைகள் நுழைவதை அனுமதியோம்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சூளுரை

கொழும்பு, டிசெ.3

''வைத்தியசாலைகள் அமைக்கின்றோம் என்ற போர்வையில் அமெரிக்க இராணுவம் எமது நாட்டிக்குள் உட்பிரவேசிக்க முயன்றால் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.''

- இவ்வாறு திட்டவட்டமாகத் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

அமெரிக்காவிடம் நிதி உதவிகளைப் பெற்றுக்கொண்டு நிர்மாண நடவடிக்கையில் அரசே முழுமூச்சாக ஈடுபடவேண்டும் என்றும் அந்த அமைப்பு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

ஆசிய பிராந்தியத்திற்கான அமெரிக்க இராணுவத்தின் நிதியுதவியுடன்

பக் 31

## அரசியல் கைதிகள் இலங்கையின் மதிப்பைக் கெடுக்க முயன்றனரா?

### விசாரிக்க சி.ஐ.டிக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, டிசெ.3

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் இலங்கையின் மதிப்பை சர்வதேச ரீதியில் பாழாக்க முயற்சித்தார்களா? என்பது பற்றி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதற்கான உத்தரவு நீதிமன்றத்தினால் நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது.

அனுராதபுரம் சிறையில் உள்ள புலிச் சந்தேகநபர்கள் நவம்பர் 26ஆம் திகதி இரவு பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடியதுடன் மறுநாள் மாவீரர் தினத்தைக் கொண்டாடவும் ஏற்பாடுகளைச் செய்தனர் என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து அதுகுறித்து விசாரணை நடத்தும்படி நீதிவான் ரஷ்மி சிங்கம்புலி

பக் 31

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மேகமூட்டத்துடனும் பிறமாவட்டங்களில் தெளிவான வானிலையும் நிலவும் சாத்தியம் உள்ளது.

# உறுதியளித்ததில் 49,000 வீடுகள் அமைக்க நிதிக்கு இந்திய அமைச்சரவை அனுமதி

புதுடில்லி, டிசெ.3

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு இந்தியா உறுதியளித்த 50 ஆயிரம் வீடுகளில் 49 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு இந்திய ரூபா 1,319 கோடி வழங்க இந்திய மத்திய அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

மத்திய அமைச்சரவைக் கூட்டம் முடிந்ததும், இந்திய மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்திய மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜூன் மாதம் இந்தியா வந்திருந்தபோது, இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க இந்திய அரசு உதவி செய்யும் என்று பிரதமர் மன்மோகன்சிங் அவரிடம் உறுதி அளித்து இருந்தார். அதன் ஒரு பகுதியே இந்த 49 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம்.

அதன் அடிப்படையில் அங்கு தமிழர்களுக்கு 49 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்துக்கு ரூபா 1,319 கோடி வழங்க நேற்றுமுன்தினம் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி மற்றும் மத்திய, ஊவா மாகாணங்களிலும் இடம்பெயர்ந்த தமிழர்களுக்காக 38 ஆயிரம் வீடுகள் கட்டப்படும். சேதம் அடைந்த 5 ஆயிரம் வீடுகள் பழுது பார்க்கப்படும். ஆதரவு இன்றி தனியாக இருக்கும் பெண்கள், விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு 6 ஆயிரம் வீடுகள் கட்டப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர் வீடுகளை அவர்களாகவே கட்டிக் கொள்ளலாம், வீடு கட்டுவது மற்றும் வீடு களை பழுது பார்ப்பதற்கான பணம், அந்தப் பயனாளிகளுக்கு அவர்களுடைய வங்கிக் கணக்குகள் மூலம் வழங்கப்படும்.

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக் இந்திய அரசு ஏற்கனவே ரூபா 500 கோடி வழங்கி உள்ளது. வடக்குப் பகுதியில் ஏற்கனவே ஆயிரம் வீடுகளையும் கட்டிக் கொடுத்து உள்ளது - என்றுள்ளது. (ஒ-சி)

## முன்பள்ளிகளின் கண்காட்சி, கலை நிகழ்வு

வடமாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்றும் - நாளையும் காலை 9.30 மணியில் இருந்து மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெயா தம்பையா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ)

## நாம் அனைவரும் இலங்கையர்கள்; இன, மத, மொழி பேதம் வேண்டாம்!

### பிரதமர் கோரிக்கை

கொழும்பு, டிசெ.3

இன, மத, மொழி ரீதியாக சமூகங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தாமல் அனைவரும் இலங்கையர்கள் என்ற உணர்வுடன் ஒன்றுபடவேண்டும் என பிரதமர் டி.எம்.ஜயரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் அழைப்பு விடுத்தார். பௌத்தசாசன மற்றும் மத விவகார, கலை கலாசார அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் பதிலளித்துப் பேசும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பௌத்த மதத்தைப் பாதுகாப்பது போல் ஏனைய மதங்களும் பாதுகாக்கப்படும். ஒவ்வொருவரும் தத்தமது மதங்களை மதிப்பதுபோல் ஏனைய மதங்களையும் மதிக்க வேண்டும்; கௌரவிக்க வேண்டும். இந்தக் கொள்கையுடனேயே நாம் செயற்படுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் யோகேஸ்வரன் பேசும்போது இந்து மதத்திற்குப் போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்று கூறினார். அதுதவறு. யுத்தம் முடிந்த பின்னர் வடக்கில் 140 இந்துக் கோயில் களின் அபிவிருத்திக்காக நாம் நிதி வழங்கியுள்ளோம். அற நெறிப்பாடசாலைகளுக்கும் இம்முறை பெருமளவிலான நிதி ஒதுக்கியுள்ளோம்.

பெருமளவிலான பௌத்த பிக்குகள் துறவறத்தைத் துறந்துவிட்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயா சிறி ஜயசேகர குற்றஞ்சுமத்தினார். இதில் உண்மை இல்லை. சில இளம் பிக்குமார் படித்துப் பட்டம் பெற்ற பின்னர் தொழில்களைத் தேடிக்கொண்டு சென்றுள்ளனர். அது தான் உண்மை.

பௌத்த மதத் தலைவர்களுக்கு வழங்கிவரும் அனைத்துக் கௌரவமும், வசதிகளும் இந்துமத குருக்கள், கிறிஸ்தவ பாதிரிமார், இஸ்லாமிய மௌலவிமார் அனைவருக்கும் அளிக்கப்படுகின்றன. நாம் எந்த வொரு மதத்தையும் புறக் கணிக்கவில்லை -என்றார் அவர். (ஒ-சி)



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட ஊடகக் கற்கை 3ஆம் வருட சிறப்புக்கலை மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட 'புகைப்பட இதழ்' வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் இதழை வெளியிட்டு வைக்க யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி ம.ஞானக்குமரன் பெற்றுக்கொண்டார். (ஒ-323)

## நாளை முதல் அடுத்த ஞாயிறு வரை மின்சாரத் தடை

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்விநியோகத் தூண்கள் சிலவற்றை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை தலங்காவில் பிள்ளையார் ஆலயப்பிரதேசம், கந்தர்மடம், ஆரியகுளப் பிரதேசம், முலவைச்சந்திப் பிரதேசம், குருநகர், பாசையூர், கொழும்புத்துறை, புங்கங்குளம் வீதி, கச்சேரியடி, ஓ.எல்.ஆர் தேவாலயப்பகுதி பிரதானவீதி, கண்டி வீதி, ஈச்சமோட்டை, நல்லூர் ஆலய சுற்றுப்புறம், திருநெல்வேலி, இராமநாதன் வீதி, பரமேஸ்வராச்சந்தி, பலாலி வீதியில் தபால்பெட்டி சந்தியிலிருந்து வேம்படிச் சந்திவரை ஆகிய இடங்களிலும்-வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளைமறுதினம் திங்கட்கிழமை மற்றும் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், ஆகிய இடங்களிலும்-'

எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கோம்பயன்மணல் பிரதேசம், யாழ் பட்டணப்பகுதி, கொட்டடி நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், ஆகிய இடங்களிலும்-

8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கரந்தன் நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபையின் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# நிகழ்வுகள் இன்று

**மக்களுடனான கலந்துரையாடல்**

யாழ்.மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/83 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம் பிற்பகல் 3.00 மணிக்கு ஜே/83 யாழ்.சிவன் பண்ணை வீதியிலுள்ள கொட்டடி சனசமூக நிலைய கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. இதில் அந்தப் பகுதி மக்கள் தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்து ழைப்பை வழங்குமாறு மாநகர சபையினர் அறி வித்துள்ளனர். (ஒ)

**பரிசளிப்பு விழா**

யாழ் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா காலை 9.30 மணிக்கு அதிபர் எம்.ஞானப்பிரகாசம் தலைமையில் பாடசாலையின் ஜோன்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

* * *

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா காலை 9 மணிக்கு அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-236)

**அக மகிழ் விழா**

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான முகாமைத்துவ போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகம் தேசிய விருது பெற்றமைக்கான அக மகிழ் விழா காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (எ-253)

**வலுவிழந்தோர் தினக் கொண்டாட்டம்**

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் சர்வதேச வலுவிழந்தோர் தினக் கொண்டாட்டம்-2011 காலை 9 மணிக்கு ஜெய்ப் பூர் நிறுவனத்தில் அதன் பதில் தலைவர் திருமதி ச. குணரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் த்லைவர் டாக்டர் திருமதி தி.குமுதரஞ்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (எ)

# ஆதி தமிழனின் 'தப்பு'இசை யாழ். பல்கலையில் நாளை

யாழ்ப்பாணம், டிசெ.3

தமிழனின் ஆதிக் கலைகளில் ஒன்றான 'தப்பு' இசை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை இடம்பெற உள்ளது. நாட்டார் கலைகளான ஒயில், சாட்டைக்குச்சி ஆட்டங்களும் ஆதிவாசிகளின் ஆட்டமும்கூட ஆற்றுகை செய்யப்பட உள்ளன.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையமும் செயல்திறன் அரங்க இயக்கமும் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வு சுமார் ஒன்றரை மணிநேரம் நீடிக்கும்.

தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள நாட்டார் கலைஞரான ஆடலரசு வேணு என்றழைக்கப்படும் வி.வேணுகோபாலும் அவரால் பயிற்றுவிக்கப்பட்ட யாழ். மாணவர்களும் இந்த நிகழ்த்து கலைகளை நாளை கைலாசபதி கலையரங்கில் மேடையேற்ற உள்ளனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்வார்.

தமிழகத்தில் பல இடங்களிலும் மிகத் தீவிரமாக இந்தக் கலைகளைத் தாம் முன்னெடுத்து வருகின்றபோதும் யாழ்ப்பாணத்தில் இவற்றை நிகழ்த்துவது நெகிழ்ச்சி தருவதாக இருக்கிறது என்று உதயனிடம் தெரிவித்தார் வேணு.

''எத்தனையோ களங்களையும் போராட்டங்களையும் கண்ட இந்த மண்ணில் ஆதித் தமிழனின் கலையை நிகழ்த்திக்காட்டுவது மிகப்பொருத்தமானதே'' என்று அவர் கூறினார்.

''கலைத்துறை மாணவர்களின் பாடப்பரப்பில் இத்தகைய ஆட்டங்கள் பற்றிக் கற்கின்றபோதும் அதன் உண்மையான வடிவத்தை அவர்கள் நேரில் பார்ப்பதற்கான வாய்ப்புகள் அவர்களுக்குக் கிடையாது. இது மிக அரிய சந்தர்ப்பம். மாணவர்களும், ஆசிரியர்களும் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்'' என்று செயல்திறன் அரங்க இயக்க பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வேணு பயிற்சிகளை வழங்கினார் என்று தெரிவித்த பணிப்பாளர், நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியிலும் இந்த நிகழ்த்து கலைகள் ஆற்றுகை செய்யப்பட உள்ளன என்றார். ''இங்கும் வெளிப் பார்வையாளர்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள்'' என்றார் அவர்.

தமிழர்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்து கிடந்த ஆதிக் கலையான 'தப்பு' தற்போது நிகழ்த்து கலையாக தமிழகத்தின் முக்கிய நிகழ்வுகளில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. தமிழகத்தில் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் 'சென்னைச் சங்கமம்' நிகழ்வில் தப்பாட்டம்பிரபலமானது. தற்போது பல்கலைக்கழக மாணவர்கள் இந்தக் கலையைத் தமது கைகளில் எடுத்துள்ளார்கள். வேணுவும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதுகலைப் பட்ட மாணவனாக இருக்கிறார்.





பலாலி ஆசிரியர் கலாசாலையில் மாணவர்களுக்கு 'தப்பு' இசையை நிகழ்த்திக் காட்டுகிறார் வேணு. அவருடன் அவரது மாணவர்களும் இணைந்து ஆற்றுகை நிகழ்த்துகின்றனர். (கீழே)

# நீர்ப் பாதுகாப்பு வாரமாக அடுத்த வாரம் பிரகடனம்

கொழும்பு, டிசெ. 3

தேசிய நீர் பாதுகாப்பு வாரமாக அடுத்த வாரத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க, 5ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

சுகாதார அமைச்சு, நீர்வளங்கள் அமைச்சு மற்றும் யுனிசெவ் அமைப்பு ஆகியன கூட்டாக இணைந்து எதிர்வரும் 9ஆம் திகதி விழிப்புணர்வுப் பேரணி ஒன்றை நடத்தவும் திட்டமிட்டுள்ளன. சுதந்திர சதுக்கத்திலிருந்து மகாவலி கேந்திர நிலையம் வரை இந்த நடைபவனி செல்லும்.

தேசிய நீர் பாதுகாப்புத் தினம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்வு அண்மையில் சுகாதார அமைச்சின் கல்விப் பணியகத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கூறப்பட்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள், நீர்வளங்கள் வடிகாலமைப்பு அதிகாரசபை அதிகாரிகள் உட்பட நீர்த்துறைச் சார்ந்த நிபுணர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பூகோளம் 71 சதவீதத்தால் நீரால் சூழ்ந்துள்ளபோதிலும் ஒரு சதவீதத்திற்கும் குறைவான நீரே பாவனைக்கு உகந்ததாகும். மானிடர்களின் சூழல் மாசுபடுத்தல் நடவடிக்கையால் பாவனைக்கு உகந்த நீரும் மாசடைந்துகொண்டு வருகின்றது. இதனால் பிற்காலத்தில் பெரும் நெருக்கடிகள் வரும் என்றும் நீர் மாசுபடுவதால் பல்வேறு தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் நிபுணர்கள் இந்நிகழ்வில் எச்சரித்தனர்.

தேவையற்ற நீர்ப்பாவனையைத் தவிர்த்து குடிதண்ணீரைச் சேமிக்கும்படி சுகாதார சேவைகள் அமைச்சு மக்களிடம் வலியுறுத்தியுள்ளது. அத்துடன் தொற்றுநோய்களைத் தடுக்க தண்ணீரைச் சுடவைத்து அருந்துமாறும் அறிவுறுத்தி உள்ளது.

# மஹிந்தவின் பாவனைக்காக புத்தம் புதிய பெல் ஹெலிகள்

கொழும்பு, டிசெ. 3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பயணங்களுக்குப் பயன்படுத்தப்படும் இலங்கை விமானப் படையின் ஹெலிகள் அடிக்கடி பழுதடைவதைத் தொடர்ந்து இரு பெல்- 411 ஹெலிகள் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை விமானப் படையிடம் புத்தம்புதிய இரு ஹெலிகளும் ரெக்ஸ்ரோன் நிறுவனத்தால் நேற்று ஒப்படைக்கப்பட்டது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள ரென்னிசீ, என்ற இடத்தில் ஹெலிகளின் சாவிகளை விமானப் படைத் தளபதி எயர் மார்சல் ஹர்ச அபேவிக்கிரம பெற்றுக் கொண்டார் என்று ரெக்ஸ்ரோன் நிறுவனம் நேற்று அறிவித்தது.

நிகழ்வில் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவும் கலந்து கொண்டார். இலங்கை விமானப்படையின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பெல்-412 உலங்குவானூர்திகள் மிகவும் நம்பகரமானதாகவும், திறன் மிக்கவையாகவும் இருப்பதாக விமானப் படைத் தளபதி அங்கு தெரிவித்தார்.

விமானப்படை இந்த வகை ஹெலிகளை மிகமுக்கிய பிரமுகர்களின் பயணங்களுக்குப் பயன்படுத்தி வருகிறது. ஜனாதிபதி பயணம் செய்யும் ஹெலிகளில் கோளாறுகள் ஏற்பட்டு வந்தன. இதையடுத்து ஜனாதிபதி மற்றும் மிகமுக்கிய பிரமுகர்களின் பயணத்துக்காகவே இந்த இரண்டு பெல் ஹெலிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கென 2011ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக குறைநிரப்புப் பிரேரணை மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. (உ)




# மக்கள் வாழ்வாதாரத் திட்டத்துக்கு ஜப்பான்ரூபா11மில்லியன்உதவி

யாழ்ப்பாணம், டிசெ.3

தெல்லிப்பளை பிரதேசத்தில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்களுக்கென 11 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

ஜப்பானிய உதவி நிறுவனமான 'ஜெய்க்கா'வின் செயல் திட்டங்களில் தெல்லிப்பளை மக்களின் வாழ்வாதார உதவித் திட்டமும் அமையும் என்று இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நெபுஹிடோ கெயோ நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

புதிய நிதி உதவி மூலம் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த, அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படும். மீன்பிடி உபரணங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள், உள்ளீடுகள் என்பன மக்களுக்கு வழங்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின் ஊடாக சுமார் 300 குடும்பங்கள் நன்மையடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஜப்பானியத் தூதர் தெரிவித்தார். திட்டத்தைச் செயற்படுத்தும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் தூதர் நேற்றுக் கைச்சாத்திட்டார். கொழும்பில் தூதரின் இல்லத்தில் நிகழ்வு இடம்பெற்றது. (உ)

## அடையாளம் காணப்பட்டது

பிரிட்டனில் இருதினங்களுக்கு முன்னர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட இலங்கை இளைஞர், நீர்கொழும்பு மாதம்பையைச் சேர்ந்தவரான கப்புகாமிலாகே ஏ. மகேஸ்விக்கிரமசிங்க என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். கொலையாளியைக் கண்டுபிடிக்க சாரதிகள் இருவரின் உதவியை பொலிஸ் நாடியுள்ளது.

## பெண்ணைத் தொந்தரவு செய்தவர் மாட்டினார்

பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணின் காற்சட்டைய 'பிளேட்' கொண்டு வெட்டி அவருக்குப் பாலியல் ரீதியாகத் தொந்தரவு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் சம்பவம் நடந்தது என்று பாதிக்கப்பட்ட யுவதி கோட்டை நீதிவான் முன்னிலையில் சாட்சியமளித்தார். பயன்படுத்திய 'பிளேட்'டுடன் சந்தேகநபர் உடனடியாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் களுத்துறையைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் கூறினர். வழக்கை மார்ச் மாதத்துக்கு நீதிவான் ஒத்தி வைத்தார். (உ)

# நாடாளுமன்றம் செல்லும் முன்னாள் போராளிகள்

கொழும்பு, டிசெ. 3

சட்ட விசாரணைகள் ஏதுமின்றி அரசால் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் 43 பேர் நாடாளுமன்றம் செல்கின்றனர்.

''சபை நடவடிக்கைகளை நேரில் பார்ப்பதற்காக அவர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்துச் செல்லவுள்ளோம்'' என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

புனர்வாழ்வு வழங்கப்பட்ட புலிகள் நாடாளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படுவது வரலாற்றில் இதுவே முதற் தடவை என்றும் அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் குறிப்பிட்டார். இந்த 43 பேரும் எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட இருக்கின்றனர்.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான குழு நிலை விவாதம் எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற உள்ளது. அன்றைய தினமே முன்னாள் புலி உறுப்பினர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர். (உ)

## மாற்றுவலு உள்ளோர் தினம் இன்று

''மாற்றுவலு உள்ளவர்களும் சமூகத்தில் ஓர் அங்கத்தினரே. அவர்களுக்கு ஒரு சமூக அந்தஸ்தை ஏற்படுத்த வேண்டியது சமூகம் சார்ந்த மனிதனின் தலையாய கடமை'' என்று அகில மாற்றுவலுவுள்ளோர் தினத்தையொட்டி திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தின் சர்வதேச ஆலோசகரான புரவலர் ஹாசிம் உமர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

மாற்றுவலுவுள்ளோருக்கும் கல்வி, விளையாட்டு, கலை, தொழிற்பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்து சமூகத்தில் அவர்களையும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்குவோம் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

சிந்தியுங்கள்..! சொல்லுங்கள்..! வெல்லுங்கள்..!

நீங்கள் உங்கள் பிள்ளைகளை புத்திசாலியாக உருவாக்க முயற்சிப்பீர்கள் என்பது எமக்குத் தெரியும்

அதனால் ஞாயிற்றுக்கிழமை II பக்கத்தில் பிரசுரமாகும் "மூளைக்கு விசேட போசாக்கு அவசியமானதா?" என்ற கட்டுரையை வாசித்து அதன் கீழுள்ள கேள்விக்கு பதிலளித்து பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்..!



# பாவற்குளம் குடியேற்றத் திட்டத்துக்கு தனியான பிரதேச செயலக கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.3

பாவற்குளம் குடியேற்றத் திட்டத்துக்கெனத் தனியான பிரதேச செயலர் பிரிவு ஒன்று அமைத்துத்தர வேண்டும் என வவுனியா இஸ்லாமிய கலாசார சபை பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வீரபுரம், சின்னச்சிப்பிக்குளம், ஆனைவிழுந்தான், நேரியகுளம், மாங்குளம், பாவற்குளம் சில கிராமங்களையும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலர் பிரிவில் உள்ள எல்.பி. கொலனி, மருதமடுவ, கலாசியம் பலாவ, அவரந்துலாவ, வாரிக்குட்டியூர் ஆகிய கிராமங்களையும், வவுனியா தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சூடுவெந்தபுலவு, மதவுவைத்தகுளம், சின்னத்தம்பனை ஆகிய கிராமங்களையும் இணைத்து புதிய பிரதேச செயலகம் ஒன்று உருவாக்கப்படுவதுடன், அப்பிரதேச செயலகத்தை பாவற்குளம் பருவம் பகுதியில் அமைக்கப்பட வேண்டும் என இந்தச் சபை தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளது.

புதிய பிரதேச செயலகப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காக ஆராய்வதற்கென வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் வந்திருந்த பொது நிர்வாக அமைச்சின் அதிகாரிகள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இதன் போது வவுனியா இஸ்லாமிய கலாசார அபிவிருத்திச் சபையின் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.காசிம் மற்றும் செயலாளர், பொருளாளர் ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன் வைத்தனர். (க-236)

# முல்லைத்தீவில் கனமழையால் விவசாயச் செய்கை பாதிப்பு

## விவசாயிகள் மத்தியில் அச்சமும் கவலையும்

முல்லைத்தீவு, டிசெ.3

கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது மேற்கொள்ளப்பட்ட சேற்று விதைப்பு விவசாயம் அழிவடைந்துள்ளது. இந்தப் பயிர்களை மூடி வெள்ளம் பாய்ந்து சென்றதால் அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

மரவள்ளிச் செய்கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வருவாயை ஈட்டக் கூடிய தருணத்தில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

மேலும் உழுந்து, பயறு, கௌப்பி என்பனவற்றுடன் நிலக்கடலைச் செய்கையும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர் மழை காரணமாக நிலக்கடலை விதைகளைப் போட முடியாத நிலை தோன்றியுள்ளது. அத்துடன் உழுந்து விதைக்கும் காலமும் முடிவடைந்ததால் உழுந்துச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்ட இந்த மாவட்ட மக்கள் தமது விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் கவலையில் ஆழ்ந்தள்ளனர்.

தமது வாழ்க்கையை எதிர்காலத்தில் எவ்வாறு கொண்டு நடத்துவது என்ற அச்சமும் இவர்களின் மனதில் குடிகொண்டுள்ளமையைக் காணமுடிகின்றது. (க-500)

# ஒதியமலை படுகொலை நினைவு தினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

நெடுங்கேணி, டிசெ.3

முல்லைத்தீவு மாவட்டம் ஒதியமலைக் கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 2 ஆம் திகதி ஒரே நேரத்தில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 32 அப்பாவி மக்களின் நினைவு தினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மணலாற்றில் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தின் எதிரொலியாகக் குடும்பஸ்தர்களான இந்த அப்பாவித் தமிழ் மக்கள் ஒரே இடத்தில் கட்டிவைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

இதன் பின்னர் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக நினைவாலயம் ஒன்று அமைக்கப்பட்டு வருடா வருடம் டிசெம்பர் 2 ஆம் திகதி அனைவருக்கும் இந்த இடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டு வந்தது.

ஆனால் யுத்தத்தின் பின்னர் அந்த நினைவாலயம் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டதுடன் இராணுவக் காவலரண்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அவ்விடத்தில் ஒன்று கூடி இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூட அவர்களது உறவினர்களால் முடியவில்லை.

இருந்த போதிலும் இறந்தவர்களின் உறவினர்களின் வீடுகளில் விளக்கேற்றி இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு அவர்களின் நினைவாக ஏனையோருக்கு உணவுகளும் வழங்கப்பட்டன.

நேற்றைய தினமும் இவ்வாறு உணர்வுபூர்வமாக இறந்தவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (க-435)

## நோய்கள் பரவும் ஆபத்து

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழையால் டெங்கு உட்படப் பல தொற்று நோய்கள் பரவுவதற்கு வாய்ப்பு உள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் சுற்றுப் புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும் படியும், கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் அவர்கள் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மழை நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்களை அகற்றுவதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கலாமெனவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது முல்லைத்தீவில் மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# வலயக் கல்விப் பணிப்பாளராக வரதராஜமூர்த்தி நியமனம்

முள்ளியவளை, டிசெ.3

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக கே.வரதராஜமூர்த்தி நேற்று முன்தினம் முதலாம் திகதி முதல் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர் இணைப்பில் சென்றமையால் கடந்த மாதம் 2 ஆம் திகதி முதல் இந்தப் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம.ராஜகுமார் பதில் கடமைகளை ஆற்றி வந்தார்.

இந்த நிலையில் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த கே.வரதராஜமூர்த்தி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-433)

## கூலிக்குச் செல்லும் கடற்றொழிலாளர்

பூர்வீகமாகக் கடற்றொழிலையே மேற்கொண்டு எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திய எமக்குத் தற்போது கூலித் தொழில் செய்து சீவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

யுத்தத்தால் எமது கடற்றொழில் உபகரணங்கள் யாவும் அழிக்கப்பட்டன. தற்போது சில படகுகளைத் திருத்தி அமைத்தது உட்பட 300 படகுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. ஏனைய தொழிலாளர்களுக்கு அதுகூட இல்லை.

நாம் இப்போது இன்னொரு மீன்பிடித்தொழிலாளியிடம் கூலிக்கு வேலை செய்கிறோம் என்று மேலும் தெரிவித்தனர். (க-500)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது

கிளிநொச்சி, டிசெ.3

கண்டாவளைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடும் மழை காரணமாக இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் உள்ள வீடுகளின் நிலப்பகுதியில் நீர்க்கசிவு ஏற்பட்டுப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு கண்டாவளைப் பிரதேச செயலரின் ஏற்பாட்டில் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சமைத்த உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேறுவதனால் தட்டுவன்கொட்டிக் கிராமம் வெள்ளத்தினால் சூழப்பட்டு வெளியிடங்களுடன் தரைவழித் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அக்கிராமத்துக்குத் தேவையான எரிபொருள்கள், உணவுப் பொருள்கள் என்பன இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (236)

# துணுக்காயில் 585 குடும்பங்கள் பாதிப்பு

துணுக்காய், டிசெ.3

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மழைவெள்ளத்தால் 585 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கோட்டை கட்டிய குளத்தில் 50 குடும்பங்களும், ஐயன்கன் குளத்தில் 50 குடும்பங்களும், அம்பலப்பெருமாள் குளத்தில் 20 குடும்பங்களும் தென்னியன் குளத்தில் 50 குடும்பங்களும், அமைதிபுரத்தில் 10 குடும்பங்களும், பழையமுறிகண்டியில் 25 குடும்பங்களும், அனிஞ்சியன் குளத்தில் 50 வீடுகளும், துணுக்காயில் 13 குடும்பங்களும், யோகபுரம் மத்தியில் 25 குடும்பங்களும், யோகபுரம் மேற்கில் 19 குடும்பங்களும் யோகபுரம் கிழக்கில் 20 குடும்பங்களும், புகழேந்திநகரில் 18 குடும்பங்களும் பாரதி நகரில் 19 குடும்பங்களும் திருநகரில் 14 குடும்பங்களும், ஆலங்குளத்தில் 30 குடும்பங்களும், மல்லாவியில் 40 குடும்பங்களும், கல்விளானில் 22 குடும்பங்களும், தேறாங்கண்டலில் 65 குடும்பங்களும், உயிலங்குளத்தில் 16 குடும்பங்களும், புத்துவெட்டுவானில் 29 குடும்பங்களும் என மொத்தமாக 20 கிராமங்களைச் சேர்ந்த 585 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

# கோட்டைகட்டியகுளம் பாடசாலையில் கணிதபாட ஆசிரியர் இல்லாத நிலை

அக்கராயன், டிசெ.3

துணுக்காய் கோட்டை கட்டியகுளம் அ.த.க. பாடசாலையில் ஓர் ஆண்டுக்கு மேலாகக் கணிதபாட ஆசிரியர் இல்லாத நிலையில் க.பொ.த.சாதாரண மாணவர்கள் டிசெம்பரில் நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தயாராகி வருகின்றனர்.

ஏனைய பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியெய்தத் தவறி வரும் நிலையினால் உயர்தர வகுப்புகளில் கற்க முடியாத அவலம் தொடர்கிறது.

இந்தப் பாடசாலைக்கு கணிதபாட ஆசிரியரை நியமியுங்கள் என உயரதிகாரிகளுக்குப் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் மனுக்கள் கையளித்த போதும் இதுவரை பயன்கள் கிடைக்கவில்லை.

கணித பாடத்துக்கு ஆசிரியர் இல்லாமையால் கிராம மாணவர்கள் அக்கராயன் மகாவித்தியாலம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகியவற்றை நாடிச் செல்லும்நிலை காணப்படுகிறது. 'கோட்டைச் சுவடுகள்' நூல் வெளியீட்டு நிகழ்விலும் கணிதபாட ஆசிரியர் இல்லையென்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. (க-410)

# மாணவர்கள் சிறந்த ஆக்கத்திறன் உள்ளவர்களாக விளங்க வேண்டும்

## துணுக்காய்ப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன், டிசெ.3

எமது மாணவர்கள் சிறந்த ஆக்கத்திறன் கொண்டவர்களாக விளங்க வேண்டும். இவ்வாறு துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற ''கோட்டைச் சுவடுகள்'' நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பரந்த ஆகாய வெளியில் கருடனை மட்டுமே பார்க்க முடியுமென்ற உணர்வுடன் இருந்த எமக்குச் சாதாரண ஈயும் பறக்கும் என்பது போல ஒரு சிறிய கிராமத்தில் அமைந்த பாடசாலை நல்ல நூலினை வெளியிட்டு கருடனோடு ஒப்பிட்டுப் பேசக்கூடிய அளவுக்கு உயர்ந்துள்ளது. எமது வலயத்தில் உள்ள பெரும் கல்லூரிகளுக்குச் சவாலாக இந்த நூலினை வெளியிட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களைப் பாராட்டுகிறேன்.

பாடசாலைகளுக்கு நாம் செல்லும் போது மாணவர்களுக்கு ''எமது கிராமம்'' என்று எழுதும்படி கூறினால் ஆறு வரி தாண்டிய மாணவர்கள் குறைவு. எழுத்து விருத்திக்கு ஒரு களமாக இத்தகைய நூல் ஆக்கங்கள் அமைகின்றன.

புதிதாக ஆக்கங்களை உருவாக்கக் கூடிய மாணவர் சமூகம் உருவாக வேண்டும். கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எமது மாணவர்கள் சிறந்த ஆக்கத்திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று மேலும் அவர் தெரிவித்தார். (க-410)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இனப்பிரச்சினைக்கான தீர்வு; மேலும் தாமதம் புத்திசாலித்தனமா?

எங்கள் நாட்டில் உண்டாகும் பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும். அவற்றைச் சர்வதேசத்திடம் - பிறநாடுகளிடம் - ஒப்படைக்க வேண்டிய அவசியம் இல்லை. எமது பிரச்சினைகளை நம்நாட்டு மக்களின் விருப்பத்துக்கு இணங்கத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றில் கருத்துத் தெரிவித்திருக்கிறார் வெளி விவகார அமைச்சரும் முன்னாள் சட்டத்துறைப் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ்.

நமக்கெனத் தனியான கௌரவம், இறைமை, நாகரிகம், கலாசாரம் பண்பாட்டு விழுமியங்கள் உள்ளன. அவற்றை நாம் எவருக்கும் தாரை வார்க்கத் தயாரில்லை - என்றும் அவர் அறுத்து உறுத்துக் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் 'பேர்த்' நகரில் கடந்த ஒக்ரோபர் 28 ஆம் திகதிமுதல் மூன்று நாள்களாக நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில், அங்கத்துவ நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க மனித உரிமை ஆணையாளர் நாயகம் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற, யோசனை இலங்கை, இந்தியா மற்றும் பல ஆபிரிக்க நாடுகளின் எதிர்ப்பினால் கைவிடப் பட்டது தெரிந்ததே.

அதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தவறான தகவல்களைச் சபையில் குறிப்பிட்டார் என்று கூறியே அமைச்சர் ''எந்த வகையிலும் வெளிநாட்டுத் தலையீடு எமது நாட்டுக்குத் தேவை இல்லை'' என்று முழங்கினார். நிற்க.

எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அமைச்சரின் வாதம் தர்க்கத்துக்கு உரியதன்று. தமிழ் மக்களை ஒடுக்கி இரண்டாம் தரப் பிரசைகளாக நடத்தாமல், அவர்களுக்குரிய உரிமை களை வழங்கியிருப்பின், வெளிநாடுகள் இலங்கையின் பக்கம் தலை வைத்துப் படுக்கவும் சந்தர்ப்பமோ வாய்ப்போ வந்திருக்காது என் பதனை தமது தலையணைக்குள் வைத்துக் கொண்டு சிந்தித்ததாலோ என்னவோ பேராசிரியர் இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பார் என்று நினைக்க வைக்கிறது.

ஈழத் தமிழர் பிரச்சினையை வெளிநாட்டு அரசுகள் எவையும் தோற்றுவிக்கவும் இல்லை; தூண்டி விடவும் இல்லை. இந்த நாட்டை ஆண்ட வெளிநாடு - பிரிட்டன் இலங்கையருக்குச் சுதந்திரம் தந்தபோது விட்ட தவறைக் கையில் எடுத்து, தமிழ் மக்களை இங்கு அந்நியராக்கி வேடிக்கை பார்ப்பது இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தவரின் அரசுகள்தான். அதனை ஆழமான புண்ணாக மாற்றிய பொறுப்பும் அவற்றையே நிச்சயமாகச் சாரும்.

தம்மிடமிருந்து எவராலும் பிரிக்க முடியாத தமிழர்களின் அரசியல் மற்றும் வாழ்வுரிமைகளை, கொழும்பு அரசுகள் அடுத்துத் தொடுத்துப் பறித்து வந்ததாலேயே, அகிம்சைப் போராட்டங்களுக்கும் வன்முறைப் போராட்டங்களுக்கும் அவர்கள் உந்தித் தள்ளப்பட்டார்கள் என்பத னைப் பேராசிரியர் பீரிஸ் போன்ற தெற்கின் அரசியல்வாதிகளால் ஏனோ புரிந்துகொள்ள முடியாமல் போயிற்று!

அதன்விளைவே, இனப்பிரச்சினையும் போரும், தமிழ் மக்களின் அழிவும், என்பதே இப்போதைய நிதர்சனம். ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்தில் தீர்க்கப்படாத நாட்டின் பிரதான பிரச்சினைக்கு, நியாயமான தீர்வு ஒன்றை வழங்குவதற்கு, விருப்பமின்றி, இன்றைய அரசும் காலம் வாங்கி வரும் சூழ்நிலையில், சர்வதேசத்தின் உதவியைக் கோருவதைத் தவிர வேறு வழி, தமிழர்களுக்குத் தென்படவில்லை.

வெளிநாடுகள் இதுவிடயத்தில் கைவைக்க வேண்டிய சூழலை உருவாக்கியவர்கள் தெற்கின் அரசியல் தலைமைத்துவங்களே அன்றி தமிழ் மக்கள் அல்லர். தமிழர்கள் அவ்வழி நாடாவிடில், இலங்கையில் அவர்கள் தமது மொழி, நில, ஆட்சி உரிமைகளை இழந்துபோகும் அபா யம், ஆபத்து மிகமிக நெருங்கி வருவதாக உணர்கிறார்கள்; பாழ் கிணற் றில் தள்ளப்படுவோம் என்று அஞ்சும் நிலையை இப்போதைய அரசு உருவாக்கி வருவது வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றது.

சர்வதேச சக்திகள் எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டால் எதிர்காலத்தில் வேறு வடிவங்களில் சோதனைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்பதும் தமிழ் மக்களால் உணர முடியாத ஒன்றல்ல.

தான் பாழ் கிணற்றில் தள்ளிவிடப்படுவதில் இருந்து தப்ப வேண்டிய தேவையை அக்கறையுடன் இயற்றும் அவசியம் தமிழினத்துக்கு வந் துள்ளது. தலைக்கு மேல் வெள்ளம் வந்தால் சாண் என்ன முழம் என்ன என்ற சங்கடமான நிலைக்கு வரும்வரை காத்திருக்காமல், செயற்பட வேண்டிய ஆபத்தான கட்டம் அதற்கு வந்திருக்கிறது.

அதனை மெழுகு பூசி மறைத்துக் கொண்டு, பேராசிரியர் போன்ற அமைச்சர்கள் (அரசு), அதோ தீர்வு, இதோ தீர்வு என்று சூய்க்காட்டிக் கொண்டு வெளிநாட்டுத் தலையீடு வேண்டாம் என்று ஓலமிடுகிறார்கள். இந்த இறுதி வேளையிலும் கூட தமிழர்களுக்குரிய அவர்களிடமிருந்து பிரிக்கமுடியாத உரிமைகளை வழங்குவதற்கான செயல்வடிவங்களை வெளியிட அரசு தயாரா? முன்வருமா?

பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு உதவுகின்றோம் என்ற போர்வையில், இந்தியாவும் மற்றும் மேலை நாடுகளும் தனது பக்கத்தில் நின்று பலம் சேர்த்ததை, அமைச்சர் பீரிஸ் போன்றவர்களின் வாதங்க ளால் தமிழ் மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

மேலும், இலங்கை அரசு, தமிழர்களின் உரிமைகளை வழங்கும் பிர தான விவகாரத்தில், தனக்கு உதவியவர்களுக்கு ''தண்ணீர் காட்டும்'' போக்கில் நடப்பதற்குக் காலடி எடுத்து வைக்கிறது.

ஆறு கடக்கும்வரைதான் அண்ணன், தம்பி அதன் பின்னர் நீ யாரோ, நான் யாரோ என்ற போக்கில் ''பேப்பே'' காட்டும் இலங்கை அரசின் போக்கை, அதற்கு உதவிய நாடுகளால் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடுமா, என்ன?

எதற்கும், சர்வதேச நாடுகளின் போக்கு, தத்தமது நலன்களை நாடி, எந்தக் கோணத்தில், எந்த நிமிடத்தில் மாறும் - தலைகீழாகும் - என்பது கூடச் சந்தேகமே! அதனால் தமிழ்த் தலைமைகள் உரிய நேரத்தில் தக்க வாறு வேண்டிய உசாருடன் (மூச்சிரைக்காமல்) புத்திசாதுரியமாகச் செயற்பட வேண்டும்.

## எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானோரில் வடக்கு மாகாணம் ஐந்தாவது இடத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.03

எச். ஐ. வி தொற்றுக்கு உள்ளானோர் எண் ணிக்கையில் மேல் மாகாணம் முதலாவது இடத்திலும், வடக்கு மாகாணம் 5ஆவது இடத்திலும் உள்ளன.

இது ஆய்வு கூடப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி, ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக எயிட்ஸ் தினம் நேற்று முன்தினம் தியாகி அறக்கொடை சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெற் றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த ஆண்டு ஜூலை மாத முடிவுகளின் படி 1,388 பேர் எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய்க் கிருமிகளுடன் 3 ஆயிரத்துக்குச் மேற்பட்டவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 322 பேர் எச்.ஐ.வி கிருமிகள் உள்ளதாக இனங்காணப்பட்டனர். அவர்களில் 216 பேர் இறந்துள்ளனர்.

இந்தத் தொற்றுநோயானது இளம் பராயத்தினர் மட்டங்களிலே அதிகமாகப் பரவுகிறது. எச்.ஐ.வி தொற்றினால் பீடிக்கப் பட்டவர்களில் 87 வீதமானோர் 20வயது முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.

ஏனைய நோய்களின் தாக்கம் ஒரு சில நாள்களில் தெரியும். ஆனால் இந்த எச்.ஐ.வி தொற்று நோயைப் 10 வருடங்களின் பின் னரே உணரமுடிகிறது, இதனால் மரணம் நிச்சயம்.

இந்த நோயை மனித நடத்தைகள் மூலமே கட்டுப்படுத்த முடியும். எமது சமூகத்தில் மிகவேகமாகப் பரவிக்கொண்டிருக்கும் ஒரு நோயாக இது உள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்த நோய் தொடர் பான விழிப்புணர்வுகள் பரவலாக்கப்பட வேண்டும். சகல மட்டங்களிலும் அது முன் னெடுக்கப்படவேண்டும். இந்த நிகழ்வில் யாழ். போதான வைத்தியசாலைப் பணிப் பாளர் வைத்திய கலாநிதி திருமதி பி. பசுபதி ராஜா, தமிழ் நாடு கோப் பவுண்டேஷன் திட்ட மிடல் பணிப்பாளர் அசோக்குமார் பிரபாத் ஆகியோர் கலந்து கொண்டார். (த-311)

## நிர்வாகக் கிராம அலுவலர்களுக்கு கொழும்பில் வதிவிடப் பயிற்சிநெறி

வலி. வடக்கு, டிசெ.03

வடக்கு - கிழக்கு நிர்வாகக் கிராம அலு வலர்களுக்கான ஐந்து நாள் வதிவிடப் பயிற்சி நெறி கொழும்பில் கடந்த வாரம் இடம் பெற்றது. இந்தப் பயிற்சி நெறியில் வடக்கு கிழக்கைச்சேர்ந்த 27 அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

நிர்வாகக் கிராம அலுவலர்களுக்கான நியமனங்கள் கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட போதிலும் இத்தகைய பயிற்சிநெறியொன்று முதல் தடவையாக தற்போதே வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியிலான இத்தகைய பயிற்சி களை வழங்குவதில் இலங்கை அபி விருத்தி நிர்வாக நிறுவனத்திடம் போதிய வளவாளர்கள் இன்மையால் இத்தகைய பயிற்சிகளைத் நடத்துவதில் சிரமங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பயிற்சிகளை நடத்துவதன் மூலம் தமது ஆற்றலை மேம்படுத்த முடியும் எனவும், தொடர்ந்து இத்தகைய பயிற்சி களைத் தமக்கு வழங்க நடவடிக்கையெடுக்க வேண்டும்எனவும்பயிற்சியில்கலந்துகொண்ட வர்கள் தெரிவித்தனர். (த-86)

## மடி வலை மூலமான மீன்பிடியை உடன் தடுக்க ஜனாதிபதி பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.03

'ட்றோலர்' படகில் தடைசெய்யப்பட் டுள்ள மடி வலையைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்து மாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தர விட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ விடமே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள கடற்றொழில் நீரியல் வளங்கள் அபி விருத்தி முகாமை அலுவலகத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றின்போதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச் சர் ராஜித சேனாரட்ன நிகழ்வில் வைத்து இதனைத் தெரிவித்தார்.

உலக மீனவர் தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற அந்த நிகழ்வில் அனைத்து மாவட் டங்களினதும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களங்களின் உதவிப் பணிப்பாளர் கள், மாவட்டங்கள் தோறும் புதிதாக அங்கு ரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள கிராமிய கடற்றொழில் மகாசங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில் துறையுடன் தொடர்புடைய வர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர் இவர்கள் முன்னிலையிலேயே கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன இந்தத் தக வலை வெளியிட்டார்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் செயலா ளருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்ததன் பின்னரும் வட பகுதியில் ட்றோலர் பட கில் மடி வலையைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் நடவடிக்கை தொடர்கிறது. குறிப் பாக குருநகர்ப்பகுதியில் மடி வலைப் பயன்பாடு இன்னமும் குறையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(த-14)

## ஆளும் கட்சிக்கு 161 ஆசனங்கள்

கொழும்பு, டிசெ.03

நாடாளுமன்றத்தில் ஆளும்கட்சி உறுப் பினர்களின் பலம் இப்போது 161 ஆக உயர்ந் துள்ளது.

ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மோகன்லால் கிரேரோ ஆளும்கட்சியுடன் இணைந்து கொண்டதை அடுத்தே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.

225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் தற்போது ஆளும்கட் சிக்கு 161 உறுப்பினர்களின் (சபாநாயகர் தவிர) ஆதரவு உள்ளது.

எதிர்க்கட்சி வரிசையில் 63 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். ஐ.தே.க. சார்பில் 43 பேரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 13 பேரும், ஜே.வி.பி. சார்பில் 7 பேரும் அங்கம் வகிக்கின்றனர்.

2010 நாடாளுமன்றத் தேர்தலின் போது 143 ஆசனங்களைப் பிடித்து ஆட்சியமைத்த ஆளும் கட்சியுடன், ஐ.தே.கவில் இருந்து சென்ற 17 பேரும் (சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் 8 உறுப்பினர்கள் உள்ளிட்ட) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு உறுப்பினரும் இணைந்துகொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

## பன்றிகளின் அட்டகாசம் படுமோசம் காலபோக நெற்செய்கை கடும் பாதிப்பு

### தென்மராட்சி விவசாயிகள் கவலை

தென்மராட்சி, டிசெ.3

யூரியா வீசிய மறுநாள் நெல் வயல்களில் தண்ணீர் காணப் படுவதில்லை. திடீரெனத் தண்ணீர் இன்றிக் காணப்படுவதால் நெற்செய்கையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

களைகள் பிடுங்கிய வயல்களில் கட்டாக்காலிக் கால்நடைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்கப் பகல் முழுவதும் காத்திருந்துவிட்டு மாலை வேளையில் யூரியா உரம் வீசிவிட்டு வீடு திரும்பும் விவசாயிகள் மறுநாள் காலையில் சென்று பார்க்கும் போது வயல்களில் தேங்கியிருந்த நீர் வெளியேறி வயல்கள் நீரின்றிக் காணப்படுகின்றன.

இரவு வேளைகளில் கூட்டமாக வரும் பன்றிகள் யூரியா வீசியுள்ள வயல்களின் வரம்புக் களைப் பல இடங்களிலும் கிளறுவதால் தண்ணீர் வெளியேறி விடுகிறது.

இந்த வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட தென்மராட்சி தெற்கு தனங்கிளப்புப் பகுதியில் பயிரிடப்பட்ட நெல் பயிராகி வரும் வேளையில் பாதுகாப்பு வேலி இன்னமும் அமைக்கப்படாதமையால் கட்டாக்காலி மாடுகளால் பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. நெற்செய்கையாளர்கள் பகல் வேளையில் சுழற்சி முறையில் வயல் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுவிட்டு இரவானதுமே வீடு திரும்புகின்றனர்.

இரவு வேளையில் கூட்டம் கூட்டமாக வரும் மாடுகளும் பன்றிகளும் பயிர்களை அழிக்கும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளன.

இரண்டாம் கட்ட மானிய உர விநியோகம் இடம்பெற்ற வேளையில் பாதுகாப்பு வேலி அமைக்க வெனக் கமக்கார அமைப்பால் நிதி சேகரிக்கப்பட்டது.

நிதி அறவிட்டு ஒரு மாதத்துக்கு மேலாகியும் பாதுகாப்பு வேலி அமைக்கப்படவில்லை.

கட்டாக்காலி மாடுகளாலும் பன்றிகளாலும் நெற்பயிர்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருவதால் உரிய பயன் பெற முடியாத நிலை நெற்செய்கையாளர்களுக்கு ஏற்படலாம்.

இதனால் தமக்கு ஏற்படும் பயிர் அழிவுக்கு நட்டஈடு பெற உரிய திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும், அவர்களும் நடவடிக்கை மேற்கொள்ளாவிடத்து கவனஈர்ப்புப் போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (த- 207)

## பொலிஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்த சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, டிசெ.3

வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் காட்டிய சமிக்ஞையை உதாசீனம் செய்த சாரதிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வீதியில் வந்த வாகனத்தைப் பொலிஸார் சோதனையிடுவதற்காகச் சமிக்ஞை காட்டிய போது அதனை மீறி வாகனத்தைச் செலுத்திய சாரதியைக் கலைத்துப் பிடித்த பொலிஸார் அவருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கடந்த 30 ஆம் திகதி வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை யடுத்துக் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார். (த- 207)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மரக்கன்றுகள்

தென்மராட்சி, டிசெ.3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடுவதற்கென நல்லின மாங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. கச்சாய் மகளிர் விவசாயப் பண்ணை உரிமையாளரான திருமதி பரமேஸ்வரி தாமோதரம்பிள்ளை நல்லின மாங்கன்றுகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

வைத்தியசாலை வளாகத்தில் உள்ள விடுதிகளுக்கு அருகில் பூந்தோட்டம் அமைத்துப் பராமரிக்க விரும்பும் பொது அமைப்புக்கள் வைத்தியசாலை நிர்வாகத்துடன்தொடர்பு கொண்டு வைத்தியசாலை வளாகத்தைப் பூஞ்சோலையாக மாற்ற முன் வருமாறும் கோரப்பட்டுள்ளது.

விடுதி நோயாளர்களுக்கு வழங்கக் கூடிய செவ்விளநீர், தோடை, தேசி போன்ற மரக் கன்றுகளை வைத்தியசாலை வளாகத்தில் நட்டு நோயாளர்களுக்கு உதவ பிரதேச மக்கள் முன்வரவேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. (த- 207)

## 600 பயனாளிகள் நெடுந்தீவில் மரக்கறிச் செய்கைக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.3

நெடுந்தீவில் மரக்கறிச் செய்கையை மேற்கொள்ள 600 பயனாளிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளதாக வேலணை விவசாயப் போதனாசிரியர் சி.இராமநாதன் தெரிவித்தார்.

மரக்கறிச் செய்கையை மேற்கொள்வதற்கு முன்னோடியாக இவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றுபவர்களுக்கு விவசாய திணைக்களத்தால் மரக்கறி தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

சிரேஷ்ட விவசாய போதனாசிரியர் ம.லோகநாதன், விவசாய போதனாசிரியர் சி.இராமநாதன் ஆகியோர் இவர்களுக்கான பயிற்சிகளை வழங்கினர். (த-7)

## வீதியோரங்களில் இரவில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் விபத்துக்கள் அதிகம்

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ். நகரின் புறநகர்ப் பகுதியில் பிரதான வீதியோரங்களில் இரவு வேளைகளில் கனரக வாகனங்கள் உட்படப் பல வாகனங்கள் நிறுத்தப் படுவதால் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் இடம் பெறுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து நெருக்கடி மிக்க யாழ். பிரதான வீதிகளின் ஓரங்களில் இரவில் உரிய சமிக்ஞை விளக்குகள் இல்லாமல் கனரக வாகனங்கள் நிறுத் தப்படுகின்றன.

இதனால் போக்குவரத்தில் பல அசௌகரியங்கள் ஏற்படுவதுடன் அடிக்கடி விபத்துக் களும் ஏற்படுகின்றன. வாகனங்களை நிறுத்தும் போது ஒளிரவிடும் சமிக்ஞையும் உரிய வகையில் ஒளிரவிடப்படுவதில்லை. இதனால் இந்த வாகனங்களுடன் மோதுண்டு மக்கள் விபத்துக்குள்ளாகின்றனர்.

போதிய மின் வெளிச்சம் இல்லாமையால் அநேகமான வீதிகள் இரவில் இருளில் மூழ்கி காணப்படுகின்றன.

பிரதான வீதிகளில் கனரக வாகனங்களை இரவில் நிறுத்தி விடுவதால் அந்த வாகனங்கள் வீதிகளில் அரைவாசி இடத்தைப் பிடிக்கின்றன.

நகரை அண்டிய வீதிகளில் வாகனங்கள் இவ்வாறு நிறுத் தப்படுவதைப் போக்குவரத்துப் பொலிஸார் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த- 26)

## குளிர்பானம் அதிக விலை: விற்ற 6 பேருக்கு ரூ. 9 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், டிசெ.3

உணவகங்கள், தேநீர்ச் சாலைகளில் அதிக விலைக்கு குளிர்பானங்களை விற்பனை செய்து வந்த குற்றத்துக்காக 6 பேர் யாழ். நீதிமன்றில் 9 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

பாவனையாளர் அதிகார சபையினரால் யாழ். நகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டன.

தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு நீதிவான் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஓ-4)

## 35 வயதுக்கு மேற்பட்டோருக்கு நோய்த் தடுப்பு சிகிச்சைப் பிரிவு

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் முதல் முறையாக ஆரம்பம்

தென்மராட்சி, டிசெ.3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையின் பிரகாரம் நாட்டில் உள்ள 35 வயதுக்குமேற்பட்டோருக்கான தொற்றா நோய்களுக்கான சிகிச்சைப் பிரிவு வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடமாகாணத்தில் முதன் முறையாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இந்தச் சிகிச்சைப் பிரிவு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

35 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இந்தச் சிகிச்சைப் பிரிவில் தொற்றாத நோய்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்காகச் சிகிச்சையில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சுயவிவர மருத்துவ அறிக்கைப் புத்தகம் வழங்கப்பட்டு மாதாந்தம் சிகிச்சைப் பிரிவில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். வாரத்தில் இரு நாள்கள் நடத்தப்படும் சிகிச்சைப் பிரிவில் இதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம், பாரிசவாதம், நீரிழிவு, புற்றுநோய், சுவாசநோய்கள் உட்படப் பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த நோய்கள் இல்லாமல் சுகதேகியாக வாழ அருந்த வேண்டிய உணவு வகைகள், நோய்கள் வராமல் தடுப்பதற்கான ஆலோசனைகள் என்பன சிகிச்சைப் பிரிவில் வழங்கப்படவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் பெண்களுக்கு மட்டுமென ஆரம்பிக்கப்பட்ட சுகவனிதையர் சிகிச்சைப் பிரிவு போன்று அனைத்து மக்களுக்குமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தொற்றாத நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (த- 207)

## 5 மில்லியன் ரூபா செலவில் பளையில் கடைத் தொகுதிகள்

### பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபை அமைக்கிறது

பளை, டிசெ.3

பளை நகர்ப் பகுதியில் 5 மில்லியன் ரூபா செலவில் கடைத்தொகுதிகள் அமைக்கப் படவுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தலைவர் பர்ணாந்து டொமினிக் அன்ரனின் முயற்சியால் கடைக் கட்டடத் தொகுதி விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பளை நகர்ப் பகுதியில் இருந்த கடைத் தொகுதிக் கட்டடங்கள் யுத்த அனர்த்த வேளையில் முழுமையாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்வு இடம்பெற்று நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வரும் வேளையில் தலைவரின் முயற்சியின் பயனாக ஆறு கடைகள் அமைக்க நிதி உதவி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த- 207)

## தேனீ வளர்ப்பு கூடு தயாரிக்க பயனாளிகள் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.3

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும தேசிய இயக்கத்தினர் மனைக் கைத்தொழில் அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டில் தேனீ வளர்ப்புக் கூடுகள், கோழி வளர்ப்புக் கூடுகள் தயாரிக்கும் உற்பத்தியாளர்களையும் இணைக்கவுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் தலா இருவர் வீதம் தெரிவு செய்து அவர்கள் மூலம் தேனீ வளர்ப்புக் கூடு, கோழிக் கூடு ஆகியவை உற்பத்தி செய்து திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

தேனீ வளர்ப்புக் கூடு, கோழிக் கூடு ஆகியவை தயாரிப்பதில் ஆர்வமும் தகைமையும் உள்ளவர்கள் தத்தமது பிரதேச செயலக திட்டமிடல் பிரிவுகளில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு இந்தியாவிலிருந்து உபகரணங்கள்

பனை அபிவிருத்திச் சபையில் ஆராய்ச்சி நிலையத்துக்குத் தேவையான உபகரணங்கள் இந்தியாவில் இருந்து கொழும்புக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,


இந்திய அரசின் நிதி உதவியுடன் புனமைப்புச் செய்யப்பட்டு வரும் இந்த ஆராய்ச்சி நிலையத்துக்கு நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் யாவும் இந்தியாவில் இருந்து கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ளன.

கொழும்பை வந்தடைந்துள்ள இந்த உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சி நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் மழை காரணமாகத் தாமதமடைந்துள்ளன. இதனால் ஆராய்ச்சி நிலையக் கட்டடத்தை திறந்து வைப்பதும் தாமதமடைய உள்ளது.

எனினும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தைப்பொங்கலுக்குப் பின்னர் கட்டடத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது- என்றார். (த- 26)

# வேலை வாய்ப்பு வழங்கக் கோரி பட்டதாரிகள் நேற்றுப் பேரணி

## வடமாகாண ஆளுநருக்கு மகஜர்



யாழ்ப்பாணம், டிசெ.3

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பைத் துரிதமாக வழங்கக் கோரி யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று யாழ். நகரில் நடத்தியது.

யாழ். பெருமாள் கோயிலடியில் ஒன்று கூடிய வேலை யற்ற பட்டதாரிகள் அங்கிருந்து பதாகைகளை ஏந்தியவாறு யாழ். ஆஸ்பத்திரியில் யாழ். கச்சேரி வீதி வழியாக ஏ-9 வீதியில் அரியாலையில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநரின் செயலாளர் அலுவலகத்தைச் சென்றடைந்தனர். அங்கு சென்றடைந்த அவர்கள் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அந்த மகஜரில்,

*யாழ். மாவட்டத்தில் உள்ள வேலையற்ற அனைத்துப் பட்டதாரிகளுக்கும் மூப்பு அடிப்படையில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

*2005ஆம் ஆண்டுப் பரீட்சையில் தோற்றிய அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கியதைப் போன்றும், நுண்கலைப் பட்டதாரிகள் அனைவருக்கும் நியமனம் வழங்கியது போன்றும் புள்ளி அடிப்படையின்றி அனைவருக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

*ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மக்கள் சபைச் செயலாளர் பதவி தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

*பட்டதாரிகள் தோற் றிய வடமாகாணத் தகுதிகாண் பரீட்சையின் காலாவதித் திகதி 03.07.2012 என்பதால் விரைவாக வேலைவாய்ப்பு தொடர்பான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

*வருங்காலத்தில் பரீட்சை அடிப்படையின்றி அனைத்துப் பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை அடிப்படையில் நியமனங்களை வழங்க வழி வகை செய்ய வேண்டும்.

ஆகிய 5 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மகஜரைப் பெற்றுக் கொண்ட பின் பட்டதாரிகள் மத்தியில் கருத்துத் தெரிவித்த வடமாகாண ஆளுநரின் செயலாளர், உங்களின் கோரிக்கைகளை விரைவாக ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்வேன்- என்றார்.(த- 319)

# பாவனையாளர் விதிகளை மீறிய 17 வர்த்தகர்கள் சிக்கினார்கள்

## சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு

தென்மராட்சி, டிசெ.3

பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 17 வர்த்தகர்கள் கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப் படுத்தாமை, விற்பனை விலையை விட அதிகரித்த விலையில் பொருள்கள் விற்பனை செய்தமை, திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் இந்த 17 வர்த்தகர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

கடந்த 29 ஆம் திகதி வழக்குகளை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா 17 வர்த்தகர்களையும் டிசெம்பர் 12 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக அழைப்பாணை அனுப்புமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த வாரம் இந்த உத்தியோகத்தர்களால் பிரதேசத்தைச் சேர்ந்த 10 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எதிர்வரும் ஆறாம் திகதி அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த- 207)

# வலி. மேற்குப் பிரதேசத்தில் விரைவில் சிறுவர் பூங்கா

## பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம்

வலி. மேற்குப் பிரதேசத்தில் வசிக்கும் சிறுவர்களின் நலன்கருதி சிறுவர் பூங்கா அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலைவர் திருமதி என்.ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் இத் தீர்மானத்தை முன்மொழிந்து மேலும் தெரிவித்தாவது;

எமது பிரதேசத்தில் சிறுவர்களின் பொழுதுபோக்குக்காக வசதியொன்றும் செய்து கொடுக்கப்படாதமையினால் அவர்கள் வீடுக்ளில் முடங்கிக் கிடந்து வீண் பொழுதைக் கழிக்கின்றார்கள். இதைக் கருத்தில் கொண்டு சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இப் பூங்கா அமைப்பதனால் சிறுவர்களின் பொழுதுபோக்கு சிறப்பாக அமைவதுடன் சபையின் வருமானத்தையும் அதிகரிக்கமுடிகின்றது. அத்துடன் சில ருக்கு வேலை வாய்ப்பையும் வழங்க முடியும்- என்றார். (த-115)

# ஒளிராத நிலையில் மின் குமிழ்கள் மின்சார சபையினர் கவனிப்பார்களா?

வலி.வடக்கு, டிசெ.3

வலி. வடக்குப் பிரதேச சபையால் அண்மையில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் பல ஒளிராத நிலையில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை வீதியில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

கடந்த வாரம் வீதி அகலிப்புப் பணியைத் தொடர்ந்து மின்சாரத் தூண்கள் இலங்கை மின்சார சபையினால் வேறு இடத்துக்கு மாற்றிப் பொருத்தப்பட்டன. இதன்போது மின் குமிழ்களும் கழற்றப்பட்டு பின்னர் பொருத்தப்பட்டன.

உரிய முறையில் மின் குமிழ்கள் பொருத்தப்படாமையால் மின்குமிழ்கள் ஒளிராத நிலையில் காணப்படுகின்றன.

இது குறித்து வலி. வடக்குப் பிரதேச சபையின் தலைவருடன் தொடர்பு கொண்ட போது, வீதி விளக்குகள் எரியாத விடயம் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொண்டதாகவும் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்த போதிலும் எந்த வொரு நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை எனவும் கூறினார்.

மழை காலம் பொது மக்களின் நன்மை கருதிப் பிரதேச சபைகள் பல லட்சம் ரூபாவை மக்களின் வரிப்பணத்தில் இருந்து செலவு செய்து இந்த வீதி மின் குமிழ்களைப் பொருத்தியுள்ளது.

இதனை மின்சாரசபை கவனத்தில் கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# பெண் ஊழியர்களின் கைப்பைகள் செயலகத்தில் திருட்டு

யாழ். மாவட்ட செயலகத்தில் கூட்டம் ஒன்றுக்குச் சென்ற இரு பெண் ஊழியர்களின் கைப்பைகள் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஊழியர்களால் முறையிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் கூட்டத்துக்குச் சென்ற சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு அலுவலரினதும், கலாசார அலுவலரினதும் கைப்பைகளே இவ்வாறு திருடப்பட்டு அவற்றில் இருந்த பணம்,கையடக்கத்தொலைபேசி, வங்கிப் புத்தகங்கள், வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பன திருடப்பட்டுள்ளன.

நண்பகல் நேரம் இந்தக் கைப் பைகள் திருடப்பட்ட போதிலும் பிற்பகலில் கலாசார அலுவலரின் கைப்பையில் இருந்த பணம் உட்பட ஏனைய ஆவணங்கள் எடுக்கப்பட்ட நிலையில் மீண்டும் கைப்பை குறிப்பிட்ட அலுவலகத்தில் எறியப்பட்டுக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த- 86)

# வெளிநோயாளர் நலன் கருதி நான்கு வைத்திய அதிகாரிகள்

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடமையில்

தென்மராட்சி, டிசெ.3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் வெளிநோயாளர்களின் நலன்கருதி நான்கு வைத்திய அதிகாரிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் தொடக்கம் காலை 8.30 மணி தொடக்கம் மு.ப 11.30 மணி வரையும் பி.ப 2 மணி தொடக்கம் வார நாள்களில் இரவு 8.00 மணி வரையும் வெளிநோயாளர் பிரிவு இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக வெளி நோயாளர் பிரிவில் கடமையாற்றிய உதவி வைத்திய அதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் நவம்பர் 30 ஆம் திகதியுடன் இளைப்பாறியதையடுத்து நேற்று முதல் நான்கு வைத்திய அதிகாரிகள் வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் தினமும் 500க்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (த-207)

# குடாநாட்டில் தொடரும் மழையால் 10 ஆயிரத்து 953 பேர் பாதிப்பு

## 379 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில்

யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக 6 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 860 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 953 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் 947 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 816 பேரும்,நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 114 குடும்பங்களைச் சேர்ந்த 392 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 352 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 328 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 345 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 324 பேரும், காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையில் 410 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 565 பேரும் சண்டிலிப் பாய் பிரதேச செயலர் பிரிவில் 692 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 528 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் 379 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 431 பேர் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களில் ஆயிரத்து 463 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 738 பேருக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அரச அதிபர் மேலும் கூறினார். (ஓ-15)

# யாழ். ஆஸ்பத்திரியில் சேவையாற்ற 13 வைத்தியர்களுக்கு மீள் நியமனம்

## ஆளுநர் அனுமதி வழங்கினார்

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட வைத்தியர் பற்றாக்குறையை அடுத்து ஓய்வுபெற்ற 60 வயதுக்கு மேற்பட்ட வைத்தியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள அனுமதிக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து 60 வயதிலிருந்து 67 வயதுவரையான ஓய்வு நிலை வைத்தியர்கள் 13 பேரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

வைத்தியர்கள் பற்றாக்குறை தொடர்பாக வடமாகாண ஆளுநருக்குப் பல முறை விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே 60 வயதுக்கு மேற்பட்ட ஓய்வுநிலை வைத்தியர்கள் 13 பேர் தொடர்ந்தும் போதனா வைத்தியசாலையில் சேவையில் ஈடுபடுவதற்கு நேற்று முன்தினம் மாலை அனுமதி வழங்கப்பட்டதாகவும், புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்கள் வரும் வரை இவர்கள் பணியாற்ற முடியும் எனவும் கூறப்பட்டதாக யாழ். பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (த-323)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகேசு
**கோவலன் (கோபி)**

எமக்கென்ற ஒரே அன்புச் செல்வமே
எம்குடும்பத்தின் உயர்வுக்காய்
அயராது உழைத்திட்ட எம் குலவிளக்கே
உனை எண்ணி எத்தனை
ஆசைகளை சுமந்தோம் ஐயா
அத்தனையும் நினைவுகளில்
மட்டுமே தந்தாயே
உனை இழந்த எம் ஏக்கங்கள்
சொல்ல முடியவில்லை வார்த்தைகளில்
எம் அருமைச் செல்வமே
ஏழேழு ஜென்மத்திலும்
எம்முடனே வந்து பிறந்துவிடு

பிறப்பு: 29.02.1980
இறப்பு: 25.11.2009

குடும்பத்தினர்
நவோதயா வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

(11125) (1,6,9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
26.10.1947

மறைவு:
03.11.2011

அமரர்
**நன்னித்தம்பி அரசரத்தினம்**
(நாகம்ஸ் ஸ்தாபகர்)

எமது தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.12.2011) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

(11092)(1,6,9)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்:
1933.08.01

விண்ணில்:
2008.12.07



அமரர் சுப்பையா
**தட்சணாமூர்த்தி**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்வதற்கு
நல்லாசானாய் தந்தையாய்
இருந்து எமக்கு வழிகாட்டிய
எங்கள் அன்பு அப்பாவே
நீங்கள் காட்டிய பாதையில்
தொடர்ந்து நாம் பயணிக்க
என்றென்றும் உங்கள்
நல்லாசிகளை வேண்டி நிற்கும்

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

இணுவில்

(11093)(1,6,9)

## சுயதொழில் கடன் வழங்குவது தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் தொழில் துறை சார்ந்த கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்களுக்கு சுய தொழில் முயற்சியாண்மைக் கடன் வழங்குவதற்கான கருத்தரங்கு எதிர் வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தொழில்நுட்பவியல் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொழில்துறைசார்ந்த கற்கைநெறிகளான நீர்க்குழாய் பொருத்துனர், வாயு மற்றும் வில் உருக்கி ஒட்டுனர், மின்னியலாளர், நிர்மாணத் தொழில்நுட்பவியலாளர், இலத்திரனியலாளர், பொருத்து பொறியியக்கவியலாளர், கைத்தொழில்த்துறை மின்னியக்கவியலாளர், மோட்டார் வாகனத் திருத்துனர், மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் பழுதுபார்த்தல் போன்ற கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்து வெளியேறிய மாணவர்களுக்கே இந்தக் கடன் வசதி வழங்கும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (எ)

### விற்பனைக்கு

வான்கோழி மற்றும்
வேதாளங்காய்
விற்பனைக்குண்டு
தொடர்பு- 0776430515

### தவறிவிட்டது

புஸ்பராசா சுதாகரன், [ஏழாலை கிழக்கு, ஏழாலை] என்பவரது தே.அ.அட்டை [770244234V] மற்றும் இராணுவ அ.அட்டை என்பன 30.11.2011 அன்று வவுனியா – யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0770711751 என்னும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

WA xxxx தொடரிலக்கமுடையCD200cc
Road master, WY xxxx
தொடரிலக்கமுடைய மோட்டார்
சைக்கிள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0779370255, 0779947442

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய அல்ஷேசன்
ஜேர்மன் செப்பேட் 2 பெண்
நாய்க்குட்டிகள், பூச்சி மருந்து,
பாவோ- ஊசி போடப்பட்டுள்ளது.
தொடர்பு- 0774219767

### தவறிவிட்டது

ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரியைச் சேர்ந்த முத்துத்தம்பி மகேந்திரராசா என்பவரது தே.அ.அ.(501310840V) கடந்த 26.11.2011 அன்று யாழ்ப்பாணத்துக்கும் - கிளிநொச்சிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரிக்கு அனுப்பி உதவவும். தொ.பே.0778002532

### கார் விற்பனைக்கு

DOCTOR NISSAN SUNNY (FB -13)
கார் 19 - xxxx for 9.25/=
T.P.0772516160

(11096)(2-6-9)

## மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1973 ஆம் ஆண்டு பிறந்து முகாமைத்துவம் கற்று வியாபாரம் செய்யும் மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. நட்சத்திரம் பூரட்டாதி கிரகபாவம் 18

★ ★ ★

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1975 ஆம் ஆண்டு முற்பகுதியில் பிறந்த லண்டன் PR உள்ள மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. மணமகன் விரைவில் வரவுள்ளார். நட்சத்திரம் பூசம். கிரகபாவம் 9.

★ ★ ★

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1983 ஆம் ஆண்டு பிறந்த கனடாPR உள்ள மணமகனுக்கு அசைவ போசன மணமகள் தேவை. மணமகன் விரைவில் வர உள்ளார். நட்சத்திரம் திருவோணம், கிரகபாவம் 35.

தொடர்பு: 021 321 2961,
0783017290, 0779401092

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1986 ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரம் A/L வரை படித்த, அழகிய மணமகளுக்கு ஐரோப்பிய நாட்டு மணமகன் தேவை

தொடர்பு- 0779073970

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



அமரர் இராசா
**மயில்வாகனம்**

தோற்றம்: 22.06.1940
மறைவு: 03.11.2011

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி தபால் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று [03.12.2011] சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

(11128)(1,6,9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு:
21.03.1925

உதிர்வு:
03.11.2011



திருமதி பொன்னம்பலம்
**தெய்வானைப்பிள்ளை**

கடந்த 03.11.2011 இல் இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது கனிவான பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (03.12.2011) சனிக்கிழமை மு.ப 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து அன்னாருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்களா றோட்,
மீசாலை மேற்கு, மீசாலை.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


## Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

இறுதி ஆண்டில் ஓர் அரிய சந்தர்ப்பம்
அனுமதிக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html,
ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரிகளால்

Batch I 04.12.2011 :- 9 am or 3Pm Batch II 07.12.2011 :- 9 am or 3Pm
Batch III 09.12.2011 :- 9 am or 3Pm Batch IV 10.12.2011 :- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

# வியனம்
## கேட்டீர்களா?

### ஷேக்ஸ்பியர் சொன்னாரே சொன்னார்; இங்கு அது நன்றாகவே நடக்கிறது...!

திரையரங்குகளில் ஒரு திரைப்படம் 100 நாள் ஓடினால் அதற்குப் பெரிய கொண்டாட்டம் இடம்பெற்ற மண் இது. வாத்தியார்(எம்.ஜி.ஆர்) ரசிகர்களும், சிவாஜி ரசிகர்களும் வரிந்து கட்டிக்கொண்டு தமது தலைவர்களின் பெரிய கட்டவுட்டுகளுக்கு பாலாபிசேகம் செய்தும், கேக் வெட்டியும் விழாக் கொண்டாடினர். அவர்களின் மேதாவிலாசங்கள் பேசும் சஞ்சிகைகளும் வெளிவந்தன. ரசிகர்களுக்கு இடையிலான குழு மோதல்கள் கூட இடம்பெற்றன. திரையில் காட்டப்படும் கதாநாயகன் முதற்தடவையாகவரும் காட்சியை இடைநிறுத்தி, அதற்குத் தீபம் காட்டும் கோமாளித்தனங்களும் அரங்கேறின. அந்தக் காலம் போய் விட்டது.

இடையில் இந்தக் கூத்துக்கள் அருகிப் போயிருந்தன. இப்போதுதான் மெல்ல மெல்ல இயல்பு நிலை திரும்புவதால் நமது இயல்பும் திரும்பக்கூடும். அதைக் கட்டியங்கூறும் நிகழ்வுகளும் ஆங்காங்கு நடந்துள்ளன.

உலகமே ஒரு நாடகமேடை.அதில் நாமெல்லாரும் நடிகர்கள் என்று ஷேக்ஸ்பியர் சொன்னாலும் சொன்னார். எம்மில் பலரும் நாடக மேடையின் விதமான கதாநாயகர்களாகத் தம்மைப் பாவனைப்படுத்தத் தொடங்கிவிட்டனர். இல்லாவிட்டாலும் அவர்களை அந்நிலைக்கு உயர்த்துவதற்காகப் பாடுபட்டு, தாமும் சிலவகை நன்மைகளைப் பெறும் துணைநடிகர்களும் இருக்கிறார்கள்.

உங்களுக்கும் கதாநாயகர்களாக வர ஆசையிருக்குந்தானே!உங்களை கதாநாயகர்களாகக் காட்ட நீங்கள் என்ன செய்ய வேண்டும்?. உங்களைக் கதாநாயகர்களாகக் காட்ட இருக்கவே இருக்கிறது பிறந்தநாள் விழா. நீங்கள் சமூகத்துக்கு ஏதாவது செய்யாவிட்டாலும் பரவாயில்லை.தீமை செய்து,கெட்ட பெயர் எடுத்தால் கூடப் பரவாயில்லை.உங்களிடம் பசை (பணம்) இருந்தால் போதும்.கொஞ்சம் எடுத்து விசுக்கி விடுங்கள். சில துணை நடிகர்கள் அப்பணத்தால் கவரப்பட்டு உங்களுக்கு விளம்பரம் தேட உதவுவர்.

பெரிய விழாவை ஏற்பாடு செய்யுங்கள். சில பெரிய மனிதர்களை அணுகிக்கேட்டால் நீங்களே ஆச்சரியப்படும் வகையில் உங்களைப் புகழ்ந்து வாழ்த்துச் செய்திகளை எழுதித் தருவார்கள். பத்திரிகையில் அவற்றைப் விளம்பரப்படுத்தினால் நீங்கள் ஹீரோ தான்.

நீங்கள் ஓர் அதிகாரியாக இருந்தால் அதிக நன்மையுண்டு. உங்களுக்குச் சாமரம் வீச இரண்டு பேராவது இருப்பார்கள். எனவே, அவர்களைச் சற்றுத் தூண்டினால் போதும். குறித்த நிறுவனத்தில் இரண்டு வரு



டங்கள் வெற்றிகரமாகச் சேவையாற்றி வழிநடத்திச் செல்லும் செம்மலே! தொடர்ந்தும் பல்லாண்டுகள் எம்மை வழிநடத்த வாழ்த்துகிறோம் என்று ஒரு விளம்பரத்தைப் போடச் செய்யலாம்.

ஒரு கல்வி அதிகாரி தற்காலிக அடிப்படையில் கடமையாற்றினார். அவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. அவர் சென்று நியமனம் பெறுவதற்கு முன்பே வாழ்த்துப்போடும் விசுவாச அதிபர்கள் இங்கு நிறைந்துள்ளனர் என்று சொன்னார் ஒரு ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர். கல்வி அதிகாரிகள் அத்தகைய அதிபர்களைச் சிக்கெனப் பிடித்தால் புகழ் மாலைக்குக் குறைவிருக்காது. அது போலவே எல்லா இடங்களிலும் எல்லா அதிகாரிகளும் சிற்றூழியர்களை உங்களுடைய உள்ளகப் புலனாய்வார்களாகவும், உத்தியோகப்பற்றற்ற மெய்ப்பாதுகாப்பாளர்களாகவும் வைத்திருந்தீர்களாயின் அவர்கள் உங்களைக் கேடயங்களாகப் பாதுகாப்பதுடன் உங்களது புகழ் பரப்பும் செய்தி நிறுவனங்களாகவும் செயற்படுவர்.

விழிச்சான் குஞ்சு.

# ஆடம்பர சுற்றுலா விடுதி அமைக்க இந்திய நிறுவனத்துக்கு அனுமதி

## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கூறுகிறார்

கொழும்பு,டிசெ.3

ஆடம்பர சுற்றுலா விடுதி மற்றும் கலப்பு வர்த்தக அபிவிருத்திக்காக முதலீடுகளை செய்ய அமெரிக்காவின் ஷெரட்டன் கூட்டு நிறுவனத்தின் பிரதிநிதியான இந்தியாவின் பீ.சி நிறுவனத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.



அரச தகவல்கள் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த நிறுவனம் நேரடியாக இந்த முதலீடுகளைச் செய்ய உள்ளதுடன், இந்தத் திட்டத்துக்காக கொழும்பு,காலிமுகத்திடலுக்கு அண்மையில் உள்ள இராணுவ தலைமையகத்தை அண்மித்த பகுதியில் 5 ஏக்கர் நிலம் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காணியை குத்தகைக்கு வழங்குவதற்காக அரசு, 73.5 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்ளவுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக 300 மில்லியன் டொலர்களை அந்த நிறுவனம் முதலீடு செய்ய உள்ளது.

இந்திய நிறுவனம் இலங்கையில் முதலீடு செய்வதன் மூலம் நாட்டின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பாக இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



கொழும்பு மியூஸியஸ் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்துவைத்துள்ளார்.

## வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு

கொழும்பு,டிசெ.3

இலங்கையில் இந்திய சீனி உற்பத்தி நிறுவனம் உட்பட்ட மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனங்கள் சீனாவினால் 361 மில்லியன் டொலர்கள் செலவில் ஹம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட துறைமுகப்பகுதியின் பொருளாதார வலயத்திலேயே தமது தொழிற்சாலைகளை அமைக்கவுள்ளன.

இந்திய சீனி உற்பத்தி நிறுவனம், சிங்கப்பூரின் பெற்றோ-கெமிகல் மற்றும் பாகிஸ்தானின் சிமெந்துத் தொழிற்சாலை என்பனவே தமது தொழிற்சாலைகளை அமைக்கவுள்ளன.

இந்த மூன்று நிறுவனங்களின் மூலம் இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடாகக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க நிறுவனம் கொழும்பில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கீட்டுடன் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்காக 99 வருட குத்தகை அடிப்படையில் 5 ஏக்கர் காணி இலங்கை அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வெளிநாடு சென்ற வைத்தியர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,டிசெ.3

பயிற்சிகளுக்காக வெளிநாடு சென்ற சுமார் ஒன்பதாயிரம் வைத்தியர்கள் இதுவரையில் நாடு திரும்பவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுகாதார அமைச்சில் சேவையாற்றியவர்களே தற்போது வெளிநாடுகளில் கடமையாற்றி வருகின்றனர். இதனால், அரசு வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாகவும் மேல் படிப்புக்காக வெளிநாடு செல்லும் அதிக வைத்தியர்கள் மேல் படிப்பை முடித்துக்கொண்டு அங்கேயே தங்கி விடுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட நிபுணத்துவம் பெற்றுக்கொண்ட பல வைத்தியர்கள் இவ்வாறு வெளிநாடுகளில் சேவையாற்றி வருகின்றனர்.

மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு உடனடியாகப் பயிற்சிகளை வழங்கி அவர்களை அரச சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# கனடா நாடாளுமன்றில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை கண்காணிப்பகம் அறிக்கை

## 'திவயின' பத்திரிகை தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.3

இலங்கைக்கு எதிரான அறிக்கையொன்று கனடா நாடாளுமன்றத்தில், மனித உரிமை கண்காணிப்பகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையை இலங்கைக்கு பாதகம் ஏற்படும் வகையில் மனித உரிமை கண்காணிப்பகம் கனடாவுக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை கண்காணிப்பகத்தின் எலியன் பயர்சன் என்பவரே இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகவும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் இலங்கைக்கு எதிராக பல போலிக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று திவயின பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# அகதி அந்தஸ்து கோரி இலங்கையர்கள் மேலும் 95 பேர் கிறிஸ்மஸ்தீவில் தஞ்சம்

அகதி அந்தஸ்து கோரி மேலும் 95 இலங்கையர்கள் படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ்தீவைச் சென்றடைந்துள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 107 பேரை ஏற்றிய படகு நேற்று முன்தினம் புதன் கிழமை கிறிஸ்மஸ் தீவை வந்தடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வந்தவர்களில் 95 பேர் இலங்கையர்களும் இரண்டு இந்தோனேசிய படகோட்டிகள் உள்ளடங்கலாக 8 ஈராக்கியர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை அகதிகள் வருகையால் ஆஸ்திரேலியா பெரியளவிலான சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ்பொவன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின் அதிகமான இலங்கையர்கள் அகதி அந்தஸ்து கோரி ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரி கடந்த மாதம் படகுகள் மூலம் 892 பேர் வந்ததாகவும் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதி யில் மாத்திரம் 3708 பேர் வந்துள்ளதாகவும் ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (வ)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கண்காட்சியும் பரிசில் வழங்கலும் நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொதுநூலகத்தில் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எம்.சாந்தசீலன் தலைமையில் இடம் பெற்றது. கண்காட்சியை பிரதேசசபை உறுப்பினர்கள் பார்வையிடுகின்றனர். வாசிப்புப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர் ஒருவருக்கு கோமதி ரவிதாஸ் சான்றிதழும் பரிசிலும் வழங்குகிறார். (311)

# சிரியாவிலுள்ள இலங்கையர்களின் தகவல் திரட்டும் பணி ஆரம்பம்

கொழும்பு, டிசெ.3

நாட்டில் ஏற்படும் அவசர நிலைமைகளின் போது சிரியாவில் வாழும் இலங்கையர்களை அங்கிருந்து அகற்றிக் கொள்வதற்காக தகவல் திரட்டப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தகவல்களைத் திரட்டுமாறு சர்வதேச குடிப்பெயர்வாளர் அமைப்பு இலங்கை அரசிடம் உத்தியோகபூர்வமாக கோரியுள்ளது.

இதேவேளை சட்ட ரீதி யான முறையில் எந்தவொரு இலங்கையரும் சிரியாவுக்குச் செல்லவில்லை எனவும் சட்ட விரோதமான முறையிலேயே பல இலங்கையர்கள் சிரியாவுக்குச் சென்றுள்ளதாக லெபனானுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் சிரியாவிலிருந்து லெபனானுக்கு தப்பிச் செல்வதற்கான பாதை திறக்கப்பட்டுள்ளதாகவும் அதனை இலங்கையர்கள் இதுவரை பயன்படுத்திக் கொள்ள வில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# தமிழ்நாட்டில் இருந்து போதைப் பொருள் கடத்தியவர் கைது

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருள் கடத்திவந்த சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய போதைப் பொருள் சோதனைப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து நேற்று அதிகாலை 4 மணியளவில் இலங்கை நோக்கி வந்த விமானத்தில் வந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளார்.

கைது செய்யப்பட்டவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் நபராவார். இவரிடமிருந்து 51 கிலோ என்சால், புகையிலை தூள் தலா 10 கிராம் அடங்கிய 1000 குப்பிகள், 150 ஹான்ஸ் பைக்கற்றுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளார்.

# ராஜரட்ணத்தின் பிணை நிராகரிப்பு: தண்டனை டிசெ.5 இல் ஆரம்பம்

அமெரிக்க பங்குச்சந்தை மோசடி வழக்கில் 11 வருட சிறைத் தண்டனை பெற்றுள்ள இலங்கைத் தமிழரான ராஜ்ராஜரட்ணத்தின் பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து, அவரின் 11 வருட சிறைத் தண்டனை எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சிறுநீரக மாற்றுச்சிகிச்சை உட்பட பல்வேறு நோய்களுக்கு ராஜரட்ணம் உள்ளாயிருப்பதாக நேற்று வியாழக்கிழமை முன்தினம் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் பிணைக்கான காரணங்களை முன் வைத்து ராஜ்ராஜ ரட்ணத்தின் உடல் நிலை கருதி அவருக்குப் பிணை வழங்கவேண்டும் என்று அவரின் சட்டத்தரணிகள் வாதத்தை முன் வைத்தனர்.

அவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், மேன்முறையீட்டு விசாரணைகள் முடி வடையும் வரையில் அவர் சிறைக்கு செல்லாமல் பிணை வழங்கப்பட வேண்டும் என்பதே மனுதாரர் தரப்பு கோரிக்கையாக இருந்தது.

அதனை ஏற்றுக்கொள்ளாத அமெரிக்காவின் பிராந்திய மேன்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கான 11 வருட சிறைத் தண்டனையை உறுதி செய்துள்ளது.

Galleon Group இன் நிறுவுனரான ராஜ் ராஜரட்ணம் அமெரிக்க பங்குசந்தையில் உட்சந்தை மோசடியில் ஈடுபட்டு பல மில்லியன் டொலர்கள் நட்டத்துக்கு காரணமாக இருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டார்.


## கேள்வி அறிவித்தல்

### நகரசபை - பருத்தித்துறை

### நவீன கட்டடத் தொகுதிக் கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2012

பருத்தித்துறை நகரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன கட்டடத் தொகுதி கீழ்த்தள கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத் தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளரினால் கோரப்படுகின்றன.

★ கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 16.12.2011 மு.ப. 11 மணிவரை
★ கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 19.12.2011 மு.ப. 11 மணிவரை
★ கேள்வி திறக்கப்படும் திகதி: 19.12.2011 பி.ப. 14 மணி

மேலதிக விவரத்தினையும் நிபந்தனைகளையும் நகரசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை.
01.12.2011 (சி-6459)(1,6,9)

சபா.ரவீந்திரன் (J.P.U.M) - தவிசாளர்,
நகரசபை, பருத்தித்துறை.







## அதிபர்கள் நியமனம்

தென்மராட்சி, டிசெ.3

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளுக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குடமியன் அ.த.க. பாடசாலை அதிபர் க.உதயகுமாரன் கச்சாய் அ.த.க. பாடசாலைக்கும், கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. ஆசிரியர் நா. கருணாகரன் கைதடி சரஸ்வதி வித்தியாலயத்துக்கும் கடமை நிறைவேற்றும் அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் நேற்றுமுன் தினம் தொடக்கம் நடைமுறைக்குவருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கச்சாய் அ.த.க. பாடசாலை அதிபர் க. மங்களேஸ்வரன் வரணி ம.வி. அதிபராக நியமிக்கப்பட்டதாலும், கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை இளைப்பாறியதாலும் வெற்றிடம் ஏற்பட்ட அதிபர் பதவிகளுக்கு இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (வ-207)


## மொத்த, சில்லறை விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை

இலங்கையில் உள்ள ROVICAN INTERNATIONAL (PVT) LTD நிறுவனமானது இஸ்ரேல் நாட்டு தயாரிப்பான i fresh எனும் உற்பத்திப் பொருள்களை வெற்றிகரமாக மக்களுக்கு விநியோகித்து வருகின்றது. i fresh பொருள்களை யாழ்ப்பாணத்திலும் விநியோகிப்பதற்கு மொத்த, சில்லறை விற்பனையாளர்களை எதிர்பார்க்கின்றது.

* Make up Remover Wipes (முக அழகு ஒப்பனை துடைப்பான்)
* Nail Polish Remover Wipes (நகப்பூச்சு அகற்றும் துடைப்பான்)
* Optical Lens Clening Wipes (மூக்குக் கண்ணாடி, கமராவில்லை, கணினி திரை துடைப்பான்)

முக்கிய குறிப்பு: அழகு சாதன விற்பனை நிலையங்கள், அழகு கலை நிபுணர்கள், மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையங்கள், கணினி விற்பனை நிலையங்கள் என்பவற்றுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்க- K. நிரஞ்சன்/ 0776139307

### சந்தைப்படுத்தும் பிரதிநிதி தேவை

இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் தங்களது சுயவிவரக்கோவை மற்றும் அனுபவங்களை இணைத்து ஒரு கிழமைக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

K. நிரஞ்சன், 15/2, ஒடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.



## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



### சிவபாதம் நந்தகுமார்

வணிகத்துறையின் நல்லாசானாய் வடமராட்சி கிழக்கின் கோட்டக் கல்விப் பணிப்பாளராய் வடமராட்சி கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராய் தன்னலமற்ற அர்ப்பணிப்பு சேவையுடன் படியுயர்ந்து வடமராட்சி கிழக்கு மீள்குடியேற்ற பாடசாலைகளின் அபிவிருத்தியில் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டு எமக்கு பல பௌதீக வளங்களையும் பெற்றுக் கொடுக்கக் காரணமாய் இருந்து, தற்போது வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராய் பதவி உயர்வு பெற்றிருக்கும் சிவபாதம் நந்தகுமார் அவர்களை மேலும் பல உயர்வுகள் பெற்று உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி கிழக்கு மீள் குடியேற்ற பாடசாலை அதிபர்கள்

க.சந்திரமோகன், சி.ஜெயந்திரன், வீ.இந்திரலிங்கம்
நா.கண்ணதாசன், செ.ஸ்ரீஇராமச்சந்திரன், வே.புவனேந்திரராஜா
க.பாஸ்கரன், த.செல்வகுமார், தே.கிருபநாதன்
த.யோகலிங்கம், வ.நிம்மதிராஜா
(சி-6464)
(1,6,9)

# மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் 2016 விகாரைகள் மூடப்பட்டனவாம்

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் 2016 புத்தவிகாரைகள் மூடப்பட்டுள்ளன. 940 பிக்குமார் காவி உடைகளைக் களைந்துள்ளனர்.இந்த நிலைமை தொடர்ந்தால் நாட்டில் புத்த தரிசனம் கேள்விக்குறியாகி விடும்.'' என்று எச்சரிக்கை விடுக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான காமினி ஜயவிக்கிரம பெரேரா.

நேற்று நாடாளுமன்றில் பௌத்த சாசன மத அலுவல்கள் மற்றும் கலை கலாசார அலுவல்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான நிதி நிலை விவகாரத்தில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

**புத்தரின் கண்களை தோண்டுகின்றனர்**

"இந்த அரசு பல கோடி ரூபாக்களைச் செலவிட்டு புத்தரின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகின்றது.

அதேவேளை, நமது பிக்குமார் ஒரு வேளை தானத்தையும் காவி உடையையும் பெற முடியாமல் அவலப்படுகின்றனர். இதனால் கடந்த ஆறு மாத காலத்தில் 940 பிக்குமார் தமது காவி உடைகளைக் களைந்து எறிந்துவிட்டனர்.

புதையல் தோண்டுகின்றோம் என்று கூறிக் கொண்டு விகாரைகளை உடைத்து புத்தரின் கண்களையும் தோண்டி எடுத்துள்ளனர்.

**விவகாரத்து வழக்குகள் அதிகரிப்பு**

இன்று நாட்டில் பெரும் கலாசாரப் பேரழிவு ஏற்பட்டுள்ளது. நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்குகள் அதிகரித்துள்ளன. ஞாயிறு தினங்களில் ரியூசன் வகுப்புகளுக்கு செல்வதாகக் கூறிவிட்டு பிள்ளைகள் தவறானவழிகளில் சென்று சீரழிகின்றனர். எனவே ஞாயிறு தினங்களில் ரியூசன் வகுப்புக்களைக் கட்டாயமாகத் தடை செய்ய வேண்டும்'' என்றும் காமினி ஜயவிக்கிரம பெரேரா வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

**நாடாளுமன்ற ஒலிவாங்கிகளுக்குக் காய்ச்சல்**

சபை கூடிய வேளையில் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க முக்கியமான ஒரு விடயத்தை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அதாவது '' நாடாளுமன்றின் பத்திரிகையாளர்கள் கலரியில் உள்ளவை உட்பட சகல ஒலி வாங்கிகளுக்கும் அடிக்கடி காய்ச்சல் வந்து விடுகின்றது.திடீர் திடீர் என ஒலி வாங்கிகள் செயல் இழந்து விடுகின்றன. இவை சீர் செய்யப்பட வேண்டும்'' என்று பிரதி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்தார் பிரதி சபாநாயகர்.

**ஊழியர் சேமலாபநிதிப் பணம் தனியார் வங்கிகளில் முதலீடு**

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் புத்திக்க பத்திரண நிதி திட்டமிடல் அமைச்சரிடம் மத்திய வங்கியின் நிதி தொடர்பான கேள்வியை எழுப்பினார். அதாவது '' இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்படும் நிதியைக்கொண்டு தனியார் வங்கிகளில் பங்குகள் கொள்வனவு செய்யப்படுவது உண்மையா?

சில தனியார் வங்கிகளில் பணிப்பாளர் சபைக்கு அரசுடன் தொடர்புடையவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். என்பது சரியா? என்று புத்திக்க பத்திரண அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இக் கேள்விகளுக்குப் பதில் அளித்த பிரதி நிதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன.

''வங்கிகள் சட்டத்தின் படி தான் அனைத்தும் நடக்கின்றன. வங்கிச் சட்டங்கள் மீறப்படவில்லை'' என்று கூறினார். அமைச்சர், பத்திரண எழுப்பிய இடைக் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த போது ஊழியர் சேமலாபநிதி தனியார் வங்கிப் பங்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

**கூச்சல் குழப்பங்கள் இல்லாத விவாதம்**

நேற்றுச் சபையில் வழமையாகக் காணப்படும் கூச்சல் குழப்பங்கள் காணப்படவில்லை.

பௌத்த சாசனம் மற்றும் மத விவகார, கலை கலாசார அமைச்சுகளுக்கான விவாதம் என்பதால் அமைதியாக இருந்து விட்டனர் போலும்.

**தயாசிறி - அஸ்வர் லடாய்**

பௌத்த சாசனம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கும் ஆளும்கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வருக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன இடையில் பிரதிநிதி அமைச்சர் கீதாஞ்சலி குணவர்த்தனவும் இணைந்து கொண்டார்.

"புத்தரின் 2600 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றோம். ஆனால் நாட்டில் சூதாட்டமும், மது உற்பத்தியும் பத்து மடங்கு அதிகரித்துள்ளது. சூதாட்ட மையங்கள் அரசியல் வாதிகளின் அனுமதியுடனேயே நடைபெறுகின்றன.''

என்று கூறிய தயாசிறி பௌத்த விகாரைகளிலும் சம்மேளனங்களிலும் இடம்பெறும் தவறுகளையும் சுட்டிக் காட்டினார்.

இந்த வேளையில் அமைச்சர் கீதாஞ்சலி குணவர்த்தன இடையூறு செய்தார். எனினும் இடைவிடாது பேச்சைத் தொடர்ந்தார் தயாசிறி.

**மெலிபன் நிறுவனத்தில் பிஸ்கட் திருடியவர்**

தொடர்ந்து ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம் அஸ்வர் ''ஒழுங்குப் பிரச்சினை'' என்று எழுந்தார். '' நீங்கள் கூறுவது ஒழுங்குப் பிரச்சினை அல்ல''




என்று கூறி பேச இடமளிக்க மறுத்து விட்டார் பிரதி சபாநாயகர் அவர்களுக்கு( மைக்) ஒலி வாங்கி கொடுக்கப்படாததனால் அஸ்வர் என்ன கூறினார் என்பது கேட்கவில்லை. ஆனால் ஆத்திரமடைந்த நிலையில் தயாசிறியை நோக்கி ஏதேதோ கூறியதை அவதானிக்க முடிந்தது.

இதனால் கொதிப்படைந்த தயாசிறி '' ஐயா! மெலிபன் பிஸ்கட் திருடியதால் தூக்கி எறியப்பட்டவர் இங்கு வந்து பௌத்த சாசனம் பற்றி பேசுகின்றார்..

என்று கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதி சபாநாயகர் தயாசிறியின் நேரம் முடிந்து விட்டதால் பேச்சை முடிக்கும் படி அறிவித்தார்.

''பிரதி சபாநாயகரே இந்த புத்தளம் கழுதை கத்திக் கத்தி இடையூறு செய்ததால் நான் பேச வந்ததைக்கூட பேச முடியாமல் போய்விட்டது'' என்று கூறியதோடு, ''மேடையில் கிரிக்கெட் வர்ணனை செய்வது போல் அல்ல சபையில் பேசுவதற்கு மிகவும் அவதானம் தேவை'' என்று கூறி பேச்சை முடித்தார். தயாசிறி ஜயசேகர.

**மின்சக்தி அமைச்சோ மின்சார சபையோ?**

மின்கட்டணத்தை அதிகரிக்க முடியாது வழக்கமாக நிதி மற்றும் முதலீடுகள் தொடர்பான கேள்விகளை எழுப்புபவர் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று எரிபொருள் மின் சக்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவிடம் ஒருகேள்வியை எழுப்பினார்.

''இலங்கை மின்சார நிறுவனமான லெக்கோ(LECO) நிறுவனம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தின் அளவு எவ்வளவு? அது எந்த விதத்தில் மக்களுக்குப் பயன்படுகிறது? இந்த லெக்கோ மின் உற்பத்தி நிறுவனம் அடைந்துள்ள இலாபம் எவ்வளவு? என்று கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க பதில் அளித்தார்.

''லெக்கோ நிறுவனம் கடந்த 2010 ஆம் ஆண்டில் 605 மில்லியன் ரூபா நட்டம் அடைந்திருந்த போதும் 2011 ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் இலாபம் ஈட்டியுள்ளது. நாட்டு மக்களுக்குத் தேவையான மின் விநியோகத்தில் பத்து வீதம் லெக்கோ நிறுவனத்தால் வழங்கப்படுகிறது'' என்றார் அமைச்சர்.

தற்பொழுது இலாபம் ஈட்டும் நிறுவனமாக இயங்கும் 'லெக்கோ' நிறுவனம் மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது அது உண்மையா? என இடைமறித்துக் கேட்டார் ரவி கருணாநாயக்க.

''இல்லை! மின்சக்தி அமைச்சோ அல்லது மின்சார சபையோ தன்னிச்சையாக மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கமுடியாது. மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதி பெற வேண்டும்'' எனப் பதில் அளித்தார் அமைச்சர் சம்பிக்க.

**மூன்று, நான்கு மதங்கள் அனைவரும் இலங்கையர்**

இந்த விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய பிரதமர் இனம், மதம், மொழி அடிப்படையில் பிளவுகளை ஏற்படுத்தக்கூடாது. அனைவரும் இலங்கையர் என்ற உணர்வுடன் ஒன்று பட வேண்டும்-என்றார்.

ஒவ்வொருவரும் தமது மதங்களை மதிப்பது போல் அடுத்தவர்களின் மதங்களையும் மதிக்க வேண்டும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்'' என்றார் பிரதமர்.

காலையில் இருந்து அமைதியாக நடைபெற்ற விவாதம் மதிய போசன இடைவேளைக் குப்பின் சூடுபிடித்தது. நெஞ்சாலைகள், கப்பல் துறை முகங்கள் அமைச்சு தொடர்பான விவாதம் என்பதால் பாதையில் எப்படி நெரிசலோ அப்படியே சபையிலும் கூச்சலும் இரைச்சலும் மண்டிக்கிடந்தது.

**துறைமுகத்தில் பெரும் பாறை உடைப்பதற்கு 1400 கோடி**

நேற்றைய விவாதத்தின் போது பெரிதும் விமர்சிக்கப்பட்டது அம்பாந்தோட்டை துறைமுகம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் 50 மீற்றர் நீளம் 70 மீற்றர் அகலமான ஒரு பாறை இருக்கின்றது. இது கப்பல்கள் நுழைவதற்கு தடையாக இருக்கின்றது. இதனை உடைத்து அப்புறப்படுத்த 1400 கோடி ரூபா தேவைப்படுகின்றது என்று முன்னர் கூறிய துறைமுக அதிகார சபையின் தலைவர், அங்கே இருந்தது ஒரு சிறிய கல்தான் அதனை உடைத்து விட்டோம் என்று இப்போது கூறுகின்றார். பாவம் இந்த அதிகாரி அரசியல் வாதிகள் பொய் பேசுவது போல் பொய் பேச ஆரம்பித்து விட்டார்'' என்று சாடினார் தயாசிறி ஜயசேகர.

**ஓட்டோவிலை அதிகரிப்பின் மர்மம்**

இப்பொழுது (ஓட்டோ) முச்சக்கரவண்டியின் பெறுமதியை 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கூறிய தயாசிறி ஜயசேகர அதற்கான காரணத்தையும் போட்டு உடைத்தார்.

அதாவது ''முச்சக்கரவண்டிகளின் உதிரிப்பாகங்கள் அம்பாந்தோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே பொருத்தப்பட்டு மீண்டும் கொழும்புக்கு கொண்டுவரப்படுகின்றது. இது ஏன் ஐயா! கொழும்பில் இதனை செய்திருந்தால் செலவும் மிஞ்சும் பலருக்குத் தொழில் வாய்ப்புக்களையும் வழங்க முடியும் அல்லவா? இதுதான் மஹிந்த சிந்தனையா' என்று முடித்தார் தயாசிறி ஜயசேகர.

(உ-02)

# மீண்டும் ஒரு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கும் உலகம்!

## 2012இல் இருமடங்காக இருக்குமென ஐ.நா எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.3

உலகப் பொருளாதார வளர்ச்சி 2012 இல் மேலும் மந்தநிலையை அடைந்தால் மீண்டும் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் உலகம் சிக்கிவிடும். பற்றாக்குறையிலிருந்து கடந்த ஆண்டு மீண்ட இந்தியா, சீனா போன்ற நாடுகளும் வீழ்ச்சி யடைந்துவிடும் என ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது.

2012ஆம் வருடம் உலகப் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில், 'ஆக்குதல் அல்லது அழித்தல்' என்ற வருடமாக அமையும். பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும். மந்தகதி வளர்ச்சி நீடிக்கும் என ஐ.நா. வெளியிட்டுள்ள 'உலகப் பொருளாதார நிலவரமும், எதிர்பார்ப்புகளும் 2012' என்னும் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

உலகப் பொருளாதார நெருக்கடியில் ஏற்பட்டுள்ள பீடைகளிலிருந்து மீள முடியாமல் தவிப்பில் சிக்குண்டுள்ள உலகம் மீண்டுமொரு பாரிய நெருக்கடியின் விளிம்புக்குள் தள்ளப்படலாம். முன்னைய நெருக்கடியின் தாக்கத்தை விட இதன் தாக்கம் இருமடங்குகளாக இருக்கக்கூடும் என்றும் ஐ.நா. மேலும் குறிப்பிட்டுள்ளது.

வேலையில்லா நெருக்கடிகள், உள்நாட்டு கடன் சுமைகள் ஆகியவற்றுக்குத் தீர்வு காண்பதில் ஐரோப்பிய, அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் தோல்வி கண்டுவிட்டார்கள். இந்து நொடிந்து போயுள்ள நிதித்துறைகளைக் கட்டி எழுப்புவதிலும் அவர்கள் வெற்றி பெறவில்லை. அதனால், 2012 - 2013 வரையிலான நெருக்கடியிலிருந்து மீட்சிப்பெற பகீரதப்பிரயத்தனம் தேவைப்படும் என்றும் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

இந்தியா, சீனா போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும் 2012இல் 5.6 சதவீதம் வீழ்ச்சியடையும் என்றும் ஐ.நா. மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(ஒ-சி)




## கைதடி- மானிப்பாய் வீதிக்கு 'காப்பெற்'

யாழ்ப்பாணம், டிசெ.3

கைதடி, மானிப்பாய் வீதியை ''காப்பெற்' வீதியாக மாற்றியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் ஏற்பாட்டில் இந்த வீதியைப் புனரமைக்கும் பணிகள் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்த வீதியைக் 'காப் பெற்' வீதியாக மாற்றியமைப்பதற் கான ஆரம்ப கட்டப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கைதடிச் சந்தியில் இருந்து மானிப்பாய் சந்தி வரையான வீதியில் இருக்கும் பாலங்கள் புனரமைப்புச் செய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

(த-26)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.3

புனர்வாழ்வு அதிகார சபையினால் புனர்வாழ்வு பெற்றவர்களுக்குக் கடன் வழங்குவது தொடர்பாக நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவிருந்த கூட்டம் டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையின் ஆணையாளர் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்துள்ளார்.

(த-207)

## தபாலக ஊழியர்களுக்கு சீருடை

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ். பிரதம செயலக ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டுக்கான சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் சீருடைகள் வழங்குவதற்குத் துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தபால் விநியோகப் பணியாளர்களுக்கான இந்தச் சீருடை வருடந் தோறும் வருட இறுதியில் வழங்கப்படுவது வழக்கம். அதே போல் இந்த முறையும் இந்தச் சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

(த-26)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 11 . 1937



உதிர்வு 14 . 12 . 2010

அமரர் **சங்கரப்பிள்ளை நடராசா**

(முன்னாள் ஊழியர்,புகையிரத திணைக்களம்)

ஓராண்டாகியும் உறவுகள் நாம்கதறுகின்றோம்
எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்
விளங்கிய எமதருமை அப்பாவே
உமது அன்பான பார்வையும்
கனிவும் எமது நெஞ்சை விட்டகலாது.

(11090)(6,8,9)

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

அன்புடன் தவிக்கும்
மனைவி , பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### 10 ஆம் ஆண்டு நினைவு

அன்னை மடியில்:
20.08.1923

மாயவன் அடியில்:
23.11.2001

திதி: 03.12.2011



**அமரர் முத்தையா சதானந்தன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ ஹாட்லிக் கல்லூரி,
அறங்காவலர் ஓதுவார் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்)

பத்தாண்டுகள் கடந்தாலும்
வற்றாது உமது அன்பு
பாடித் தொழுத பாசுரங்கள் - எம்
ஊனச் செவிகளில் ஒலிக்குதையா
அருவமாய் எம்முடன் நடமாடியதை
ஆனந்தமாய் உணர்ந்து உருகுகின்றோம்

கற்கோவளம் (சி-6475) (1,6,9)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

### வீடு தேவை

K.K.S வீதியில் அல்லது அண்மிய தூரத்தில் மல்லாகம் தொடக்கம் இணுவில் வரை வீடு சிறிய குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்கு தேவை. ரூபா. 10000/= (பத்தாயிரம்) வரை மாதவாடகையும் முற்பணமும் தரப்படும்.
தொடர்பு: 0771393670, 0770440570

### மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.10.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப் படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01 | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும். | 18.12.2011 மு.ப.8.30 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 02. | காங்கேசன்துறைக்கிளையும், மல்லாகம் சேவை நிலையமும். | | |
| 03. | யாழ்பிரதான வீதிக்கிளையும், உரும்பிராய் சேவை நிலையமும். | | |
| 04. | நெல்லியடி | | |
| 05. | அச்சுவேலி | | |
| 06. | சங்கானைக்கிளையும், பண்டத்தரிப்பு சேவை நிலையமும். | | |
| 07. | சுன்னாகக்கிளையும், கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 08. | சாவகச்சேரிக்கிளையும்,கொடிகாமம் சேவை நிலையமும். | | |
| 09. | வல்வெட்டித்துறை | | |
| 10. | யாழ்.பல்கலைக்கழகக்கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும். | | |
| 11. | யாழ்.கன்னாதிட்டிக்கிளையும், இணுவில் சேவை நிலையமும். | | |
| 12. | பருத்தித்துறைக்கிளையும்,புலோலி சேவை நிலையமும். | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

2011.12.02

(சி/6473)(3,6,9)

என் நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் இருக்கும்படி நான் இதைத் தெரிந்து கொண்டு பரிசுத்தப்படுத்தினேன். என் கண்களும், என் இதயமும் எந்நாளும் இங்கே இருக்கும். (2 நாளாகமம் 2:16)

### ஆலயக் கட்டடத் திறப்பு விழாவும் பிரதிஷ்டை ஆராதனையும்

CHURCH OF CHRIST

**இடம் :** மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.

**திகதி :** இன்று (03.12.2011) சனிக்கிழமை பி.ப 4.00 மணி

இலங்கை, இந்தியா, லெபனான், சைப்பிரஸ், யோர்தான், இஸ்ரேல், ஜேர்மனி, அபுதாபி, டுபாய், சார்ஜா, உம் அல் குயினா போன்ற நாடுகளில் அமைந்துள்ளCHURCH OF CHRIST. சபைகளின் தலைமைப் போதகரும் I.C.M Ministry ஸ்தாபகருமாகி Rev.Daniel அப்போஸ்தலரும், தீர்க்கதரிசியும் தலைமை தாங்கி நடத்துவார்.

இந்தப் பிரதிஸ்டை ஆராதனையில் அனைத்துத் திருச்சபைத் தலைவர்கள், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் அனைவரும் வருகை தந்து ஆசீர்வாதம் பெறும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

T.P no: 021 222 6821
International Chirstian Mission Ministry
www.icmmworld.com
E -Maill icmms&hotmail.com

(1124)(3,6,9)

தகவல்:
I.C.M.M நிர்வாகம்,

# சரியாகச் செய்தார்களா?



பக்கத்து வீட்ட ஒரே கலவரமாய் கிடந்ததால் எட்டிப் பார்த்தேன். அந்த வீட்டில போற வயதில ஒரு பாட்டி இருந்ததால ஏதாவது நடந்திட்டோ என்று பார்த்தேன். அங்க கொஞ்சப் பேர் நின்று பக்கத்து வீட்டுக்காரரிட்ட கேள்வி கேட்க இவை பதில் சொல்லிக் கொண்டு நிக்கினம். அதில நிண்டதில எனக்கு படிப்பிச்ச ஒரு சேரும் நின்றவர். அப்பதான் எனக்கு விளங்கிச்சுது, இவை ஏதோ கணக்கெடுப்பு நடத்தினம் எண்டு. அப்ப அடுத்ததாய் எங்கட வீட்டை வரத்தானே போயின. எனக்கு படிப்பிச்ச வாத்தியார் வாறதால அவருக்கு 'ரீ ' குடுக்கிறதுக்கு அம்மாவை ரெடி பண்ணச் சொன்னன்.

பதிவுக்குத் தேவையான ஆவணத்தையும் எடுத்து வைச்சிட்டு பாத்திருந்தா அவைய காணேல்ல. என்ன நடந்தது ? தங்கட வீட்டயிருந்து வெளிக்கிட்டு பத்து நிமிசமாச்சு எண்டு பக்கத்து வீட்டுக்காரர் சொல்லிச்சின. வெளியில மற்ற வீடுகளை எட்டிப் பார்த்தால் அங்கேயும் காணேல. நேரம் 5 மணியா போச்சுது, அதான் அவை போட்டின போல நாளைக்கு வருவினதானே எண்டு இருந்தால், அதுக்குப் பிறகு அவையை காணேல. அவை எங்கட வீட்ட வரவேயில்ல. பேப்ரில பாத்தா வீடு வீடாய் போய் ஆசிரியர்கள் பதிவுகள் மேற்கொண்டு முடிவடைந்து விட்டது என்ற தகவல்தான் தெரிந்தது. அப்படியாயின் எங்கட வீட்டில இவை வரமாய் என்னெண்டு கணக்கெடுத்தவை ?

என்னத்துக்காண்டி கணக்கெடுக்கிறம் எண்டு தெரியாமைத்தான் எங்கட வாத்திமாரும் கணக்கெடுத்தவை. அப்ப அவை அவங்களுக்கு கணக்கு விடுவினதானே ?

*********************

கவுண்டமணி, சாப்பிட அடம்பிடிக்கும் ஒரு பிள்ளையிடம் போய் நீ சாப்பிட வேணும், இல்லாட்டி அதை நான் சாப்பிட்டு விடுவேன் என்று சொல் அந்த பிள்ளையும் பயத்தில் அதைச் சாப்பிடும். இதைப் பார்த்துக் கொண்டிருந்த செந்தில் தாய்ப்பால் குடிக்க அழுது கொண்டிருக்கும் பிள்ளையிடம் சென்று, நீ பாலைக் குடிக்காவிட்டால் நான் குடித்து விடுவேன் என்று சொல்லி ஊராரிடம் அடிவாங்கிய கொமடி பலருக்கு ஞாபகம் இருக்கும்.

அதே போன்று தான் இலங்கை அரசாங்கமும் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அமைகின்றன. ஏதாவது ஒன்றுக்காக திரட்டப்படும் தகவல்களை இன்னொரு தேவைக்காகப் பயன்படுத்தும் போது மேற்சொன்ன நகைச்சுவையில் ஏற்பட்ட குளறுபடியே ஏற்படும்.

கடந்த ஜூலை மாதம் இலங்கையின் வடமாகாணத்தில் விசேட கணக்கெடுப்பு நடவடிக்கைகள் இலங்கை சனத்தொகை புள்ளிவிவரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பத்து வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் சாதாரண கணக்கெடுப்புக்கு மேலதிகமாகவே இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

என்ன காரணத்துக்காக இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறதென்பது புரியாத புதிராகவே இருந்தது. இருப்பினும் இந்தக் கணக்கெடுப்பில் ஈடுபடுபவர்களுக்கான தங்குமிட வசதிகளை இராணுவத்தினர் ஏற்படுத்திக் கொடுத்தமை போன்ற சில விடயங்களால் அப்போதே மக்கள் மத்தியில் இந்தக் கணக்கெடுப்பு தொடர்பில் பலத்த சந்தேகங்கள் இருந்தன.

மேலும் இந்த கணக்கெடுப்புக்காக தயாரிக்கப்பட்ட படிவத்தில் கேட்கப்பட்ட கேள்விகளும் மக்களது சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போன்றே இருந்தது. சாதாரண கணக்கெடுப்பில் கேட்கப்படும் கேள்விகளுக்கு மேலதிகமாக தொடுக்கப்பட்ட கேள்விகள் அதிலும் குறிப்பாக முன்னாள் போராளிகள், மற்றும் காணாமற் போனோர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகள் தமிழ் மக்களுக்கு விரோதமாகவே இருந்தது.

இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த சந்தர்ப்பத்தில் சனத்தொகை புள்ளி விவரவியல் திணைக்களத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவு திட்டத்தில் வடக்கிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுவது என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காகவே இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்வதாக அறிவித்தது. மேலும் விண்ணப்பப் படிவத்தின் முன்பக்கத்தில், இதிலுள்ள தனிப்பட்டவர்களது விவரங்கள் வெளியிடப்படமாட்டா என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு வடக்கில் இந்தக் கணக்கெடுப்பு பணிகள் மூன்று வாரகாலத்தினுள் ஆசிரியர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆசிரியர்களும் இந்த கணக்கெடுப்பினை சரியாகச் செய்தார்களா என்பது கேள்விக்குறியே ? ஏனெனில் பலரது வீட்டுக் கதவுகளை ஆசிரியர்கள் தட்டவில்லையென்பது மக்களுக்குத் தெரியும். மேலும் ஆசிரியர்களுக்கு மக்கள் உண்மையான தகவல்களை வழங்கினார்களா? விண்ணப்பப் படிவத்திலிருந்த சில வினாக்கள் மிகவும் கடுமையானதுடன் மக்கள் அவற்றுக்கு அச்சத்துட னேயே - பதிலளித்தால் என்ன ஆகுமோ - என்ற மனப்பயத்துடனுமே பதிலளித்தார்கள். பதிலளிக்கும் போதும் கேள்விகளை கேட்கும் அரசு அதிகாரிகளுக்கு - அரசுக்கு - சார்பாகவே பதிலளித்தனர். இதன் மூலமா வது தமக்கு விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இதனை அவர்கள் தெரிவித்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் அரைகுறையாக கணக்கெடுப்பு பூரணமாக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டும் விட்டது.

எல்லாம் முடிவடைந்த நிலையில் இப்போதுதான் அந்த விசேட கணக்கெடுப்பு என்ன காரணத்துக்காக மேற்கொள்ளப்பட்டது என்பது வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்துள்ளது.

' உதயன், சுடர் ஒளி' நாளிதழ்களுக்கு கோத்தபாய ராஜபக்ஷ வழங்கிய செவ்வியில் இந்த விடயத்தை தனது வாயாலேயே நேரடியாகக் குறிப்பிட்டிருக்கின்றார். அதிலே, ' சிவிலியன்களை பெயரடிப் படையில் எம்மால் தேடிப்பார்க்க முடியும். இதை ஒரிரு நாள்களில் செய்ய முடியாது. *சனத்தொகை புள்ளி விவரத் திணைக்களத்தினூடாக நாம் சில வேலைகளைச் செய்திருக்கிறோம்.*

சண்டை இடம்பெற்ற காலப் பகுதியில் அங்கிருந்த சனத்தொகை என்ன?, அதில் இறந்தவர்கள் யார்?, வெளிநாடு சென்றவர்கள் யார்?, போன்றவற்றை நாங்கள் பெற்றுள்ளோம். பெற்ற துடன் *காணாமற் போனவர்கள் யார் என்பதை பெயர் ரீதியாக அடையாளம் கண்டுள்ளோம்.* காணாமற் போனவர்கள் எப்படி காணாமற் போனார்கள் ? என்பதை காண விழைகிறோம்.

........ சண்டையில் புலிகள் இயக்க உறுப்பினர்களும் இறந்திருக்க வேண்டும் அப்படியொரு எண்ணிக்கையானோர் இறந்திருப்பார்கள் அல்லவா ?

அப்படியாயின் காணாமற் போனவர்கள் என்று எமது பட்டியலில் இருப்பவர்களில் சண்டையில் இறந் தோரும் இருந்திருக்க வேண்டும் அல்லவா ? இந்த அடிப்படையில் நாம் செய்த ஆய்வுகளை நோக்கி னால் சிவிலியன்கள் உயிரிழப்பு என்பது மிகக் குறைந்த வீதத்தில்தான் இருக்கும் '

இதே விடயத்தை மீண்டும் கோத்தபாய அண்மையில், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில், அரசு ஏற்பாடு செய்திருந்த நல்லிணக்கம் தொடர்பான தேசிய கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

'வடக்கிலுள்ள அரசு அதிகாரிகள் இந்த கணக்கெடுப்பை மேற்கொண்டுள்ளனர்'

இந்த விடயம் இப்போதுதான் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இருப்பினும் இந்த விடயத்தை இன்னத்துக்காகத்தான் செய்கின்றோம் என்று வெளிப்படையாகச் சொல்லிவிட்டு செய்திருக்கலாம். மக்களும் வீணாகக் கலவரப்பட்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. அத்துடன் ஆசிரியர்களும் சரியான முறையில் கணக்கெடுப்பை செய்து முடித்திருப்பர்.

எல்லாம் முடிந்ததன் பிற்பாடு இப்போதுதான் பாதுகாப்பு அமைச்சின் செயலர் விடயங்களை போட்டு உடைத்திருக்கின்றார். தங்களால், சர்வதேச நாடுகளின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிப்பதற்காகவே வட மாகாணத்துக்கு மட்டும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

தவறான தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட அறிக்கை சர்வதேசத்துக்கு வழங்கப்படுவதற்கு தயாராகி விட்டது. உண்மையில் வடக்கில் சகல இடங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதா? அல்லது மக்கள் சகல கேள்விகளுக்கும் உண்மையான பதிலை வழங்கினார்களா? என்னத்துக்கு என்று தெரியாத கணக்கெடுப்பில் எப்படி உண்மையிருக்கும்.

இதனைவிட புள்ளிவிபரவியல் திணைக்களம் தம்மதால் திரட்டப்படும் தகவல்களின் அறிக்கைகளே

**தில்லாலங்கடி**

வெளியிடப்படும். தனிநபர்களின் விவரங்கள் ஒரு போதும் வெளியிடப்படமாட்டா. இரகசியம் பேணப்படும் என்றெல்லாம் கூறி கணக்கெடுப்பை மேற்கொண்டது. ஆனால் அதையெல்லாம் தலைகீழாக்கி அறிக்கையில் தனிப்பட்டவர்களது விவரங்களையெல்லாம் கோத்தாவின் காலடியில் சமர்ப்பித்திருக்கின்றது சனத்தொகை புள்ளிவிவரத்திணைக்களம். தமது கொள்கையை மீறி அரசுக்கு சார்பாகச் செயற்பட்டிருக்கின்றது.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு ஒளித்து மறைத்து செய்ய வேண்டியது ஏன்? தவறான தகவல்கள் சர்வதேச சமூகத்துக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டு அரசு இவ்வாறு செய்திருக்கின்றது. இதைப் போன்றே சகல விடயங்களிலும் இலங்கை அரசு ஒளித்து மறைத்து உண்மையைச் சொல்லாமல் தமிழருக்கு எதிராகச் செயற்படுகின்றது.

எனவே இலங்கை அரசு ஒரு போதும் தமிழருக்கு நியாயமான முறையில் செயற்படாது என்பது மட்டுமே நிதர்சனமான உண்மை. ✱

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (6)

### பிறப்பு எண் 1 விதி எண்6

கலைகளில் ஆர்வம் மிக்கவர்கள் மற்ற எண்காரர்களை விடவும் மிடுக்கான தோற்றமும் பார்வையுமுடையவர்கள். நேர்மை, நல்ல பெயர், நல்ல பல நட்புகளையும் பெற்றிருப்பார்கள். லாப நோக்கத்திலேயே எக்காரியத்தையும் செய்வார்கள். நல்ல வாழ்க்கைத்துணை அமையும் சுதந்திரப் பிரியர்கள். குழந்தைகள் மீது பாசமுடையவர்கள். மற்றவர்கள் சொல்வதை நம்பாமல் தீர விசாரித்து தமது மனம் கூறும் அறிவுரைப்படியே நடந்து கொள்வார்கள்.

எதையும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள். எந்த மொழியானாலும் அழகாகவும், அழுத்தமாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும் பேசும் திறன் படைத்தவர்கள்.

பிறருடைய ஒத்துழைப்பை விரும்பாமல் தாமாகவே முயற்சிகள் செய்து பணம், பதவி, புகழ் அனைத்தையும் அடைவார்கள். சொற்பலம் மிக்கவர்கள். வீண்பேச்சை விரும்பமாட்டார்கள். பொதுவாழ்வில் நாட்டமுடையவர்கள். தான தர்மங்கள் நிறையச் செய்வார்கள்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1,10,19,28,6,15,24

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பச்சை, வெளிர்பச்சை.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஓபல், அக்கோமரின் மரகதம், பெரில், சூரியகாந்தக் கல்.

### பிறப்பு எண் 1 விதி எண் 7

நல்ல ஞானமும், சிந்தனை செய்யும் சக்தியும் மிக்கவர்கள். கொள்கைப் பிடிவாதமிருக்கும். தெய்வீக நம்பிக்கை அளவுகடந்து இருக்கும். ஆடம்பரத்தை விரும்பாதவர்கள். இரக்க குணம் மிக்கவர்கள். எதையும் பல்வேறு கோணத்தில் ஆராய்ந்து பார்த்து முடிவெடுப்பார்கள். யாரையும் எளிதில் நம்ப மாட்டார்கள். இளகிய மனமுடையவர்கள்.

கடுமையான உழைப்பாளிகள். உறுதியான கருத்து உடையவர்கள். வெற்றி பெறுவதையே கருத் தாகக் கொண்டவர்கள். பலமுறை யோசித்தே முடி வெடுப்பர். தொழிலை மாற்றி மாற்றிச் செய்யும் பழக்க மிருக்கும். அரசாங்கத்தில் நேர்மையுடன் உயர்ந்த பதவிகளை வகிப்பார்கள்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

10,19,28,6,15,24

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பொன்னிறம், பச்சை.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், முத்து, கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஓபல், சந்திரகாந்தக்கல், ஜேட் , சூரியகாந்தக் கல். டைகர்ஸ் ஐ, வைடூரியம்.

### பிறப்பு எண் 1 விதி எண் 8

பொதுக் காரியத்தில் முன்னின்று எப்பேர்ப்பட்ட தியாகத்தையும் செய்யத் தயங்க மாட்டார்கள். எதையும் துணிச்சலுடன் செய்து பலரது பாராட்டையும் பெறுவார்கள். கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். மனபலமும், உடல்பலமும் மிக்கவர்கள். சிக்கனமானவர்கள். செலவு செய்வதில் அதிகமான கட்டுப்பாடுகளுடன் நடந்து கொள்வார்கள். ஆன்மீக நாட்டம், கலைகளில் ஆர்வமிருக்கும். மற்றவர்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள். சுய முயற்சியால்



முன்னேறுவார்கள் பெண்களால் அதிர்ஷ்டம் உண்டாகும். பலதொழில் புரியும் அதிர்ஷ்டம் உண்டாகும். நன்மை, தீமைகளை ஆராய்ந்து பின்னர் நிதானமாகவே முடிவெடுப்பார்கள். தோல்விகளுக்கு அஞ்சமாட்டார்கள். பணவிடயத்தில் கண்டிப்புடன் நடந்துகொள்வார்கள். பலருக்கு உதவுவார்கள்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1,10,19,28,6,15,24,5,14,23,

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பொன்னிறம், நீலம்

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், சூரியகாந்தக் கல், இந்திர நீலம், அக்கோமரின், நீலக்கல்

### பிறப்பு எண் 1 விதி எண்- 9

தன்னம்பிக்கையும், உடல்பலமும் மிக்கவர்கள் சூரிய ஆதிக்கத்தில் மிகவும் தைரியமான மனிதர்கள் இவர்கள்தான். நேர்மையைப் பெரிதும் மதிப்பவர்கள் அநியாயம், அக்கிரமங்களைத் தட்டிக் கேட்பார்கள். பிறருடைய கட்டுப்பாட்டில் இருப்பது பிடிக்காது.

ஆண் , பெண் இருபாலருக்கும் நன்மை உண்டாகும். நட்பு பல நன்மைகளை செய்யும். முன்கோபிகள். கம்பீரமும், அழகும் இருக்கும். இவர்கள் சொல்லும் செயலும் மாறுபடாமல் இருப்பார்கள்.

சுதந்திரப் பிரியர்கள் முறையான வழிகளில் முன்னேறுவார்கள். வளமான வாழ்க்கை உண்டாகும்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1,10,19,28,6,15,24,9,18,27

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், செஞ்சிவப்பு, பொன்னிறம்,

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மாணிக்கம், பவளம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், சூரியகாந்தக் கல், கார்னட், பிளட்ஸ் டோன்.

### சூரிய ஆதிக்க அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்

சூரிய ஆதிக்கத்தினர் தங்கள் பெயரை அதிர்ஷ்டகரமானதாக்க சூரிய ஆதிக்க எழுத்துக்களையும், விதி எண் சார்ந்த எழுத்துக்களையும் சரியான முறையில் முரண்பாடு இன்றி சேர்த்துப் பெயரமைக்க வேண் டும். கீழ் கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக்கொண்டு வளமான அவசியமாக வாழ்க்கையைப் பெறலாம்.

1ஆம் எண் பெயர்கள் மிகுந்த அதிர்ஷ்டத்தை நல்கும். 10,19,37,46,55,82,73 போன்ற எண்களின் வரிசையில் பெயரமைக்கவும். நல்ல விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும். விதி எண் வழுவாக இருந்தால் விதி எண் சார்ந்த அதிர்ஷ்ட எண்ணுடைய பெயரை அமைக் கலாம்.

நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், புரிந்து கொண்டாலும், புரிந்துகொள்ளாவிட்டாலும் அதிர்ஷ்டப் பெயரும், துரதிஷ்டப் பெயரும் தங்களுடைய சக்தி அதிர்வுகளை வெளியிட்டுக் கொண்டு, ஒவ்வொரு மனிதனையும் அதன் சக்திக்கேற்ற வழிநடத்திச் செல்லும். அவரவருடைய பெயரானது அதிர்ஷ்டகரமாக இருந்தால் அதிர்ஷ்டமான அதிர்வுகளுடன் இயங்கங்கள் நடைபெற்று அனைத்தும் சுலபமாக இருக்கும். வாழ்க்கை வெற்றிகரமாக அமைந்துவிடும்.

**அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்**

| பிறப்பு எண் | கூட்டு எண் | அதிர்ஷ்டப் பெயர் எண் |
|---|---|---|
| 1 | 1 | 1,5,6,3 |
| 1 | 2 | 1,5,6 |
| 1 | 3 | 1,3,5 |
| 1 | 4 | 1,5,6 |
| 1 | 5 | 1,5 |
| 1 | 6 | 1,6 |
| 1 | 7 | 1,6 |
| 1 | 8 | 1,5,6 |
| 1 | 9 | 5,6 |

### எண் 2(சந்திரன்)
(சமுதாயச் சிற்பிகள்)

2 ஆம் எண் சந்திரனைக் குறிப்பதாகும். 2 ஆம் எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 2,11,20,29 போன்ற தேதிகளில் பிறந்தவர்களாவர். எந்தவொரு மாதமாக இருந்தாலும் மேற்கண்ட தேதிகளில் பிறந்தவர்கள். உலகில் உள்ள படைப்புக்களில் நல்லது, கெட்டது என்று இரண்டு இருக்கும் அதைப்போலவே சந்திர ஆதிக்கத்தினரின் நடவடிக்கையும் இரண்டு விதமாகவே இருக்கும்.

உலக இயக்கத்தைச் சார்ந்தே இவர்கள் இயங்குவார்கள். வெற்றிதோல்வி மாறி மாறி வரும். சுகம் துக்கம் இரண்டும் வரும். படைப்பின்போது ஒன்றாக இருந்து, இயற்கை மாற்றத்தால் இரண்டாக மாறியதால் நிலையில்லாத மனமுடையவர்கள். *(தொடரும்)*

# மனதில் குறை வராவிடில் வாழ்வு நிறைவே...

வாழ்க்கை விசித்திரமானது ''நாம் யார், என்ன செய்கின்றோம், நம் எதிர் காலம் என்ன எனத் தெரியாத விதியின் வட்டத்துக்குள் உழன்று கொண்டிருக்கின்றோம். இயற்கையின் மனித குலப் படைப்பின் போது நோய், யுத்தத்தின் விளைவு, விபத்தின் விளைவு வேறு சில சம்பவங்களின் விளைவாக பகுதியளவாக அல்லது முழுமையாக உடல் உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்ற/ அவயவங்களை இழக்கின்ற ஒரு நிலையிலேயே ஒருவர் வலுவிழந்தோர் ஆகின்றார். இவ்வாறு வாழ்வு பாதிக்கப்பட்டு தினமும் உடல், உளதாக்கத்துக்குட்பட்டு எதிர் காலம் கேள்விக் குறியாக்கப்பட்டு ஏராளம் பேர் வாழ்கின்றார்கள். ஆனால் அவர்களின் மனதில் ஊனம் ஏற்படாதவரை வலுவற்றவர்களால் இவ்வுலகில் சாதனைகளும் பல நிகழ்த்த முடியும்.

ஒரு வாசல் மூடி மறுவாசல் திற[illegible] இறைவன் என்பார்கள் பெரியோ[illegible] எம் சமூகத்தில் வாழும் வலு[illegible] மக்களை எத்தனை பேர் பழிக்கி[illegible], கேலிக்கைக்குரிய பொருள்களாகப் [illegible]றோம். அவர்கள் சமூகத்தில் ஒரு[illegible] தில் வாழும் உரிமை சந்தோ[illegible] அனுபவிக்கும் மனநிலையும் அ[illegible]மும் உண்டு. அவர்களும் உணர்வு[illegible], உயிருள்ள மனித ஜீவன்களே. கை, கால் நன்றாக உள்ள ஒரு சாதாரண மனிதன் சமூகத்துக்கு பல்வேறு தீங்கிழைக்கின்றான். உண்மையில் அவனே ஊனமுற்றவன். மற்றவர்களுக்கு தீங்கிழைக்கின்ற, கொடுமை செய்கின்ற மனதளவிலும், உடலளவிலும் மற்றவர்களைத் துன்புறுத்து கின்றவனோ அவனே ஊனமுற்றவனாகின்றான்.

சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் உழைத்து உண்ணவும், சொந்தக் காலில் நிற்கவுமே விரும்புவார்கள். மற்றவர்களில் தங்கியிருக்கவும், மற்றவர்களின் பணத்தில் வாழவும், அடிமை வாழ்வு வாழவும் யாருமே விரும்ப மாட்டார்கள். அவ்வாறுதான் மாற்று வலுவுடையோரும் நினைப்பார்கள். உண்மையில் அவதானித்துப் பார்க்கையில் சாதாரண மனிதர்கள் என கூறப்படுபவர்களிடம் இல்லாத திறமைகள் இவர்களிடம் உண்டு. மாற்று வலுவுடையோரின் திறமைகளைக் கண்டு உலகம் வியந்திருக்கின்றது. கை, கால்,கண், காது நன்றாக உள்ளவர்களால் ஆற்றமுடியாத அனைத்துத் வேலைகளையும் சுயமாக ஆற்றும் வல்லமை மாற்று வலுவுடையோரிடம் காணப்படுவதை அவதானிக்க முடியும்.

**இன்று மாற்று வலுவுடையோர் தினம்**

சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்கள் என்ற வகையில் மாற்றுவலுவுடையோரின் முயற்சிக்கும், சொந்தக் காலில் நிற்பதற்கும் வழிவகுப்பதே சிறந்த பணி ஆகும். திருநெல்வேலியிலுள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் 1990 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு இன்றுவரை மாற்று வலுவுடையோருக்கான புனர்வாழ்வுச் சேவைகளை பெற்றுக்கொடுக்கிறது. சுயதொழில் பயிற்சிகளை வழங்கி சொந்த உழைப்பில் வாழ வழிவகுக்கிறது. தையல் பயிற்சி, கடிதஉறை ஒட்டுதல், கேக் ஐசிங் தயாரித்தல் போன்றப் பலவற்றுக்குப் பயிற்சிகளை வழங்கி அவர்களின் வாழ்வை சிறக்க வைக்கிறது. ஒவ்வொருவரும் புனர்வாழ்வு நிலையத்துக்கு வந்து பயிற்சி பெற்றுச் செல்வதனால் மனநிலையில் சந்தோஷமான உணர்வைப் பெற்று வாழ்கின்றனர். இதுவரையில் வீட்டுக்குள் முடங்கி ''நான் குறைவுடையவன்'' என உள்ளுக்குள் வலிகளைச் சுமந்து வாழ்ந்தவர்கள் இங்கே வரும் போது வலிகளை மறந்து தன்னம்பிக்கையுடன் வாழ்வதை நேரில் பார்க்க முடிகிறது. இன்னும் இந்த நிறுவனத்தை அறியாத மாற்று வலுவுடையோரை இங்கே இணைப்பதற்கு முயற்சித்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி ஜெய்ப்பூர் நிறுவனமும் மாற்றுவலுவுள்ளோருக்கான சேவையை வழங்குவதில் முன்னிலையில் உள்ளது

மாற்று வலுவுடையோரைப் பார்த்து கழி விரக்கப்படக் கூடாது. அவர்கள் சுயமாக முன்னேறவும், சொந்தக்காலில் நிற்கவும் அவர்களை வழிப்படுத்த வேண்டும். இயற்கையின் நியதியில் யாவும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கும். ஆனால் நம்முயற்சியில் உலகின் போக்கை மாற்றிவிட முடியும். மாற்றுவலுவுடையோர் என்பது கூட சாதாரண விடயமாகப் பார்க்கப்படும். நம்பிக்கைதான் வாழ்க்கை. தன் நம்பிக்கை இருந்தால் சொந்தக்காலில் நின்று முன்னேற முடியும் மாற்றுவலுவுடையோர் வாழ்வில் வசந்தம் ஏற்படும். குறை என்பது மனதில் வராதவரை என்றுமே நிறை தான் என்பதை அனைவரும் புரிந்து கொண்டால் எல்லோர் வாழ்விலும் சந்தோஷத்தை உணரமுடியும் என்பது உறுதி.

து.தசோனியா

# தனக்கு வந்தால் தெரியும்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*


தம்மை அழவைத்த கோபுவை எப்படியாவது திருத்த முடிவு செய்தான் மணி. அதற்கான நேரம் வந்தது. பாடசாலையின் அரையாண்டுத் தேர்வு தொடங்கியது. தேர்வுக்கு முன் தினம் கோபுவின் தமிழ்ப் புத்தகத்தை எடுத்து ஒளித்துவைத்துவிட்டான் மணி. தேர்வுக்கு முதல்நாளே படிக்கும் வழக்கமுள்ள கோபு புத்தகத்தைக் காணாது தவித்தான். நாளை தேர்வுக்கு என்ன செய்வது? ஒன்றுமே படிக்கவில்லையே?

தமிழில் சித்தியடையாதுவிட்டால் அதைவிட அவமானம் வேறு ஒன்றும் இல்லையே? ஆசிரியர் அடிப்பது இருக்கட்டும் வீட்டில் அப்பாவுக்கு என்ன பதில் சொல்வது என்று பல்வேறு கேள்விகள் அவனைத் துளைத்து எடுத்தன.

எங்கு தேடியும் புத்தகம் கிடைக்கவில்லை. இரவலும் கொடுக்க யாரும் முன்வரவில்லை. அழுதே விட்டான் கோபு. அப்போது அங்கு வந்த மணி ஒன்றும் தெரியாதவன்போல ''கோபு ஏன் அழுகிறாய்? பிறரை அழவைக்கும் நீ இன்று அழுதுகொண்டு இருக்கிறாயே?'' என்றுகேட்டான்.

''மணி நீ வேறு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகிறாயா? நான் என் புத்தகத்தைக் காணாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்; ஒன்றுமே படிக்கவில்லை; நாளைக்குத் தமிழ்ப் பரீட்சை என் நிலையை நானே நொந்து கொண்டிருக்கிறேன்'' என்றான் கோபு.


''இப்படித்தானே கோபு பொருள்களைத் தொலைத்தவர்கள் மனம் வேதனைப்பட்டிருக்கும்! அப்போது நீ எப்படி கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்தாய்! இப்போது உன் பொருள் காணாததும் துடிக்கிறாயே'' என்று ஊசியாய் குத்தினான் மணி. கோபு தலை குனிந்தான். ''ஆம் மணி இப்போதுதான் என் தவறு எனக்குப் புரிகிறது. அவர்கள் இட்ட சாபம்தான் இன்று என்னைப் பிடித்துவிட்டதோ? நாளை நான் எப்படிப் பரீட்சை எழுதுவேன்'' என்று விசும்பினான் கோபு.



''இந்தா கோபு உன் தமிழ்ப் புத்தகம்; நீ திருந்தவே நான் இவ்வாறு செய்யும் படி ஏற்பட்டது. இனி பிறர் பொருளை ஒளித்து வைக்க மாட்டாயே?'' என்று அவனிடம் புத்தகத்தைக் கொடுத்தான் மணி.

''எல்லாம் உன் வேலைதானா?எனக்குப் புத்தி வந்துவிட்டது. இனி இந்தத் தவறை ஒருபோதும் செய்ய மாட்டேன்; என்னைத் திருத்திய நீதான் என் நல்ல நண்பன்'' என்று மணியை அணைத்துக் கொண்டான் கோபு. *(முற்றும்)*

# விட்டில் பூச்சி



அந்தி சாயும் வேளையிலே
அமைதி மாய்க்கும் நோக்கத்திலே
வந்து வந்து விட்டில்பூச்சி
தன்னிசை பாடும்
இரவு வரும் வேளையிலே
அழகு சட்டையிலே
வரவு நோக்கும் கண்போலே
வண்ணஓட்டைகளை தீட்டும்
தூக்கம் கொள்ளும் நம்மேலே
துள்ளித் துள்ளி ஓடும்
பக்கம்வந்து தன்கால் முள்கொண்டு
முத்தமொன்று பதிக்கும்
சட்டிபானை அனைத்திலும் சென்று
உணவின் சுவை பார்க்கும்
பெட்டியுள்ளே இருக்கும் பொருள்
அனைத்தையுமே கெடுக்கும்
தீ கண்டு மகிழ்ச்சியிலே
துள்ளித் துள்ளிக் குதிக்கும்
தீயின் பசிக்கு இரையாக
தன்னையே கொடுக்கும்

தி.சபீனா

# விண்வெளி அறிவியல்

01.ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொறுப்பான நிறுவனம்
நாஸா

02.முதன் முதலில் விண்வெளிக்குச் சென்ற மனிதன்
யூரி ககாரின்

03.முதன் முதலில் விண்வெளிக்குச் சென்ற பெண் வீராங்கனை
வலன்ரீனா ரெரஸ்கோவ்

04.சந்திரனில் காலடி வைத்த முதலாவது மனிதன்
நீல் ஆம்ஸ்ரோங்

05.விண்வெளியில் நடந்த முதல் வீரர்
அலெக்ஸ் ஏ லியனோவ்

06.உலகின் முதலாவது விண்வெளி ஓடம்
கொலம்பியா

07.விண்வெளிப் பயண விதிகளை வரையறுத்த முதல் அறிஞர்
சேர்.ஐசாக் நியூட்டன்

08.விண்வெளிக்குச் சென்ற முதல் பத்திரிகையாளர்
டொஹியோ ஹிரோ

09.விண்வெளியில் முதன்முதலில் உயிர் நீத்த வீரர்
விளாடிமிர் கமெசோடா

10.1957 இல் விண்வெளிக்குச் சென்ற முதல் உயிரினம்
கலக்கா என்னும் நாய்

ச.பிரியங்கா,
தரம்-6ஓ,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

# மழை ஆடை



மழைக் காலங்களில் நம்மில் அதிகமானவர்கள் மழை ஆடை (மழை அங்கியை) அணிந்து செல்வது வழமை. ஒரு சிலர் குடையைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் மழை அங்கியே பாதுகாப்பானது. இதனை தென்னாபிரிக்காவுக்குச் சென்ற ஸ்பெயின் பயணிகள் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது.

பிரான்காய்ஸ் பிரெஸ்நியூ என்ற பிரான்ஸ் பொறியியலாளர் மழை உடையைக் கண்டுபிடித்ததாகவும் வேறு சிலர் கூறுகின்றனர். 1748 ஆம் ஆண்டு இறப்பரின் பயன்பாட்டால், காலணிகளும், மழை அங்கிகளும் தயாரிக்கப்பட்டன. சாதாரண அங்கியில் இறப்பரைச் சேர்த்தே இவர்கள் தயாரித்தனர். ஆனாலும் பெருமளவில் உற்பத்தி இடம்பெறவில்லை.

காலப்போக்கில் இதன் உற்பத்தியை அதிகரித்து லாபம் ஈட்டிய பெருமை சார்லஸ் மெக்கின்டாஷ் என்ற ஆங்கிலேயே நாட்டவரையே சேரும்.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.




ஜப்பான் ஆசியாக் கண்டத்தில் உள்ள பல தீவுகளாலான ஒரு நாடாகும். இது பசிபிக் பெருங்கடலின் மேற்குப் பகுதியில் உள்ளது. இது சூரியன் உதிக்கும் நாடு என்றும் அழைக்கப்படுகிறது.

டோக்கியோ இதன் தலைநகராகும். ஜப்பான் மொத்தம் 6800 தீவுகளை உள்ளடக்கியது. ஹொக்கைடோ, ஹொன்ஷூ, ஷிகொக்கு, கியூஷூ ஆகியன ஜப்பானின் முக்கியமான நான்கு பெரிய தீவுகளாகும். ஜப்பானிய சட்டத்தில் வரையறுக்கப்பட்ட ஆங்கிலப் பெயர் ஜப்பான் என்பதாகும். இருப்பினும் அண்மைக் காலமாக நிப்பொன் என்ற பெயரையும் அஞ்சல் தலைகளிலும், நாணயங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. சின்த்தோவும், புத்த மதமும் ஜப்பானின் முக்கிய மதங்களாகும். கிறித்தவ மதமும் சிறுபான்மையான மக்களால் பின்பற்றப்படுகிறது. பாரம்பரிய விளையாட்டான சுமோ ஜப்பானின் தேசிய விளையாட்டாக மதிக்கப்படுகிறது. தற்காப்புக் கலைகளாக சூடோ, கராத்தே போன்றவையும் வழமையில் உள்ளன. கோல்ப் விளையாட்டும் ஒரு புகழ்பெற்ற விளையாட்டாகும்.



*அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்பள்ளியின் 12 ஆவது ஆண்டு நிறைவு விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதன் போது இடம்பெற்ற முன்பள்ளிச் சிறார்களின் உடற்பயிற்சியின் ஒரு காட்சி.* *(135)*



# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது

■ - மணி




(சென்றவாரத் தொடர்ச்சி)

பிரயாகையிலிருந்து இராம ஜன்ம பூமியைத் தரிசிப்பதற்காக அயோத்தியை நோக்கிப் புறப்பட்டோம். அயோத்தியை அடைந்து அங்கு கங்கையின் ஒரு கிளை நதியான சரயு நதியில் நீராடினோம். பின் இராம ஜன்ம பூமியைத் தரிசிப்பதற்காகச் சென்றோம். அங்கு பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகம். பல விதமான உடல் பரிசோதனைகளின் பின்னரே எம்மை அந்தப் பிரதேசத்துக்குள் அனுமதித்தார்கள். எங்கும் இராணுவ மயமாகவே காணப்பட்டது. இங்கு இராமர் திரேதாயுகத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள ஒரு மண்டபத்தில் இராமர், சீதை, இலட்சுமணன் ஆகியோரின் விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதனைத் தரிசித்து வணங்கினோம். அப்பிரதேசத்தில் வானரங்கள் கூடுதலாக உலாவித் திரிந்தன.

எமது கையில் உள்ள சிறு பொருள்களை அவை பறித்துச் சென்று விடும் என்பதால் நாம் அவற்றை ஜாக்கிரதையாகவே கொண்டு சென்றோம். ஆனால் பலரிடம் அவை பறித்துச் சென்றதைக் கண்டோம். இப்பிரதேசத்தில் உள்ள கட்டடம் ஒன்றில் விஷ்வ ஹிந்து பரிஷித் தலைவர் ஸ்ரீகோபால்தாஸ் சாஸ்திரி அவர்கள் தனது தள்ளாத வயதிலும் உண்ணா விரதத்தில் ஈடுபட்டிருந்ததையும் அவதானித்தோம். அவர் இராம ஜபம் செய்தபடியே இருந்தார். இரவு ஒரு பழம் மட்டும் சாப்பிடுவாராம். இராமர் கோயில் கட்டுவதற்கு அனுமதி கிடைத்து, கோயில் கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் வரை தான் உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை என்று கூறியதாகச் சொன்னார்கள். இங்கு நாள் தோறும் 1000 பேருக்கு மதிய உணவு அதாவது அன்னதானம் வழங்கப்படுவதாகக் கூறினார்கள். அங்குள்ள பக்தர்கள் சிறுசிறு குழுக்களாகப் பல இடங்களில் இராமகானம் இசைத்துக் கொண்டிருந்ததையும் அவதானித்தோம்.

இராம ஜன்ம பூமிக்கு அருகில் உள்ள பிரதேசத்தில் பாபர் மசூதி இருந்த இடத்தையும் பார்வையிட்டோம். மற்றும் தசரதர் மாளிகை, ஆஞ்சநேயர் தரிசனம், குமுதி நதி, லலிதாம்பாள் சங்கரதீரர் ஆலயம், வியாசர் கோயில், பாலாஜி திருப்பதி ஆகியவற்றையும் நைமிசாரண்யத்திலுள்ள இடங்களையும் பார்வையிட்ட பின்னர் ராம்கூர் ஊடாக ஹரித்துவாரை அடைந்தோம்.

ஹரித்துவார் என்பது நாராயணப் பெருமான் எழுந்தருளியிருக்கும் பத்திரிநாத் செல்வதற்கான நுழைவாயிலாக அமைந்துள்ளது. கேதார நாதன் வீற்றிருக்கும் கேதாரநாத் செல்வதற்கும் இதுவே நுழைவாயிலாக இருப்பதால் ஹரத்துவார் என்றும் அழைக்கப்படுகின்றது. ஜமுனா நதி உற்பத்தியாகும் ஜமுனோத்திரி செல்வதற்கும், கங்கை உற்பத்தியாகும் கங்கோத்திரி செல்வதற்கும் இதுவே நுழைவாயிலாக அமைந்துள்ளது. இமயமலையில் உள்ள புனிதத் தலங்களில் உத்தர கண்டத்தில் அமைந்து "சதுர்தாம்" என (சதுர் என்பது நான்கு) ஜமுனோத்திரி, கங்கோத்திரி, கேதாரநாத், பத்ரிநாத் ஆகிய தலங்களுக்கும் யாத்திரை செய்வது பெரும் புண்ணியம் என்றும் அதனை மேற்கூறிய ஜமுனோத்திரி, கங்கோத்திரி, கேதாரநாத், பத்ரிநாத் என்ற ஒழுங்கு முறையில் தரிசித்தாலே முழுமையான பலன் கிடைக்கும் என்றும் பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

ஹரித்துவாரில் 12 வருடங்களுக்கு ஒருமுறை கும்பமேளா நடைபெறுகின்றது.

*(தொடரும்)*

# சிறுகதை

நவீன இலக்கியங்களைப்

நவீன இலக்கியங்களான புதுக்கவிதை,
கம் எதற்கும் இலக்கணங்களோ, வரையன
களோ இல்லை. அவற்றைச் சுதந்திரமாக எழு
பெரிய எழுத்தாளர்கள் காலத்துக்குக் காலம்
பின்பற்றி, பல அழகான இலக்கியங்களைப்

அந்த இலக்கியங்களைப் படித்தால் அந்
குரிய இலக்கணங்கள் பண்புகள் பற்றி அறி
ளும் அழகாக எழுதலாம். அவற்றை மீறியும்
படைக்கும் இலக்கியம் அழகாகவும், சுவைய
யாகவும் இல்லாவிட்டால், மற்றவர்கள் அதை

நவீன இலக்கியங்களை விளக்கிக் கூறல
கள் பற்றி எடுத்துக் கூறலாம். ஆனால் பை
வர் இன்னொருவருக்குக் கற்றுக் கொடுக்
குக் கருவிலே திரு இருந்தால்தான் உங்கள
முடியும். அமெரிக்க எழுத்தாளராகிய "எட்
வர்தான் முதலாவது சிறுகதையை எழுதின

அதற்குப் பின் பலர் அழகான சிறுகதை
தமிழ் மொழியிலும் பல நல்ல கதைகள் எ
அவற்றில் இருந்து பல அறிஞர்கள் எ
கணங்கள் பற்றிச் சுருக்கமாக எடுத்து
இலகுவில் கைகூடாது. அதிகமாக வாசியுங்
எழுதுங்கள். அப்பொழுதுதான் அந்த ஆற்ற

**வாழ்க்கை அனுபவம்:**

சிறுகதை ஒரு கதை, ஒரு கருத்து, ஒரு ப
எதிலிருந்தும் பிறக்கலாம்! என்றாலும்
வைத்து எழுதப்படும் சிறுகதைகளே நல்ல
யும் என்று சொல்கிறார்கள். எனவே உங்கள
தைக் கூர்ந்து கவனியுங்கள். அதில் ஏதாவது
தைத் தொடும்.

நீங்கள் அதில் ஈடுபட வேண்டும். அந்
வேண்டும். அப்போது சிறுகதை எ
இருப்பதுடன், கதையும் உணர்ச்சிகரமாக
வாழ்க்கை அனுபவங்களுடன் மற்றவர்களது
நிகழ்ச்சிகள், கேள்விப்பட்ட கதைகள்,
வைத்துக்கூட சிறுகதைகள் எழுதியுள்ளேன்

**கருத்து:** சிறுகதை அநேகமாக ஒரு கரு
கிறது. அது எதுவாகவும் இருக்கலாம். எங்
கையில் இருந்து எடுக்கப்பட்ட கருத்தாக, வ
கருத்தாக இருந்தால்தான் அது வாசகர்க
இதிகாசங்களில் இருந்து எடுக்கப்பட்ட
கற்பனையே என்று வாசகர்கள் அலட்சியம்
நம்பகத் தன்மை இருக்க வேண்டும். நிஜ
எடுக்கப்பட்ட சிறுகதையை வாசிப்பவர்கள்

**சிறியது:**

பெயருக்கேற்ப சிறுகதை சிறியதாகவே

■ தர்மா



# பூக்களில் மிளிரும் மருத்துவம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

வயிறு சம்பந்தமான நோய் உள்ளவர்கள் மற்றும் கல் மண் என்பனவற்றை உண்ணும் குழந்தைகளுக்கு வேப்பம் பூ கசாயம் கொடுத்தால் வயிறு சுத்தமாகும். வாந்தி, ஏப்பம், பித்தம் நீங்கும். வேப்பம் பூவுக்கு ஜீரணத்தை அதிகரிக்கும் சக்தியுண்டு. வேப்பம் பூ குடலில் உள்ள பூச்சிகளைக் கொல்லும் மருத்துவ குணம் கொண்டது.

அடுத்ததாக மகிழம் பூவைப் பார்ப்போம்.மகிழம் பூவின் நறுமணம் மற்றைய பூக்களை விட சற்று வித்தியாசமானது. காதுகளில் எந்தத் தொல்லை ஏற்பட்டாலும் மகிழம் பூவை எண்ணெய் போட்டு காய்ச்சித் தலையில் தேய்த்து சற்று நேரம் குளிரவைத்து அதன்பின் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்தால் நல்ல பயன் உண்டாகும்.

இனி அகத்திப் பூவை நோக்குவோம். அகத்திப் பூவுக்கும் சிறந்த மருத்துவக் குணங்கள் உண்டு. இதனை அனைத்து மக்களும் விரும்பி உணவோடு சேர்த்து உண்டு பலன் பெறுகின்றனர்.

அடுத்து தொட்டாச்சினிங்கிப் பூ, வேர் என்பனவற்றுக்கு புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல் உண்டு. மனிதர்களுக்கு மட்டுமன்றி கால் நடைகளுக்கும் ஏற்படுகின்ற பல நோய்கள் இந்தப் பூவினால் குணமாக்கப்படுகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அடுத்ததாக அலரிப்பூவைப் பார்ப்போம். முதலில் அலரி விதையையும் வேரையும் உயிரினங்கள் உட்கொண் டால் மரணம் நிச்சயம் என்பதை எல்லோரும் அறிவார்கள். அதனால் இதனை வீட்டில் யாரும் வளர்ப்பதில்லை.

இனி தாழம் பூவைப் பற்றிப் பார்ப்போம். தாழம் பூ மிகவும் நறுமணம் கொண்டது. அம்பாள் பூசைக்கு உரிய பூ. இதற்குத் தனிமரியாதை உண்டு. தாழம் பூ புதர்களுக்குள் சர்ப்பங்கள் வாழும். அடுத்து அல்லிப் பூக்களின் தாற்பரியங்களைப் பார்ப்போம். அல்லிப் பூ தாமரையைப் போல் இருந்தாலும் மிகச் சிறியதாகக் காணப்படுகின்றது. வெள்ளை அல்லிப் பூக்கள் தான் அதிக மருத்துவ குணம் கொண்டவை. நீரிழிவு உள்ளவர்கள் அல்லிப் பூவில் பானம் செய்து பருகினால் நோய் கட்டுப்படும்.

இறுதியாகச் சூரியகாந்திப் பூவைப் பற்றிப் பார்ப்போம். சூரியகாந்திப் பூ ஏனைய பூக்களைவிட வித்தியாசமானது. சூரியகாந்தி எண்ணெய் மிகவும் நல்லது. இது சூரியகாந்தி விதையிலிருந்து கிடைக்கும். இதயநோய் உள்ளவர்கள் இதனைப் பயன்படுத்தலாம்.

மருத்துவ குணம் கொண்ட ஏனைய பூக்களைக் கீழ்க்கண்டவாறு பட்டியல் இடலாம்.

வெங்காயப்பூ, ஆவாரம்பூ, இரவுராணிப்பூ பகல்ராணிப்பூ தென்னம்பூ, மதனகாமப்பூ, கொன்றைப்பூ, பூவரசம் பூ, மாதுளம்பூ, தொட்டாத்திப்பூ, சிறு நாகப்பூ, நொச்சிப்பூ, புளியம்பூ, மாம்பூ, கடுக்காய்ப்பூ, ஆடாதோடைப்பூ, பூசணிப்பூ, செம்பருத்திப்பூ, எள்பூ, பருத்திப்பூ, பவளமல்லிகைப்பூ என்பனவே அவையாகும்.

பூக்களில் காணப்படுகின்ற மருத்துவக் குணங்களைக் கண்டறிவதில் பிணியாளர் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பது ஆய்வாளர்களது கூற்றாகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

* * *

# த எழுதுவது எப்படி?



அராலியூர்
■ ந. சுந்தரம்பிள்ளை

ளப் படைத்தல்
தை, சிறுகதை, நாவல், நாட
ரயறைகளோ, கட்டுப்பாடு
 எழுதலாம். ஆனால் பெரிய
லம் சில வரையறைகளைப்
ளப் படைத்திருக்கிறார்கள்.
 அந்தந்த இலக்கியங்களுக்
 அறிந்து கொண்டு, நாங்க
யும் எழுதலாம். ஆனால் நாம்
வையாகவும், பயனுள்ளவை
அதை வாசிக்க மாட்டார்கள்.
கூறலாம். அவற்றின் சிறப்புக்
 படைக்கும் ஆற்றலை ஒரு
டுக்க முடியாது. உங்களுக்
ங்களால் இலக்கியம் படைக்க
 'எட்கார் அலன்போ'' என்ப
ழுதினார்.
கதைகளை எழுதிவிட்டனர்.
ள் எழுதப்பட்டிருக்கின்றன.
ள் எடுத்துக்கூறிய இலக்
ந்து நோக்கலாம். எதுவும்
சியுங்கள். பிறகு தொடர்ந்து
ஆற்றல் உங்களுக்கு வரும்.

ஒரு பாத்திரம், ஓர் உணர்ச்சி
ம் சொந்த அனுபவத்தை
ல்ல சிறுகதைகளாக அமை
ங்களைச் சுற்றியுள்ள உலகத்
வது ஒன்று உங்களது உள்ளத்

 அந்த உணர்ச்சியில் மூழ்க
 எழுதுவது சுலபமாக
ாக அமையும். நான் எனது
களது வாழ்க்கையில் நடந்த
, வெறும் கற்பனைகளை
ளேன்.
 கருத்தில் இருந்தே பிறக்
 எங்களது சமகால வாழ்க்
க, வாழ்க்கைக்கு வேண்டிய
ர்களைக் கவரும். புராண
ட்ட கருத்துக்கள் வெறும்
சியம் செய்வர். அதில் ஒரு
நிஜவாழ்க்கையில் இருந்து
ர்கள் உள்ளம் உருகி நிற்பர்!

வே இருக்க வேண்டும் என்

பது சொல்லாமலே பெறப்படுகின்றது. ஆனால் சிறிய கதைகள் எல்லாம் சிறுகதைகள் என்று கூறமுடியாது. சிறுகதை ஒரு நாவலின் சுருக்கமுமல்ல. அதற்கு ஒரு தனிவடிவம் (Form) இருக்கிறது. அந்த அமைப்பு இருந்தால்தான் அது சிறுகதை என்று ஏற்றுக் கொள்ளப்படும்.

**ஒன்றுமட்டும்:**

ஒரு நாவலில் எங்கள் கதைகள், கதை கோப்புகள் (Plots), பாத்திரம், எத்தனை சம்பவங்கள் என எத்தனையும் வரலாம். ஆனால் சிறுகதை ஒரு பாத்திரம், ஒரு சம்பவம், ஓர் உணர்ச்சி என்று ஏதாவது ஒன்று தான் வரும். அந்த ஒன்றைச் சுற்றியே கதை பின்னப்படும். ஒன்றுக்கு மேற்பட்டவை வந்தால் அதன் அழகு சிதையும். எனவே சுருக்கம் இறுக்கம் ஆகியவை அதன் இன்றியமையாத அம்சங்களாகின்றன.

**வர்ணனைகள்:**

ஒரு நாவலாசிரியர் பக்கம் பக்கமாக வர்ணனைகளை வளர்த்துக் கொண்டு போக அப்படியான வர்ணனைகளுக்கு சிறுகதையில் இடம் இல்லை. எடுத்துக்கொண்ட கதைக்கும் கருவிற்கும் பாத்திரங்களுக்கும் தேவையான, மிகவும் இன்றியமையாத வர்ணனைகளே அதில் இடம்பெறும்.

பெரிய கதை, அழகான கதைக்கோப்பு, பெரிய பாத்திர வார்ப்பு என்று எதுவும் சிறுகதையில் இடம் பெறமாட்டாது. ஒரு பாத்திரம் மட்டுமே இடம்பெறும். அந்தப் பாத்திரத்தைக் கூடப்பேச விடாமல் ஆசிரியர் கதையைச் சொல்லி முடித்துவிடலாம்.

*(தொடரும்)*

# வார்த்தைகளில் உண்மை

நீங்கள் இன்னொருவரிடம் கூறிய வார்த்தைகளுக்கு உண்மையாக இருங்கள். குறிப்பிட்ட நேரத்துக்குள் எதையும் முடித்துத் தருவதில் உறுதியாக இருங்கள். தவிர்க்க முடியாத தாமதங்களையும் முன் கூட்டியே கணித்து, முன்னதாகவே அறிவித்து, கூடுதல் அவகாசத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இது எப்போதாவது தான். எப்போதும் செய்யக் கூடியதல்ல. எந்த சமயத்திலும் நீங்கள் கொடுத்த வார்த்தையின் தரத்தை தரைமட்டமாக்காதீர்கள்.

**நேர மேலாண்மை**

நீங்கள் ஒப்புக்கொண்ட சந்திப்புகளுக்குத் தாமதமாக வருவது, சந்திப்பவர்களை அவமதிப்பது. நீங்கள் ஏற்பாடு செய்த சந்திப்புக்கு தாமதமாகச் செல்வது, உங்களை மதித்து வந்தவர்களை அவமதிப்பது. ஒவ்வொரு விநாடியும் மதிப்புள்ளது என்பதை உங்கள் செயற்பாடுகள் உணர்த்தும்போது வித்தியாசத்தை நீங்களே உணர்வீர்கள்.

**கணக்குகள் சமர்ப்பித்தல்**

நீங்கள் உண்மையானவர், நியாயமானவர் என்று பிறர் உங்களைப் போற்றக் காரணமாக இருப்பவை கணக்குகள். இனிப்பென்று நினைத்து கடித்த பழம் புளித்தால் முகம் சுளிப்பதுபோல் தவறான கணக்குகள் தருபவர்கள்மீது மற்றவர்களுக்கு மனச்சுளிப்பை ஏற்படுத்தும்.

**பழகுவதற்கு எளிமையாக இருங்கள்**

உலகின் ஒரு நிறுவனத்தின் வெற்றி அதன் தலைவர்கள் பழக எளிமையானவர்களாக இருக்கிறார்களா என்பதைப் பொறுத்தே அமைகின்றன என்று நிர்வாகவியல் ஆய்வுகள் சொல்கின்றன. நீங்கள் பழக எளிமையானவர்களாக இல்லையென்றால் உங்களுடன் வணிகத் தொடர்பு வைத்துக்கொள்ள பெரும்பாலானோர் தயங்குவார்கள். உங்களுடன் பணியாற்றக்கூடிய யாவரும் தங்கள் நிலையை உங்களுடன் பகிர்ந்துகொள்ள இயலாது. இது உங்கள் நிறுவனத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும்.


**கூட்டுமுயற்சி**


ஒரு நிறுவனத்தின் வெற்றி அதன்பின் இயங்குகிற ஒட்டுமொத்த குழுவைச் சார்ந்தே இருக்கிறது. தனி மனிதனின் திறமைகளைத் தாண்டி பிறரின் கருத்துகளுக்குச் செவிசாய்த்து, ஏனைய பணியாளர்களின் திறமைகளை அங்கீகரிக்கின்ற போது, நிறுவனத்தின் வெற்றி தானாகவே உயரும். இந்தக் கூட்டு முயற்சியின் மூலமாக சக பணியாளர்களிடையே நம்பிக்கை, பொறுமை, சிக்கல்களை எதிர்கொள்கிற விதம் என்று சகல திறமைகளும் வளரும்.

*(தொடரும்)*

■ **சோபா**

# விசேட தாற்பரியங்களைக் கொண்டுள்ள மின் மீன்கள்





ஆழ்கடலில் உள்ள மீன்களில் சில மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியவை ஆகும். இத்தகைய மின் மீன்களின் தாற்பரியங்கள் சிலவற்றை ஆராய்வது இங்கு உசிதம் ஆகும். சிறிய அளவிலான மின்சக்தியை உருவாக்கக் கூடிய சில விசேட உறுப்புக்கள் மின் மீன்களில் தென்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இந்த அதீத உறுப்புக்களை மின் உறுப்புக்களென அழைக்கின்றனர்.

மின் மீன்கள் தங்களை இரையாக்க முயலும் பெரியளவிலான மீன்களுக்கு மின் அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டு லாவகமாகத் தப்பித்துக் கொள்கின்றன.

இந்த மீன்கள் கடலினுள் சஞ்சரிக்கும் வேளையில் எதேச்சையாக மீன் குஞ்சுகளைச் சந்திக்க நேரிட்டால் அவற்றுக்கும் மின் அதிர்ச்சியைக் கொடுக்கின்றன. திடீரென மின் அதிர்ச்சிக்கு உள்ளான இந்தக் குஞ்சு மீன்கள் மயங்கிய நிலையில் காணப்படும். அந்த மீன் குஞ்சுகள் கடலில் மிதக்கும்போது இலகுவாக இரையாக்கிக் கொள்கின்றன.

மின் உறுப்புக்களை இம் மீன்கள் நரம்பு மண்டலத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்கின்றன. விரும்பியபோது மட்டும் அவை மின்சாரத்தை வெளியேற்றுகின்றன. அத்துடன் மின் ஓட்டத்தின் வலிமையையும் கட்டுப்படுத்தலாம். மின் மீன்களில் மின் மலங்கு, மின்கெளிறு, மின்திருக்கை என்பவை பிரதானமானவையாகும்.

மின் ஓட்டம் தலையிலிருந்து வாலை நோக்கி ஓடும். ஆனால் மின் மலங்கைப் பொறுத்தவரை இது எதிர் மாறாக நிகழ்கின்றது. மின் திருக்கையில் அடிப்புறத்தில் இருந்து முதுகுப்புறம் நோக்கி கீழ் மேலாக ஓடும். எனவே மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஆற்றலானது மின்சார உறுப்புக்களுக்குத் தனித்தனியாகவும், சுதந்திரமாகவும் பரிணமித்துள்ளன.

ஜிம்நேட்டன் என்று அழைக்கப்படுகின்ற மின் மீன்கள் தென்அமெரிக்காவின் வட பகுதியிலும், பிரேஸில், கயானா ஆகிய பகுதிகளிலும் சதுப்பு நீரோடைகளிலும் வாழ்கின்றன.

சாதாரணமாக இவை நூற்றுஐம்பது முதல் இருநூற்றுப் பத்து சென்ரிமீற்றர் நீளமுள்ளன. இவை ஒரு மனிதனுடைய தொடை அளவு பருமனாகவும் வளர்வதுண்டு.

இந்த உடலின் நீளத்திலே ஐந்தில் நான்கு பகுதி வாலாகும். முதலிலுள்ள பங்கிலேயே தலையும் உள்ளுறுப்புக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. வாலின் முடிவுக்கு அண்மையில் கீழ் புறமாக இரண்டு பக்கங்களிலும் மின் உறுப்பு அமைந்திருக்கின்றது.

இனி மின் திருக்கை பற்றி சிறிது பார்ப்போம். இது அயனமண்டலத்திலும், மித வெப்ப மண்டலத்திலும் உள்ள கடலில் சஞ்சரிக்கின்றன. இந்தியக் கடலில் நார்சின் இன்டிக்கா, நார்ச்சின் ருனியா என்னும் இனங்கள் மீனவர்களின் வலைகளில் சிக்கிக் கொள்கின்றன. இவற்றைத் திமிலை என்றும் அழைப்பதுண்டு.

எமது மீன் சந்தைக்கு விற்பனைக்கு வருகின்ற ஏனைய மீன்களைப் போலல்லாது விசேட தாற்பரியங்களைக் கொண்டுள்ள இம்மீன்கள் மின்சாரரத்தின் பங்களிப்புடன் தற்பாதுகாப்பை மேம்படுத்துகின்றன என்றும் கூறலாம். அத்துடன் சிறிய மீன்களை இரையாக்குவதற்கும் மின்வலுவை தேவைக்கேற்ப பயன்படுத்தி வாழ்கின்றன.

அதிவிசேட தாற்பரியங்களைக் கொண்டுள்ள இம்மீன்கள் அதிசயிக்கத்தக்க ஒன்றாகும்.

■ **அருணா,** வந்தாறுமூலை

# பெண்களுக்கான உடை அழகு



✱உடை என்பது அனைவருக்கும் முக்கியமான ஒரு விரீயம். அதை நாம் எந்த விதத்தில் பயன் படுத்துகிறோம் என்பதை பொறுத்து நம் மீதான வசீகரத்தை கூட்ட முடியும். இது ஆண்கள் பெண்கள் இருவருக்குமே பொருந்தும்

**குண்டாக இருப்பவர்கள்**

✱உடை விசயத்தில் முக்கியமான ஒன்று அனைவரும் நம் உடல்வாகிற்கு எது பொருந்துமோ அந்த வகையான உடைகளையே தேர்வு செய்ய வேண்டும். ஆசைப்படுகிறோம் என்பதற்காக பொருத்தமில்லாத உடைகளை அணிந்து மற்றவர்கள் கிண்டலடிக்கும் படி நடந்து கொள்ளக்கூடாது. சரியான உடைகளை தேர்வு செய்வதன் மூலம் நம் மிடம் உள்ள மைனஸ்களை பளஸ்களாக மாற்றலாம்.

✱எடுத்துக்காட்டாக குண்டாக மற்றும் குள்ளமாக இருப்பவர்கள்,ரொம்ப ஒல்லியா இருப்பவர்கள், எனக்கு நல்ல ஸ்ட்ரக்சர் இருக்கு ஆனா பார்த்தால் ஸ்மார்ட்டா இல்லை என்று நினைக்கிறவர்கள் எல்லோருமே இந்தப் பிரச்னையை முழுவதும் இல்லை என்றாலும் ஓரளவு சரி செய்யலாம்.

✱குண்டாக இருப்பவர்கள் கண்டிப்பாக ரொம்ப வழுவழுப்பான உடைகளை தேர்வு செய்யவே கூடாது, காரணம் அவ்வகையான உடைகள் உட லோடு ஒட்டி உடல் பாகங்களை வெளிப்படையாக காட்டும்.

✱இவ்வைகையான ஆடைகளை முற்றிலும் தவிர்த்து விடுதல் நலம்.

**குள்ளமாக குண்டாக இருப்பவர்கள்**

✱இவர்களும் வழுவழுப்பான உடைகளை கண்டிப்பாக தவிர்த்தே ஆக வேண்டும் வேறு வழியே இல்லை.

இவ்வகை உடைகள் இன்னும் உயரம் குறைந் தவர்களாக காட்டும். பெண்களுக்கு மிக முக்கியமான அம்சம் குறிப்பாக குள்ளமாக இருப்பவர்களுக்கு ஷோல்டர் அகலமாக இருப்பது, உங்கள் ஷோல்டர் அகலமாக இருக்க வேண்டியது அவசியம்.

✱ஒரு சிலரை பார்த்தால் அவர்களுக்கு ஷோல்டர் அகலம் குறைவாக இருக்கும், அவர்களுக்கு ளஇருக்கும் ஒரே வழி கொட்டன் புடைவைகள்தான் இவைகள் தான் உங்கள் சோல்டரை மறைத்து அகலப்படுத்தி காட்டும், அதோடு கொட்டன் புடைவை என்பதால் சதை பகுதிகளை அப்பட்டமாக காட்டாது.

✱பெண்கள் சுடிதார் அணியும் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் தொள தொள என்று அணியக் கூடாது குறிப்பாக குள்ளமாக குண்டாக உள்ளவர்கள், அதே போல் இறுக்கமாகவும் இடுப்பு பகுதியில் அளவு குறைத்து ஓரளவாவது ஸ்ட்ரக்சர் கொண்டு வரும் படி இருக்க வேண்டும்.

**ஒல்லியாக இருப்பவர்கள்**

✱ இவர்கள் இடை பகுதியில் கவனமெடுத்து சுடிதார் அணிய வேண்டும். ஒல்லியாக உள்ளவர்கள் ரொம்ப மெல்லிய உடையை தவிர்க்க வேண்டும், இவை உடலை குச்சி குச்சியாக காட்டும். எலும்புகள் துருத்திக்கொண்டு அசிங்கமாக இருக்கும். சுடிதார் அணியும் போது கையின் அளவு ரொம்ப குறைவாக வைக்க கூடாது.

✱இது உங்களின் நீண்ட கைகளை (ஒல்லியாக இருப்பதால்) இன்னும் நீண்டதாக காட்டும். தேர்வு செய்யும் உடை திக்கான உடையாக பார்த்துக்கொள்வது நல்லது.

**ஸ்மார்டாக இருப்பவர்கள்**

✱இதற்கெல்லாம் காரணம் உடை மட்டுமே. ஏனோ தானோவென்று உடை அணிவதாலே அவ்வாறு தெரிகிறீர்கள். இதற்கும் உங்கள் முக அழகிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.கறுப்பாக மாநிறமாக இருப்பவர்கள் பிறைட்டான உடைகள் தேர்வு செய்வது நலம்.

✱புடைவை கட்டுவது பெரிய விடயமில்லை அதை சரியான முறையில் கட்ட வேண்டும். எவ்வளவு வருடமாக புடைவை கட்டுகிறேன் எனக்கு புடைவை கட்டுறதைப் பற்றி சொல்றீங்களே என்று கோபப்படாதீங்க. ஒரு சிலர் புடைவையை ஃப்ளீட் ஒழுங்காக வைக்க மாட்டார்கள்,

✱கால் முழுவதும் மறையும் படி கட்ட மாட்டார்கள் தூக்கியபடி இருக்கும், முந்தானை நீளம் குறைவாக இருக்கும், கீழ் பகுதியில் ப்ளீட் சரியாக எடுத்து விடாமல் அசிங்கமாக இருக்கும், உடலை சுத்தி வைத்து கட்டியது போல இருக்க கூடாது. இவ்வாறான விடயங்னளில் அக்கறை கொள்ள வேண்டும்.

# எண்ணெய்ப் பசை சருமத்துக்கு



*ஒரு சிலருக்கு எப்பவும் முகத்தில் எண்ணெய் வழிந்து கொண்டே இருக்கும். அவர்கள் நேரம் கிடைக்கிறபோதெல்லாம் பேஸ் வோஷை முகத்தில் பூசிக் கழுவலாம்.

பிறகு ஒரு கரண்டி சர்க்கரையை எடுத்து முகத்துல மெதுவா மசாஜ் செய்யணும். இதனால் முகத்தில் இருக்கும் அழுக்குகள் வெளியேறிவிடும்.

*இதே சிசிக்சையை கழுத்துக்கும் செய்ய வேணும்.

அப்போதுதான் முகமும் கழுத்தும் ஒரே நிறத்தில் இருக்கும்.

*தலைமுடியைப் பராமரிக்கிறதுக்கு சோம்பல்படவே கூடாது. மாசம் ஒரு தடவையாவது இதில் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும்

*தினமும் தூங்கப் போவதற்று, முன் கை, கால்களை சுத்தமா கழுவிட்டு ஒலீவ் எண்ணெய்

தடவணும். இப்படி ரெகுலரா செஞ்சா சருமம் பட்டுப்போல மிருதுவா மாறும்.


நம்மள நாமே அழகுபடுத்திக் கொண்டால் எப்பவுமே நாம அழகுதான்.

# எப்படி வேண்டுமானாலும் கூந்தலை அழகாக்கலாம்



தலை நிறைய எண்ணெய் வச்சு, இழுத் தால்தான் பலருக்கும் முடி அடங்கும். ஆனா, எண்ணெய் வைக்கிறதை இந்தக் காலத்துல யாரும் விரும்புவதில்லை. நம்ம விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் கூந்தலை மாத்த, இப்போது நிறைய ஸ்டைலிங் இருக்கு. ஆனா, பலருக்கும் அதை உபயோகிக்க பயம். எமது கூந்தலுக்கு ஏற்ப, தரமான பொருளா இருந்த பயம் வேண்டாம்.

# கன்னத்தின் அழகு அதிகரிக்க...



கன்னங்கள் அழகாக இருந் தால் முகத்துக்கே தனி அழகு தான். ஒருசிலருக்கு கன்னங்கள் மிகவும் ஒட்டிப்போய் இருக்கும். பெரும்பாலும் நிறைய பெண் களுக்கு கன்னத்தில் பருக்க ள் தொல்லை இருக்கும். இவர்கள் இந்த விடயங்களில் அக்கறை கொள்ள வேண்டும்.

✱ முதலில் அதிகாலையில் எழுந்து பழகும் பெண்களுக்கு இயற்கையாக சுத்தமான காற்று கிடைக்கிறது. இதனால் முகத்தில் ஒருவித பொலிவு கிடைக்கும்.

✱ மிதமான சுடுநீரில் சிறிதளவு உப்பு கலந்து பத்து நிமிடம் வாய்க்குள் வைத்து பின் கொப்பளிப்பது நல்லது. இப்படி தொடர்ந்து செய்வதால் கன்னத்தின் அழகு அதிகரிக்கும்.

✱ சந்தனம், மஞ்சள் போன்றவற்றை பொடியாக்கி முகத்தில், கை, கால்களில் தடவலாம். வறண்ட சருமத்தைக் கொண்டவர்கள் பால், வெண்ணை கலந்து குழைத்துப் பூச வேண்டும்.

✱ எண்ணைத் தன்மை கொண்ட சருமத்தை உடையவர்கள் வெள்ளரிக்காய் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தக்காளிச்சாறு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து சிறிதளவு தேனும் சேர்த்து உடலில் பூசலாம்.

✱ முகப்பரு இருப்பவர்கள் வேப்பமரப் பட்டையை வெண்ணையில் அரைத்துத் தடவுவது நல்லது. மஞ்சளை, கறி வேப்பலையுடன் சேர்த்து அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் தடவினால் முகப்பரு மற்றும் அதனால் ஏற்பட்ட வடுக்களும் மறையும். அதேபோல் துளசி சாற்றை தினமும் முகத்தில் தேய்த்து அரைமணி நேரம் கழித்துக் கழுவி விட்டால் முகப் பரு தொல்லை ஏற்படாது.

# ஆபத்தில் உதவி



ஒருத்தன் தனியாக வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு காடு. அதைத் தாண்டி அந்தப் பக்கம் போக வேண்டும். அங்கேதான் அவனது ஊர் இருக்கிறது.

இருட்டிவிட்டது. அந்தக் காட்டில் மிருகங்கள் அதிகம். அதனால் இவனுக்குத் தனியாகப் போவதற்குப் பயம் ஏற்பட்டது. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து இருந்தான். சிறிது நேரத்துக்குள் இன்னொருத்தர் தனியாக வந்து கொண்டிருந்தார்.

நல்லவேளை ஒரு துணை கிடைத்துவிட்டது என்று நினைத்த இவன் ''நீங்களும் இந்தக் காட்டு வழியாக அந்தப் பக்கம் போக வேண்டுமா?'' என்று கேட்டான். அவனும் ''ஆமாம்'' என்றான்.

அப்படியென்றால் இந்த நிமிடத்திலிருந்த நாங்கள் இரண்டு பேரும் நண்பர்கள். ஒருவருக்கொருவர் உதவியாக காட்டு வழியே போகலாம். எனக்கு ஏதாவது ஆபத்து வந்தால் நீ துணை, உனக்கு ஏதாவது ஆபத்து வந்தால் நான் துணை. ஆபத்து வந்தால் ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்து கொள்ள வேண்டும் என்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

அதன்பின் இரண்டு பேரும் புறப்பட்டுக் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். சிறிது தூரம் சென்றபோது ஒரு பெரிய கரடி அவர்களுக்கு எதிராக வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த இருவரில் ஒருவன் ''கொடுத்த வாக்குறுதியை மறந்து; செய்து கொண்ட ஒப்பந்தத்தை மறந்து ஓடிப்போய் ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

மற்றவருக்கு மரம் ஏறத் தெரியாது. தனியாளாகக் கரடியைச் சமாளிப்பதும் சாத்தியமில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தான். அப்படியே மூச்சையடக்கி தரையில் இறந்தவர் மாதிரிப்படுத்துக் கொண்டான்.

அந்தக் கரடி பக்கத்தில் வந்து முகர்ந்து பார்த்துவிட்டு ''ஆள் இறந்துவிட்டான்'' என்று நினைத்துச் சென்றுவிட்டது. கரடி போனதற்குப் பின் மரத்திலிருந்தவனைப் பார்த்து ''உன்னிடம் அந்தக் கரடி காது ஓரமாக வந்து ஏதோ சொல்லிவிட்டுப் போனதே? அப்படி என்ன சொன்னது'' என்று கேட்டான்.

அதற்கு படுத்திருந்தவன் ''ஆபத்துக்கு உதவாத உன்னை மாதிரி நண்பர்களை நம்பாதே என்று கூறிவிட்டுப் போனது'' என்றான்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், நட்பு என்றால் ஒருத்தருக்கு ஒருத்தர் உதவியாக இருக்க வேண்டும். ஆபத்து சமயத்தில் தவிக்கவிட்டுப் போனால் அதற்குப் பெயர் நட்பு இல்லை. அது எப்படி? இரண்டு பேரும் உயிருக்கு ஆபத்து என்று வரும் போது தப்பித்துக் கொள்ளத் தானே வேண்டும். அது நியாயம்தான். இருந்தாலும் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு சங்கடத்தைச் சுலபமாகச் சமாளிக்க முடியுமா என்று அந்த நேரத்தில் கூட துணையாக இருந்து சிந்திப்பதை விட்டுவிட்டு தூர ஓடிப் போய்விட்டால் நன்றாக இருக்குமா? சில பேர் மிகவும் சாமர்த்தியமாக நடந்துகொண்டு கூட நண்பர்களைக் காப்பாற்றுவது உண்டு.

இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் இரண்டு பேரும் ஆளுக்கொரு துப்பாக்கி வைத்திருந்தார்கள். அதை எடுத்துக் கொண்டு காட்டுக்கு வேட்டை ஆடப் போனார்கள்.

ஏதாவது கண்ணில் தென்படுகிறதா என்று அந்தக் காட்டில் தேடிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயம் பார்த்து வனபரிபாலன அதிகாரிகள் அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் இந்த இரண்டு பேரில் ஒருத்தன் ஓட ஆரம்பித்தான். மற்றவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அதே இடத்தில் நின்றான். ஓடுபவனைப் பார்த்ததும் அந்த அதிகாரிகள் அவனைத் துரத்த ஆரம்பித்தனர்.

அவன் கொடிகளுக்கு மத்தியில் வளைந்து நெளிந்து ஓடினான். இவர்களும் விடவில்லை. நீண்ட தூரம் போய் ஓர் இடத்தில் அவனைப் பிடித்தார்கள். அதிகாரி கோபமாக ''ஏன் இப்படிப் பயந்து கொண்டு ஓடினாய்; எடு 'லைசென்ஸை' என்றார். அவன் மெதுவாக லைசென்ஸ் எடுத்துக் காட்டினான்.

அதிகாரி அதை வாங்கிப் பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தன. ''உன்னிடம் லைசென்ஸ் இருக்கிறதே; பின்னர் எதற்காக இப்படி ஓடினாய்?'' என்று கேட்டார்.

''என்னுடன் அங்கு வந்திருந்த என் நண்பனிடம் 'லைசென்ஸ்' இல்லையே'' என்றான். ''அவனிடம் இல்லையென்றால் உனக்கென்ன? நீ ஏன் ஓட வேண்டும்?'' என்று கேட்டார்.

''அவனை உங்களிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ளத்தான் நான் இவ்வளவு தூரம் ஓடினேன்'' என்றான்.

**கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## இந்த இரண்டிலும் சரியானது எது?

ஆலயங்களிலே சுவாமி வெளிவீதியுலா வருகின்ற போது வெளிவீதிகளிலே குடியிருப்பவர்கள் தத்தம் வீட்டு வாசலிலே பூரண கும்பம் வைத்துத் தம்மாலியன்ற நிவேதப் பொருள்களையும் வைத்துச் சுவாமியை வரவேற்று வழிபட்டு மகிழ்வது வழக்கம்.

இவ்வண்ணம் வைக்கும் பூரணகும்பத்துக்கு குருக்கள் மலர் கொண்டு அர்ச்சித்துக் கற்பூர ஆராத்தியும் காண்பிப்பது வழக்கம். இவ்வண்ணம் அர்ச்சித்து விட்டுக் குருக்கள் அவ்விடம் விட்டு அகன்றதும் அங்கே காத்துக் கொண்டு நிற்பவர் அந்தப் பூரண கும்பத்தை எடுத்துச் சென்று அதன் நீரை மக்கள் வந்து கொண்டிருக்கும் வீதியில்- அதனை மக்கள் மிதித்துச் செல்லம் படியாக- ஊற்றி விடுவார். இந்த நேரம் சுவாமி தென் கிழக்கு மூலையில் வந்துகொண்டிருப்பார். இந்த நிகழ்வு தென் மேற்கு மூலையில் நடந்தேறி விடும். அத்துடன் நில்லாது பூரண கும்பத்தின் முன்பு வைக்கப்பட்டிருந்த நிவேதனப் பொருள்களையும் (அவல், கடலை, கற்கண்டு போன்றவை) எடுத்து அங்கு நிற்பவர்களுக்குப் பகிர்ந்தளித்தும் விடுவார். நீரை ஊற்றிய பின்பு வெற்றுக் குடத்தைக் கொண்டு வந்து பூரண கும்பம் வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே வைத்து விடுவார். இவற்றின் பின்னே சுவாமி அவ்விடத்தைக் கடந்து செல்லுவார் ''வெற்றுக் குட'' வரவேற்பை ஏற்றுக் கொண்டு. மேலே குறிப்பிடப் பட்டுள்ளது நல்லூரில் ஒரு சாராரின் செயற்பாடுகள். இனிமேல் குறிப்பிடப் போவது மற்றொரு சாராரின் செயற்பாடுகள் பற்றி! வைக்கப்பட்டுள்ள பூரண கும்பத்துக்கு குருக்கள் வந்து மலர் சொரிந்து கற்பூர ஆராத்தி செய்தபின் பூரண கும்பத்தைக் குலைக்காது- எடுத்துக் கொண்டோடிச் சென்று, பூரண கும்ப நீரை வழியில் ஊற்றி விட்டு வெற்றுக் குடத்தை மேசை மேல் வைக்காது- காத்திருந்து சுவாமி அவ்விடத்தைக் கடந்த சென்ற பின்பே கும்பத்தை அகற்றுவார்கள்; அதாவது கும்பத்து நீரை வழியில் ஊற்ற மாட்டார்கள். இந்தமாதிரியான நடைமுறையை நல்லை ஆதீனத்தின் வாயிலிலும் துர்க்கா மணிமண்டப வாயிலிலும் மேற்கு வீதியில் வேறும் இரண்டு மூன்று இடங்களில் மட்டுமே காணலாம்.

இவ்வாறான செயற்பாடுகள்- தேங்காய் உடைத்து இளநீரைத் தலையில் ஊற்றுவது உட்பட நல்லூரில் ஊற்றெடுத்து ஊரில் உள்ள ஆலயங்களிலும் பரவிவிட்டன என்பது யாவரும் அறிந்ததே!

கும்பத்து நீரை ஊற்றுபவர்கள் ''சுவாமிக்கு பாததீர்த்தம் தருவதாகக் கருதினால்'' புறப்பட்ட நேரம் முதல் எத்தனை தடவை கால்களைக் கழுவுவது? கோபுர வாசலை அடைந்தவுடன் குருக்கள் ஐயா பாத தீர்த்தம் முறைப்படி தருகின்றாரென்பதை இவர்கள் மறந்து விட்டனரா? ஆதலில் மிக நீண்ட காலமாகக் குழப்பி வருகின்ற இந்த முரண்பாட்டைச் சைவ சமயப் பேரறிஞர்கள் விளக்கமாகத் தீர்த்து வைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**எஸ்.முருகையா, யாழ்ப்பாணம்.**

## நடவடிக்கை எடுப்பார்களா?

இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பெண்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

அதேவேளை தனியார்துறை யில் வேலை செய்யும் பெண்களை மாலை நேரங்களில் தாமதமாகவே வேலை முடிந்து வீடு செல்வதற்கு தொழில் வழங்குநர்கள் அனுமதிக்கின்றனர். இதனால் பெண்கள் இருளில் வீடுசெல்ல நேரிடுகின்றது. இதனால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பாதுகாப்பு கேள்விக்குரியதாகின்றது. தற்போது மழைகாலம் நேரத்துடன் இருண்டு விடுகிறது. இதனால் நேரகாலத்துடன் வீடு செல்ல அனுமதிக்க வேண்டும். (பெண்களை மட்டும், மாலை 5.00 மணிக்கு முன்)

குறிப்பாக வெளிநாட்டு நிறுவனம், தென் இலங்கை ஒப்பந்தக்காரர்கள் இவ்வாறு செய்கின்றனர். இதற்கு சம்பந்தப்பட்ட/ பொறுப்புடைய அதிகாரிகள் மூலம் தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

**பாதிக்கப்பட்ட பெண்.**

## சைவ வழி தாயகபூமி

தமிழர்களின் தாயகபூமி ஒன்பது மாவட்டங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பெரிய சிவன் கோயிலை அமைக்க வேண்டும். புத்தர் சிலையை வைத்து எங்கள் பூர்வீக பூமியை அபகரிக்க நிற்கும் சிங்கள அரசுக்கு எதிராகச் செயற்பட வேண்டும். புத்தர் ஒரு மனிதரே, இறையருள் பெற்ற இறை தூதுவராவார், ஆனால் கடவுள் அல்ல. சிவன் பிறப்பு, இறப்பு மூப்பு, ஆதி, அந்தம் இல்லாத கடவுள் சைவத்தின் முழுமுதற் கடவுளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெரிய சிவன் கோயிலை அறுபத்து மூன்று நாயன்மார் சிலையுடன் நிறுவுதல் காலத்தின் தேவை யாகும்.

யாழ். மாவட்டத்தில் ஈழத்துச் சிதம்பரம், நகுலேஸ்வரர் என இரண்டு பெரிய சிவன் கோயில்கள் உள்ளன. சிவனுக்குக் கோயில் இல்லாத மாவட்டத்தில் மாத்திரம் பெரிய கோயிலை அமைக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டம், வவுனியா, புத்தளம், அம்பாறை போன்றவற்றில் வேண்டும். மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கோயில்கள் உள்ளன. நாங்கள் எங்கள் இடங்களில் எங்கள் கோயில்களை கட்டுகிறோமா? ஏன் எங்கள் இடங்களில் புத்தர் சிலைகளை வைத்து எங்கள் பண்பாட்டை அவமதிக்கிறார்கள்.

## இந்த நிலை என்று மாறும்......?

வசந்தபுரம் கொழும்புத்துறை கிராம மக்களின் மன வெதும்பல் இது. இழந்தோம், இழந்தோம், இருப்பிடத்தை இழந்தோம், இழந்த எமக்கு வசந்தபுர கிராம நிர்வாகம் செய்யும் துன்பமோ அதைவிட மேலானது. இதை யாரிடம் சொல்வது, எங்கு நீதி கேட்பது எதுவுமே புரியவில்லை. நாமும் அந்தக் கிராமவாசி என்பதால் சில சில குற்றங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எதற்கெடுத்தாலும் பண வசூலிப்பு. ஆனால் கணக்கு ரீதியாக மக்களுக்கு எதுவும் தெரியப்படுத்துவதில்லை. பாதை திருத்தம் 850 ரூபா, காணி அளந்து கட்டை போடுவதற்கு 500 ரூபா, ஒரு கிராமசேவையாளரால் கொடுக்கப்படும் படிவம் கூட 10 ரூபா.

பெரியவர்களும் கூட வந்து கூட்டம் வைக்கிறார்கள். நடைமுறை இது என்பதை விளக்குகிறார்கள். ஆனால் கிராம சங்கம் எனும் பேரால் பெரும் ஊழல்கள் வெளியிடங்களில் இருந்து வரும் உதவிகள் கூட முகம்பார்த்து செய்யும் அவலம். இதை யார் தட்டிக் கேட்பது. யாரிடம் சொல்வது. அதைவிட ஒரு பெரிய சம்பவம் என்னவென்றால் 13.11.2011 சங்கத்தால் அறிவிக்கப்பட்டது. அவரவர் வீட்டுக்கு முன்னால் நின்று படம் பிடிக்க வேண்டும் என்று. வெளியிலும் சரி வீட்டில் ஒரு நிகழ்வு நடந்தாலும் சரி ஒரு படக் கூலி 50 ரூபா. ஆனால் இங்கு படம் பிடிப்பதற்கு ஒரு படத்துக்கான அறவீடு 250 ரூபாவாக இருந்தது.

அந்தப் படப்பிடிப்பாளருக்கு இப்படித்தான் நீங்கள் வேண்ட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அதே சமயம் அங்கு இன்னொரு பகுதி படம் பிடித்தார்கள். 100 ரூபா வீதம் கொடுத்தனர். இது எந்த வகையில் நியாயம்.

கிராமத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் சங்கம் அமைத்தால் அது 'ரேட்' பேசும் சங்கமாகிவிடும். இதை தட்டிக் கேட்கும் சந்தர்ப்பத்தில் மக்களைக் குறை கூறி விடுவதுடன் சங்கத்தைக் கலைத்தும் விடுவார்கள்.

ஒரு கிராமம் முன்னேற அதைக் கட்டி எழுப்ப நினைப்பவன் எவராக இருந்தாலும் சுயநலம் அற்று செயற்படவேண்டும்.

**கிராம வாசிகள், வசந்தபுரம்.**

தருவது
வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
பால்ய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். சிக்கலில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு அவசர உதவி செய்வீர்கள். வேலை நெருக்கடிகள் குறையும். சக ஊழியர்களிடம் சொந்த விடயங்களைப் பற்றி பேசி மகிழ்வீர்கள். கடன் மிகுதி ஒன்றைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். சுகமான அனுபவங்களைப் பெறலாம்.

**இடபம்:**
உங்களின் வேலை ஒன்றை மற்றொருவர் மூலம் முடித்துக் கொள்வீர்கள். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் பட்டும்படாமல் நடந்து கொள்ளலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கைக் காட்ட முற்படுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு.

**மிதுனம்:**
திட்டமிட்ட ஒரு வேலை முடியாமல், மற்றொரு வேலை முடியலாம். நீங்கள் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் உறவினர்கள் கையை விரிக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மருத்துவச் செலவு நேரும்.

**கடகம்:**
ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். ஒரு விடயம் பற்றி பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி, அது தகர்ந்து போகலாம். உறவினர்கள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சபலங்களால் சங்கடங்களுக்கு ஆள்படலாம். பண விடயங்களில் எதிர்பார்த்தது நடக்காமல் போகலாம். பயணங்களில் தடை, தாமதம் நேரும்.

**சிங்கம்:**
பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். நண்பர்கள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். சக ஊழியர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்ப நன்மை கருதி அதிரடியாக சில காரியங்களைச் செய்வீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**கன்னி:**
ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனக் குழப்பங்கள் இல்லாமல் எதிலும் தைரியமாக முடிவு எடுப்பீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**துலாம்:**
செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டிய நாள். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். நண்பர்கள் சிலர் தங்களின் மனக் குறைகளை உங்களிடம் சொல்லிப் புலம்பலாம். சில காரியங்கள் நடப்பது போலத் தோன்றி, இறுதியில் நடக்காமல் போகலாம். மனச்சோர்வு உண்டாகும்.

**விருச்சிகம்:**
நீங்கள் சொல்வதைக் கேட்காமல் செயற்படும் சிலர் மீது கோபம் கொள்ள நேரிடலாம். பயணங்கள் சந்தோஷம், உற்சாகம் தருவதாக அமையும். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். கால நேரம் பார்க்காமல் கடுமையாகப் பணியாற்ற நேரிடலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.

**தனுசு:**
பல நாள்களாக பிற்போட்ட வேலை ஒன்றை இன்று முடிப்பீர்கள். பெண்கள் வகையில் அனுகூலமான உதவி கிடைக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். உறவினர் ஒருவருடன் சேர்ந்து மற்றொரு உறவினர் வீட்டுக்குச் செல்லலாம். எதிர்பார்த்த புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். பணவரவு உண்டு.

**மகரம்:**
அவசரச் செலவுகளுக்காக பிறரிடம் பணம் கடன் வாங்கலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். சிலரின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம்.

**கும்பம்:**
சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். நண்பர் ஒருவருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். மற்றவர்களின் செயற்பாடுகளைப் பார்த்து ஆதங்கம் அடைவீர்கள். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்கலாம். நினைத்த ஒருவரை சந்திக்க முடியாமல், நின்னக்காத ஒருவரைச் சந்திக்கலாம்.

**மீனம்:**
குறுக்கு வழிச் சிந்தனைகளைதத் தவிர்த்து எதிலும் நேர்மையாகச் செயற்பட வேண்டும். நீங்களே தெரியாமல் சில தவறுகளைச் செய்து விட்டு, மற்றவர்களை குறை சொல்வீர்கள். நினைத்த வேகத்திற்கு சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

# புத்தகசாலை

## நூல்: விநாயக புராணம்
## வெளியீடு: அருளானந்தப் பிள்ளையார் கோயில்



விநாயக புராணம் எனம் நூல் காரைநகர் புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயிலின் வெளியீடாகும். அகர ஓங்கார வடிவினரான விநாயகப் பெருமானின் கதையைக் கூறும் புராண இதிகாச சமய நூல் இதுவாகும். புராணம் என்பது பழங் கதை எனக் கூறப் பட்டாலும் அவை தத்துவ சித்தாந்தங்களை நேரடியாகக் கூறாமல் குறிப்பாக பக்தி மார்க்கத்தை வளர்ப்பதாக சொல்லப்படுகின்றது. புராணக் கதைகளில் நன்னெறி சார்ந்து ஒழுகும் பண்பு வலியுறுத்தப்படுகின்றது. அத்தகைய ஒழுக்க நெறியை விநாயக புராணத்தில் நாம் படித்துப் பயன் பெறத்தக்க படலங்கள் நிறையவே உள்ளீன.

விநாயகப் பெருமானின் மகிமை, அவரது அவதாரப் பெருமைகள், அவரை நோக்கி அனுஷ்டிக்கும் விரதங்கள், அவரை வழிபட்டு நற்கதியடைந்தோரின் விவரங்கள் எனப் பெருமானின் புராணத்தில் நிறைவான விடயங்கள் பல உள்ளன.

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த கச்சியப்ப சுவாமிகள் பாடிய இப்புராணம், முத்துச்சாமி முதலியாரால் வசன நடையில் எழுதப்பட்டது. பின்னர் புராணப்பாடல்கள் சிலவற்றையும் சேர்த்து விநாயக புராணம் என அச்சிடப்பட்டதாக அறியப்படுகிறது.

இந்நூல் கிடைப்பது அரிது என்ற நிலையில் காரைநகர் தங்கோடை த.சிவானந்தராசா சைவ அடியார்கள் சார்பாக அச்சிட்டு 2011 இல் வழங்கியுள்ளார்.

1076 பக்கங்களைக் கொண்ட இப்பெரியநூல் தியான மந்திரங்களையும் சுலோகங்களையும் கொண்டு வெளிவந்துள்ளது. இது சைவப் பெரியார்களுக்கும் அவர்களின் பக்திச் சிறப்புக்கும் மேலும் உதவும் வகையில் வெளிவந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும். பண்டைய புராணங்கள் அழியாது காக்கப்படப் புராண நூல்கள் மீண்டும் அச்சிடப்படல் வேண்டும் என்பதை பார்க்கவ புராணமென்னும் விநாயக புராணம் வலியுறுத்துகிறது.

-மகேஷ்-

## நூல்: 'கலைமுகம்' காலாண்டுச் சஞ்சிகை
## வெளியீடு: திருமறைக் கலாமன்றம்




திருமறைக் கலாமன்றத்தின் கலை இலக்கிய சமூக சஞ்சிகையான கலைமுகம் 52வது ஜூலை - செப்ரெம்பர் 2011,இதழ், எமது கைகளில் கிடைத்துள்ளது. அதன் அழகிய அட்டையுடன் ''அழியாத் தடம் பதித்த பேராசிரியர் கா.சிவத்தம்பி'', ''ஒளி நிழலில் ஓர் ஆத்ம தரிசனம்'',''விழித்திரைப் பயணிப்புகளில்'' ஆகிய ஆக்கங்களைச் சுட்டும் வண்ணம் சஞ்சிகையின் உள்ளடக்கத்தை விளக்கும் வகையிலான வண்ணப்படங்கள் மனதைக் கவருகின்றன.

குழந்தை ம.சண்முகலிங்கத்தால் எழுதப்பட்ட ''பேராசிரியர் சிவத்தம்பியின் நாடக ஆளுமை'' எனும் கட்டுரையில் பேராசிரியரின் ஆளுமைச் சிறப்புகளை அரங்கச் செயற்பாடுகளில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டுடன் குழைத்துச் பொருள் பொதியச் சுவைபட விளக்கியுள்ளார்.

பேராசிரியரைப் பற்றிப் பேச எழுத மேலும் பல பக்கங்கள் உள்ளன என உணர்த்தி அவருடனான கலந்துரையாடல்களின்போது பெற்ற அறிவின் கனதியை அளவிட்டுப் புகழ இயலா நிலையில் பேராசிரியர் உவந்த மலரையே அவரது பாதத்தில் வைக்கிறேன் எனக் கூறும் கவிஞர் சோ.ப.வின் ''உடைந்தனன், உடைகிறேன் எந்தாய்!'' எனும் கட்டுரை உளந்தொட்டு நிற்கிறது. அத்துடன் ''கனவும் நனவாம் கதையும்'' எனும் பத்தியிலும் எஸ்.கே.விக்னேஸ்வரன் பேராசிரியரை நினைவுகூர்ந்தும் அவரது வாழ்வைப் பகிர்ந்தும் செல்லும் வகை அழியாத் தடம் பதித்த அமரர் அவரென்பதை உரத்துரைக்கின்றன

சஞ்சிகையில் இடம் பெற்றுள்ள மொழி பெயர்ப்புத் தவிர்ந்த ஒரேயொரு சிறுகதை தேவமுகுந்தன் எழுதியுள்ள ''இவன்'' என்பதாகும் . பட்டதாரியாகி வேலையின்றி அலையும் ஓர் இளைஞனைச் சுற்றி அவனைத் துரத்தும் உறுத்தும் விமர்சனங்களோடு அவனை விழுங்கும் சமூகத்தை, படிப்புக்கும் பார்வைக்கும் சிறுகதையாகத் தந்துள்ளார்.

இன்று வாழ்வில் பலரும் அனுபவிக்கும் துயரங்களை இலக்கிய வடிவில் வாசிக்கத் தந்து சிந்திக்கத் தூண்டியிருக்கும் சிறுகதை அது. நா.இராஜமனோகரன், கு.றஜீபன், எம்.ரிஷான் ஷெரிப், வே.ஐ.வரதராஜன், தாட்சாயணி, அனார், கலையார்வன், ச.டொ.விக்னேஸ், வேல்நந்தன், சத்தியமலரவன், யோகி, தனஞ்சயன், ஒளவை ஆகிய கவிஞர்களின் பல்நிலைப் பார்வைகளுடன் கூடிய கவிதைகள் மற்றும் பல இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

சுவைத்தேன் பக்கத்தில் பா.அகிலனின் ''கவிதைவெளியும் மொழியும்'' பற்றி, அதன் ஆழம் அகலம் நோக்கி அலசப்பட்டுள்ளது. பின் அட்டையில் திருமறைக்கலாமன்ற நாடகங்கள் இரண்டினது அழகிய காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

நீ. மரிய சேவியர் ஆசிரியராகக் கொண்டு ஈழத்து இலக்கியச் சீர்பெருக வெளிவந்துள்ள ''கலைமுகம்'' 52 ஆவது இதழ் முழுமையாக வாசிக்கத் தூண்டும் சஞ்சிகைச் சிறப்புடையதாகும்.

-மகேஷ்

## நூல்: சாரல் தூவும் மேகங்கள்
## வெளியீடு: தேடல் வெளியீட்டகம்




எமது சமூகத்தின் அசைவுகளைப் பரந்துபட்ட எண்ணப்பாடுகளுடைய கவிதை வரியாக வரிசைப்படுத்தி வெளிப்படுத்தி இருப்பது இந்தக் கவிதைத் தொகுப்பின் விசேட அம்சமாகிறது. வாழ்வின் தேடலில் நாம்பட்ட இன்ப, துன்பங்களை உடலில் இழையோடும் நரம்புகளின் ஊடே அசைவுகள் வெளிப்படுத்தி நிற்பது போல் ஒவ்வொரு பக்கமும் காணப்படுகிறது. இளமைப் பட்டாளத்தின் வருகையில் புது வரவாக நிமல்ராஜ் இடம் பிடித்திருக்கிறார். கவிதை வரிகளில் தனித்து நின்று தன்னை அடையாளப்படுத்தி இருக்கிறார்.

படிப்பவர்களின் மனப் பரப்பில் ஒரு உணர்வை உண்டுபண்ணிவிடும். அவர்களின் வாழ்வில் நடந்த எத்தனையோ சம்பவங்களில் ஒரு சம்பவமாவது ஒரு பக்கத்தில் நிரப்பி இருக்கும். இந்தக் கவிதைத் தொகுப்பில் தனக்கான ஒரு தேடலை ஒவ்வொரு மனங்களிலும் உண்டு பண்ணி விடும்.

அந்தளவுக்கு கவிதை வரிகள் ஒவ்வொன்றும் கருத்து நீரோட்டத்தில் தமிழர் பால் நின்று இலக்கியத் தடாகத்தில் தாமரை போல் விரிந்து பிரகாசிக்கிறது. இந்தத் தாமரைக் குளத்தில் பூவைப் பிடுங்கி முகர்ந்து பாருங்கள் எமது வாசம் புரியும்.

-செல்வா

**புத்தகசாலைப் பகுதிக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்பி வைத்தால் அவை தொடர்பான விவரம் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.**

# இவர்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகளா?

நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அடாவடித்தனங்களும், வன்முறை சம்பவங்களும் நாட்டின் கௌரவத்துக்கும் நாடாளுமன்றத்தின் இறைமைக்கும், செங்கோலின் மகத்துவத்துக்கும் பேணிப் பாதுகாக்கப்பட்ட பாரம்பரியத்தையும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் குண்டர்களின் குகைக் கூடாரமாக மாறிவருகின்றதோ என இங்கிருக்கும் சர்வதேச நாடுகளின் இராஜ தந்திரிகளும், உதவி வழங்கும் நாடுகளும், பொது மக்களும் ஏன் பாடசாலை மாணவர்களும் கூட விமர்சிக்கும் அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது நமது நாடாளுமன்றம்.

நாட்டில் அதியுயர் பீடமாகவும், தன்னாதிக்கம், தனித்துவம் மிக்க ஒரு புனிதமான இடம்தான் நாட்டையே ஆளும் நாடாளுமன்றம். அதனைத் தலைமையேற்று வழிநடத்தும் சபாநாயகர் அதி கௌரவத்துக்குரியவர்.

சபைக்குள் பிரவேசித்துவிட்டால் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ, எதிர்க்கட்சித் தலைவராகவோ, ஆளும் தரப்பு, எதிர்த் தரப்பு என்றில்லாமல் அனைவரும் இவ்வாறான செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர்.

ஆளும் தரப்பினர் சபை முதல்வர் மற்றும் ஆளும்கட்சியின்பிரதம கொரடா.ஆகியோரதும் எதிர்க்கட்சியினர் எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவின் கட்டுப்பாட்டிலும் வழிநடத்தலிலும் செயல்பட வேண்டும். இது சம்பிரதாயமும் கூட்டுப் பொறுப்புமாகும். ஆனால் இவையெல்லாம் இப்போது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன.

1947 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் தனிக்கட்சிகளினதும் பின்னர் கூட்டணிக் கட்சிகளினதும் அதிகாரத்தின் கீழ் ஆளப்பட்டுவந்துள்ளது. சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராக தேசப்பிதா என்று அழைக்கப் பட்ட டி.எஸ்.சேனாநாயக்க, எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, டட்லி சேனாநாயக்க, கலாநிதி தஹநாயக்க, ஜேஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, சந்திரிக்கா குமாரதுங்க, டி.பி.விஜேதுங்க, ரணில் விக்கிரசிங்க ஆகியோர் பிரதமர்களாகவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச ஆகியோர் ஆட்சிப்பொறுப்பை ஏற்று வழி நடத்தி வந்துள்ளனர்.

சுதந்திரம் பெற்ற நாள் முதல் காலி முகத்திடலில் இயங்கி வந்த நாடாளுமன்றம் இன்று தியவன்னா ஓயாவின் மத்தியில் அமைந்துள்ள நாடாளுமன்ற கட்டடத்துக்கு இடம் மாறிய பின் பல சோதனைகளும் வேதனைகளும் இடம்பெற்று வருகின்றன.

அங்கு கடும் பாதுகாப்பு இருந்தும் கூட நாடாளுமன்றத்தில் கைக்குண்டு வீசப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் கீர்த்தியின் உயிர் பறிக்கப்பட்டது, சிரேஷ்ட தலைவர்கள் பலர் காயமடைந்தனர், சிலர் மயிரிழையில் உயிர்தப்பினர். இது புதிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற முதலாவது துர்சம்பவம். நாடாளுமன்ற வன்முறைக்கு இது பிள்ளையார் சுழி போட்டது போல் அமைந்துவிட்டது. தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கசப்பான சம்பவங்களும், நமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சண்டித்தனமும் நாடாளுமன்ற புனிதத்தை குட்டிச் சுவராக்கி வருகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார துணிச்சலாகவும் அப்பட்டமாகவும் எதையும் பேசக்கூடிய ஒருசமசமாஜவாதி- இவர் தாக்கப்பட்டார். எதிரிகளாலே, வெளியில் இருந்து வந்த காடையர்களாலோ அல்ல. மக்களால் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட சக உறுப்பினர்களாலேயே தாக்கப்பட்டார்.

இதோடு நின்று விடவில்லை. நாடாளு மன்றம் ஒரு புனிதமான மங்கலகரமான இடம். சபாபீடம். ஒரு கோயிலின் கருவறை போன்றது. ஆனால் இந்தப் சபாபீடத்தின் மலர் வளையத்தைக் கொண்டுவந்து எதிர்க் கட்சித் தலைவரின் ஆசனத்துக்கு முன் வைத்தனர்.

பிரேதப் பெட்டியைக் கொண்டு வந்து சபை நடுவே வைத்து ஒப்பாரி வைத்தனர். அதாவது நாடாளுமன்றத்தையே ஒரு மரணவீடாக்கி மாறாத வடுவை ஏற்படுத்தி விட்டனர்.

என்றாலும் என்ன செய்வது அதி.வணக்கத்துக்குரிய பிக்குமார்கள் இந்த சபைக்குள்வைத்தே விரட்டிவிரட்டித்தாக்கப்பட்டனர். அவர்களின் ஆடைகள் கிழிக்கப்பட்டன. தாக்குதலுக்கு உள்ளான பிக்கு வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நிலை ஏற்பட்டது. அவருடைய மர்ம உறுப்பில் ஏற்பட்ட தாக்கம் சிறுநீர்கழிக்கக் கூட முடியாது சிரமப்பட்டார். அந்த மதகுரு பட்ட வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

தாக்குதல் சம்பவங்கள் ஒரு பக்கமிருக்க சபைக்குள் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இனப்பிரச்சினை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க முன்வைத்த தீர்வுப் பொதியை ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலானவர்கள் சபை நடுவே தீ வைத்துக் கொழுத்தினர். இது மறக்கவே முடியாத ஒரு சம்பவம்.

நாடாளுமன்றத்தின் மகத்துவத்தையும் நல்லாட்சியையும் உறுதிப்படுத்தும் ஓர் உயர் அந்தஷ்த்துக்குரியதுதான் செங்கோல். அந்த செங்கோலையாவது விட்டுவைத்தார்களா இந்த மக்கள் பிரதிநிதிகள்.

இந்த சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக ஜனாதிபதியின் முன்னிலையில் அண்மையில் அரங்கேற்றப்பட்ட சம்பவம் சிகரம் வைத்ததுபோல் அமைந்து விட்டது.

நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் எத்தனையோ வரவு செலவுத்திட்டங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆளும் தரப்பினரும் எதிர்த் தரப்பினரும் கூறுவார்கள். அழைக்கப்பட்ட பிரமுகர்கள் என பல தரப்பட்டவர்களும் பார்வையாளர் சபையில் நிறைந்து காணப்படுவர். நாடாளுமன்றத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதில் இருதரப்பினருமே கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியம்.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரும் விசேட நுழைவாயிலில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன குழப்பத் துக்கு உள்ளாக்கப்பட்டார்.

தொடர்ச்சியாக வரவு செலவுத்திட்டத்திற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெட்கம் வெட்கம் என பொறிக்கப்பட்ட பதாகைகளை உயர்த்திப் பிடித்த வண்ணம் அமைதியாக நின்றனர்.

இது அமைச்சர்கள் உட்பட ஆளும் தரப்பினருக்குப் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்திவிட்டது. ஜனாதிபதியின் கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் மீறி எதிர்க் கட்சியினர் மீது தாக்குதல்களை நடத்தினர்.

இந்த சம்பவத்தின் எதிரொலியாக ஆளும் தரப்பைச் சேர்ந்த பிரதி அமைச்சர் ஒருவர் நாடாளுமன்ற அமர்வுகளில் ஒரு வாரகாலத்துக்கு சமூகமளிக்க.முடியாது என சபாநாயகரால் விதிக்கப்பட்டது.

எமது மக்கள் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிகளான இவர்கள் இப்படிக் குண்டர்களாக மாறிவிடுவதுதான் வேதனை. முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டியவர்கள் இனிமேலாவது விமர்சனத்திற்கு ஆளாகாமல் பொறுப்புடன் நடந்து கொண்டால் நாட்டிற்கும் நமக்கும் கௌரவமாகும்.

-சிகாமணி

# சிவாச்சாரிய மரபில் தனக்கென தனியிடம் வகித்த நித்தி ஐயா

சங்கானை ஊரின் அடையாளமாக வாழ்ந்து மறைந்த கலாநிதி சிவப்பிரம்ம ஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியாரின் வருஷாப்திக (ஓராண்டு) தினம் (04.12. 2011) நாளையாகும்.

'ஆச்சாரியார்', 'குரு' 'ஆசான்' என்பவர்கள் ஒழுக்க நெறிகளில் உயர்ந்து நின்று சமூகத்துக்கு முன்மாதிரியானவர்களாக வாழ வேண்டும் என வேதங்கள், ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

இவ்வித சீரிய வாழ்வு வாழ்ந்து தனக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும்படியாக தம் வாழ்நாளை எமது ஊரவருக்காக அர்ப்பணித்து, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கும்பாபிஷேகம், மஹோற்சவங்கள், யாகங்கள் நடத்தி வைத்து எமது ஊரின் அடையாள முகவரியாகத் திகழ்ந்து, இடை நடுவில் இன்னுயிர் பறிக்கப் பெற்றவர், எம் அன்புக்குரிய ''நித்தி ஐயா''. சங்கானையின் குரு பாரம்பரியத்திலே குரு பரம்பரையின் 'எட்டாந் தலைமுறை' யைச் சேர்ந்த எங்கள் நித்தி ஐயா, இலுப்பைத் தாழ்வு வெல்வில் வேலனையும், சங்கானை கூடத்து மனோன் மணி அம்பாளையும், எமது அயல் பிரதேசங்களிலுள்ள இன்னும் பிற ஆலயங்களையும் சந்ததி சந்ததியாக ஆராதித்து வந்த ஒரு குடும்பத்திலே 1953 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி பிறந்தவர் நித்தி ஐயா. மிகச் சிறு வயது முதலே ஆச்சார வழி முறையில் ஒரு சிவாச்சார் யாருக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் சீதாராம சாஸ்திரிகள் மற்றும் 'நாயன் மார்கட்டு ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார் யாரிடத்தும் கற்றுத் தேர்ந்தவர்.

அந்தணர்களுடைய ஒழுக்கம் விழுப்பம் தருவதாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் வழியிலே வாழ்ந்து காட்டியவர் எம் குருக்கள் ஐயா. எமது கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்திலே 1975 ஆம் ஆண்டளவில் ''ஈசான சிவாச்சார்யார்'' எனும் தீக்ஷா நாமத்துடன் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யாரினாலே ஆச்சார்யாபிஷேகம் செய்யப் பெற்றவர். அன்னாரின் வேதாகம கிரியா நெறி முறைகளையும் விற்பன்னங்களையும் வெளிக்காட்டிய கோயில் நிகழ்வுகள் பல நூறு.

எமது ஊரிலும் அயற்கிராமங்களிலுமுள்ள பெரும்பாலான ஆலயங்களும் ஐயாவினாலே குட முழுக்குச் செய்யப் பெற்றவை.



சுனாமிப் பேரழிவில் உயிரிழந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக, சண்டிலிப்பாய் இரட்டையர்புலம் ஞான வைரவர் கோவிலிலே 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ''அஸ்வமேத மஹாயாகத்தினை'' தலைமையேற்று நடத்திக் கொடுத்தவர். இவை தவிர இலங்கையின் மலையகப் பிரதேசத்தின் பல ஆலயங்களிலும், கிழக்கிலங்கையிலும், கொழும்பு மாநகரிலும் 20 ற்கும் மேற்பட்ட குடமுழுக்கு வைபவங்களை நிகழ்த்தி வைத்தவர்.

அன்னாரின் வித்துவத் திறனுக்கு அவர் பெற்ற பட்டங்களான சிவாச்சாரிய திலகம்,சிவாகமஞானி என்பவை




சான்று பகரும். ஒழுக்க சீலமும் நற்குணங்களும், ஆற்றலும் வாய்ந்த ஒரு குரு பாரம்பரியத்தினை தனக்குப்பின் உருவாக்கிய பெருமைக்குரியவர், ஐயா அவர்கள்.

சமய குருமாரின் வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும். இகபர நன்மைக்காக செயலாற்றுவதால் பூரணமான அறிவு நிறையப் பெற்றவர்களாக விளங்குதல் வேண்டும் என்பதற்கமைய நடைமுறை வாழ்க்கையை சீரிய முறையில் வாழ்ந்து காட்டியவர்.

இவ்வாறாக சிவாச்சாரிய பரம்பரைக்கு உதாரண புருஷராய் வாழ்ந்து சிவாச்சாரிய மரபிலே தனக்கெனத் தனியிடம் வகுத்துக் கொண்ட எங்கள் ஐயாவின் வாழ்வு இடைநடுவில் பறிக்கப்பட்ட சம்பவம் கொடுமையானது. இன்றைய நாளிலே ஐயாவின் ஆன்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் நினைவுகளையும் ஒருகணம் மீட்டிப் பார்ப்போம்.

த.ஜெகதீஸ்வரன்,
சங்கானை

# மக்கள் முகம்



29 வருட காலமாக அரச நிர்வாக சேவையில் கடமையாற்றி வரும், கைதடியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் ஜெயபாலசந்திரன் சமாதான நீதிவானாக நவம்பர் மாதம் 22 ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். 1982 ஆம் ஆண்டு கொழும்பு, பிரதேச அபிவிருத்தி அமைச்சில் கடமையை தொடங்கி பின்னர் வவுனியா மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் கிளையிலும் அதன் பின்னர் யாழ்.மாவட்ட செயலகத்திலும் கடமையாற்றினார்.

யுத்த காலங்களில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கடமையாற்றியதுடன் மக்களுக்கான பல்வேறு உதவிகளை வழங்குவதிலும் முன்னின்று செயற்பட்டார். அதன் பின்னர் யாழ்.மாவட்ட செயலகத்தில் இணைந்து கொண்ட இவர் தற்போது அரச அதிபரின் பிரத்தியேக செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

---



இலங்கை வாழ் சைவ நெறியினர் சைவ சித்தாந்தக் கோட்பாட்டை தமது வாழ்வியல் தத்துவமாக வரித்துக் கொண்டுள்ளனர்.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் சைவ சித்தாந்தக் கோட்பாடு சிலவற்றில் ஒரு கற்கைநெறியாக ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்தக் கோட்பாட்டில் பட்டம் பெற கற்கை வசதிகள் உண்டு.

தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் சைவசித்தாந்த ஆய்வுக்கு முனைவர், பட்டம் வழங்குவது நடைமுறையாகும்.

சைவசித்தாந்தத்தை வாழ்வியல் நெறியாக ஏற்றுக்கொண்டுள்ள பொழுதிலும் இந்தத் துறையில் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமை செல்வி நந்தினி சண்முகலிங்கத்தையே சாரும்.

கலாநிதிப்பட்டம் பெற்ற கலாநிதி நந்தினி சண்முகலிங்கம் தமது பல்கலைக்கழகக் கல்வி அனைத்தையும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார்.

முதுகலைப் பாடநெறிக்கு சைவசித்தாந்தத்தை முதன்மைப் பாட நெறியாகக் கொண்டு தேர்ச்சி பெற்றார்.

முதுகலைப் பாடநெறித் தேர்ச்சியைத் தொடர்ந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கு பதிவு செய்து கொண்ட செல்வி நந்தினி பேராசிரியர் வை.இரத்தினசபாபதி அவர்களின் வழிநடத்தலின் கீழ் சைவசித்தாந்தத்தில் இந்த ஆண்டு நவம்பர் திங்களில் 4 ஆம் நாள் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கையர் ஒருவர் சைவசித்தாந்தத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற முதல் மாணாக்கர் என்ற பெருமையை யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபைத் தலைவர் த். சண்முகலிங்கம் அவர்களின் கனிஷ்ட புத்திரி நந்தினி அவர்கள் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

# பிரதேச செயலகம் - கரவெட்டி

## தேசிய விருது பெற்றமைக்கான அகமகிழ்விழா - 2011.12.03

## பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டி - 2009/2010

## இரண்டாம் இடம்

### கரவெட்டி பிரதேச செயலகத்தின் முக்கிய அடைவுகள்

1. பிரதேச செயலகத்திற்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு புதிய கட்டடம் அமைக்கப்பட்டமை.
2. ஆட்பதிவுத்திணைக்களம், சமூகப் பாதுகாப்பு நிலையம், விதாதா வளநிலையம் என்பன அமைக்கப்பட்டமை.
3. யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதி அகலமாக்கல் நடவடிக்கைகள்
4. உலக வங்கி வீட்டுத்திட்டத்தின் ஊடாக 847 பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டங்கள் பெற்றுக் கொடுத்தமை.
5. கப்புதூ கரணவாய் இணைப்பு வீதி அமைக்கப்பட்டமை
6. சமுர்த்தி கொடிவார நிதி சேகரிப்பில் தேசிய மட்டத்தில் 2009இல் 4ஆம் இடத்தையும், 2010 இல் 2ஆம் இடத்தையும், 2011 இல் 4ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டதுடன், யாழ் மாவட்ட மட்டத்தில் 2006 இலிருந்து 2011 வரை தொடர்ச்சியாக முதலாம் இடத்தைப் பெற்றமை.
7. சமுர்த்தி கொடி தினத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நிதியிலிருந்து சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களின் க.பொ.த(உ/த) கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 500.00 வழங்கும் வேலைத்திட்டம் கடந்த 05 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை.
8. சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தில் இதுவரை 5207 பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ளதுடன், 2008ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமை.
9. பிரதேசத் தகவல்கள் உள்ளடக்கிய வரலாற்று ஆவணமாகிய திருவுடையாள் – 1, 2, 3 பிரதேச மலர்கள் வெளியிடப்பட்டமை.
10. ஆலயங்களின் வரலாறுகளையும், முக்கிய விழாக்களையும் முக்கியத்துவப்படுத்தும் ஆவணப்பதிவான "சிவநெறி" நூல், மற்றும் சிவநெறி இறுவட்டு 1, 2 வெளியிடப்பட்டமை.






## பிரதேச செயலகம் கரவெட்டி

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



மக்களது அடிப்படைத் தேவைகளையும் மற்றும் தேவைகளையும் நிறைவேற்றுபவர்களில் பிரதேச செயலாளர்களும், அவர்களின் கீழ் பணியாற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்களும் முக்கிய இடம் வகிக்கின்றனர். அரசின் நிர்வாகத்தையும் அதன் கொள்கைகளையும் சிறப்பாகவும், வினைத்திறனுடையதாகவும் செயற்படுத்துவது இவர்களிலேயே முற்றிலும் தங்கியுள்ளது. மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சித் திணைக்களங்கள், உள்ளூர் நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேணி மக்களுக்கு ஆக்கபூர்வமான சேவையை வழங்குவது இவர்களது முக்கிய பொறுப்பாக உள்ளது.

இந்த வகையில் மக்களின் தேவைகளை நிறைவேற்றி, நல்லுறவைப் பேணி, அனைத்துத் தரத்தினரையும் ஒருங்கிணைத்து வினைத்திறன் மிக்கதான சேவையை வழங்கி வருகின்ற சிறந்த பிரதேச செயலகம் என்ற அடிப்படையில் கரவெட்டிப் பிரதேச செயலகம் 2010ம் ஆண்டிற்கான அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் 15 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய யாழ் மாவட்டத்தில் 1ம் இடத்தைத் தட்டிக்கொண்டதுடன் 325 பிரதேச செயலகங்களிடையே போட்டியிட்டு அகில இலங்கை ரீதியில் 2ம் இடத்தைப் பெற்று எம் மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.


இம் மாவட்ட வரலாற்றில் முகாமைத்துவத்திறன் பொருட்டு தேசிய ரீதியில் இச்சிறப்புக் கிடைத்தமையும், அதற்கான பரிசிலை அதிமேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் வழங்கிக் கௌரவித்தமையும் இதுவரையில் கிடைத்திராத பெரும் பேறாகும்.

யாழ் மாவட்ட நிர்வாக வரலாற்றில் பொன்னெழுத்தால் பதியப்பட வேண்டிய ஒரு பதிவைப் பொறித்து இம் மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த கரவெட்டி பிரதேச செயலாளர் திரு.எஸ்.சத்தியசீலன் மற்றும் அவரின் கீழ் கடமையாற்றும் சகல தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்களை வாழ்த்தி அவர்கள் பணி மேலும் சிறப்புற்று மக்கள் மேலும் வளம் பெற்று வாழச் சேவை செய்யப் பாராட்டி இம் மாவட்டத்தில் உள்ள ஏனைய பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் இவர்களைப் பின்பற்றி சேவைசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இம் மாவட்டத்தின் நிர்வாக முகாமைத்துவப் பணி சிறப்புற எல்லோரது அர்ப்பணிப்பான பங்களிப்பு தேவையெனக் கேட்டு அதனோடு தொடர்புடைய சகலருக்காகவும் இறை ஆசீருக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலர்
யாழ் மாவட்டம்.

### பிரதேச செயலாளரின் செய்தி



பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் பிரதேச செயலகங்களுக் கிடையில் நடாத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் எமது செயலகம் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றிருப்பது வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மகத்தான சாதனையாகும். எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட்கடாட்சத்துடன் அர்ப்பணிப்பு மிக்க சேவையினை மக்களைத் திருப்தியடையக்கூடிய விதத்தில் வழங்கிவரும் எமது உத்தியோகத்தர்களின் கடின உழைப்பில் விளைந்த பயனே இம்மாபெரும் கௌரவமாகும்.

"மக்கள் சேவை மகேசன் சேவை" என்ற வாக்கிற்கு இணங்க எம்மை நாடி வரும் மக்களின் தேவையறிந்து அவற்றை நிறைவு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக இத்தேசிய ரீதியான அடைவு எட்டப்பட்டிருக்கின்றது. வினைத்திறனும், பயனுறுதியும் மிக்க பொதுச்சேவை என்ற எமது தாரக மந்திரத்திற்கு அமைவாக அனைத்துத் துறைகளிலும் மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய உயரிய சேவையினை வழங்க வேண்டியது எமது கடப்பாடாகவுள்ளது.

எமது நாட்டினை ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக உருவாக்கும் தூர நோக்கில் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் எமது பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப்பணிகளை ஒன்றிணைத்து நடைமுறைப்படுத்தி வரும் மாண்புமிகு அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள், எமது மாவட்ட அபிவிருத்தியில் அக்கறையுடன் செயற்பட்டுவரும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி அவர்கள், யாழ்மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அவர்கள் மற்றும் இராணுவ உயரதிகாரிகள், எமது பிரதேச அபிவிருத்தியில் அக்கறை காட்டிவரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் அவர்கள், யாழ் மாவட்டத்தின் ஏனைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், எமக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் மேற்கொண்டு வருவதுடன் பிரதேச அபிவிருத்தியிலும் பெரும் பங்காற்றிவரும் எமது மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும் எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் சகல திணைக்களங்கள், இராணுவ, பொலிஸ் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கிராம மட்ட சமூக அமைப்புக்கள் ஆகியவற்றின் ஆதரவும் பங்களிப்பும் எமது இவ் உயர் கௌரவத்திற்குக் காரணமாகும் என்பதனைத் தெரிவிப்பதுடன் இவ்வனைவருக்கும் அமைப்புக்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது அலுவலகத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எமது பிரதேசத்தில் பக்கபலமாகவிருந்து முழுமையான ஒத்துழைப்பினையும், பங்களிப்பினையும் வழங்கிவரும் வடமராட்சிப் பிரதேச கல்விச் சமூகத்தினர், அனைத்துத் திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், வங்கி முகாமையாளர்கள், வங்கியாளர்கள், இப்பிரதேசப் பொதுமக்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்..

எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கிவரும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள். ஆலய பரிபாலன சபையினர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக சமூகத்தினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையான பங்களிப்பினை வழங்கி வரும் கலாசார பேரவை உறுப்பினர்கள், சைவ ஆலோசனைச் சபை உறுப்பினர்கள், திருவுடையாள் மலர்க்குழு, சிவநெறிக்குழு, சமுர்த்தி சமூக மன்று, விளையாட்டு அபிவிருத்திக்குழு ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தேசிய கௌரவத்தினை நாம் பெற்றுக் கொள்வதற்கு தமது அர்ப்பணிப்பு மிக்க சேவையினை வழங்கிவரும் எமது செயலக பதவிநிலை அலுவலர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம சேவை அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் ஏனைய ஊழியர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியும் பங்களிப்புமே காரணமாக அமைந்துள்ளதனை பெருமையுடன் நினைவுகூருவதுடன் அவர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து இக்கௌரவத்தினை அனைவருக்கும் காணிக்கையாக்குகின்றேன்.

சி.சத்தியசீலன்,
பிரதேச செயலாளர், கரவெட்டி.

நெல்லியடி வாணிபர் கழகம்

கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்

சமுர்த்தி சமூக மன்று, பிரதேச செயலகம் கரவெட்டி

கிராம அபிவிருத்திச் சங்கம், கரவெட்டி

எமது கரவெட்டிப் பிரதேச செயலகம் முகாமைத்துவ மதிப்பீட்டில்
தேசியரீதியில் அடைந்த வெற்றியினாலும் பெற்றுக்கொண்ட விருதினாலும்
பிரதேச மக்கள் பெரிதும் அகமகிழ்கின்றோம்.
இந்த இணைந்த பணியில் விளைந்த வெற்றிக்காக
எமது பிரதேச செயலர் திரு.சி.சத்தியசீலன் அவர்களையும்
அவரோடிணைந்து அர்ப்பணிப்புடன் பணிபுரிந்துவரும்
அனைத்து அலுவலர்களையும் பணியாளர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கரவெட்டி

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம்

ஹற்றன் நஷனல் வங்கி, நெல்லியடி

இலங்கை வங்கி, நெல்லியடி

மக்கள் வங்கி, நெல்லியடி

### மூதூர் ஆசிரியை கொலையின் எதிரொலி:

# வனாந்தரப் பகுதி பாடசாலை ஆசிரியைகளை நகரப் பாடசாலைகளுக்கு இடமாற்றத் தீர்மானம்

மூதூர், டிசெ.3

மூதூர் கிழக்கில் வனாந்தரப் பகுதியை அண்மித்துள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் பெண் ஆசிரியைகளைத் தற்காலிகமாக மூதூர் நகர்ப்புறப் பாடசாலைகளில் இணைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெரும் பதற்றத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ள மூதூர் தமிழ் ஆசிரியை குருகுலசிங்கம் சிறிவதனியின் கொலையை அடுத்து தூர இடங்களில் பணியாற்றும் பெண் ஆசிரியைகள் அச்சம் அடைந்துள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாக பெண் ஆசிரியைகளை மூதூர் நகர்ப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் இணைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் அ.விஜயானந்தமூர்த்தியைக் கேட்டிருந்தது.

சங்கப் பொதுச் செயலாளர் புவனேஸ்வரன் விடுத்த இந்தக்கோரிக்கையை ஏற்ற பணிப்பாளர் வியாணந்தமூர்த்தி இதனை உடன் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியைசிறிவதனி (வயது-33) கடந்த 24ஆம் திகதி பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பாட்டாளிபுரம் காட்டுப்பகுதியில் வைத்து இனந்தெரியாதவர்களால் வெட்டிப்படுகொலை செய் யப்பட்டார்.

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைபறிச்சான் பிரதேசத்திலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாட்டாளிபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் செல்லும்போதே இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் சில தினங்களுக்கு முன்னர் சம்பூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மாநகர சபைச் செயற்பாடுகளை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்

### அக்கரைப்பற்று மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

மட்டக்களப்பு,டிசெ.3

மாநகரசபையில் என்ன விடயங்கள் பேசப்படுகின்றது என்று மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். நமக்கு வாக்களித்தவர்களும் இந்தச் சபைக்கு வரிசெலுத்துவோரும் இங்கு என்ன நடக்கின்றது என்பதை அறிந்துகொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளார்கள். எனவே, அக்கரைப்பற்று மாநகரின் செய்திகளை ஒளிவுமறைவின்றி மக்கள் அறிந்துகொள்ளும் வகையிலான வழிவகைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று அக்கரைப்பற்று மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹனீபா மதனி தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று மாநகரசபையின் மாதாந்த அமர்வு அண்மையில் மாநகரசபைக் கட்டட மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அக்கரைப்பற்றிலுள்ள நீர்நிலைகள் நிரப்பப்பட்டு வருகின்றமையால் மழைநீரும், வெள்ளமும் வழிந்தோட வழியின்றி தேங்கிக்கிடக்கின்றன. வீடுகள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றன. எனவே, எந்தக் காரணங்களைக் கொண்டும் அரச நிதிகளோ, மாநகரசபையின் பணமோ எதுவானாலும் மண் நிரப்பும் ஒப்பந்த வேலைகளுக்கு ஒதுக்கப்படக்கூடாது. இதில் மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டும். மண் போடுவதால் வடிகால்வாய்கள் தடைப்படுகின்றன. முறையான வடிகால் வசதிகள் இல்லாமையே மக்களின் நீண்ட நாள் குறையாகக் காணப்படுகின்றது. இதில் நாம் தவறிழைக்கின்ற போது மக்கள் கடுமையாக இந்தச் சபையை விமர்சிப்பார்கள்.

இங்கு என்ன நடக்கின்றது என்பதைப் புத்தகங்களாக எழுதியோ, பொதுக்கூட்டங்கள் நடத்தியோ மக்களுக்குத் தெரியப்படுத்திக்கொண்டிருக்க முடியாது. எனவே, இவற்றை ஊடகங்களில் வெளிக்கொணர்வதன் மூலமே மக்களிடம் இதனை இலகுவாகக் கொண்டுசேர்க்க முடியும்.


குறிப்பாக எதிர்க்கட்சி சார்ந்த மாற்றுக்கருத்துகள் ஊடகங்கள் மூலம் மக்களிடம் சென்றடைய வேண்டும். அதை நாம் தவறாது மேற்கொள்வோம்- என்றார்.

## சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பம்

மஸ்கெலியா, டிசெ..3

பௌர்ணமி தினமான எதிர்வரும் 10ஆம் திகதி சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பமாகின்றது.

9ஆம் திகதி காலை இரத்தினபுரி பெல்மடுல்ல ரஜமஹா விகாரையில் இருந்து இரத்தினபுரி கஹாவத்த, அவிசாவளை தெஹியோவிட்ட, எட்டியாந்தோட்ட, கித்துல்கல, கினிகத்தேன, வட்டவளை, ஹற்றன், டிக்கோயா, நோர்வூட், மஸ்கெலியா வழியாக நல்லதண்ணி பொலிஸ் பாதுகாப்புடன் சமன் தெய்வ விக்கிரமும், பூசைப் பொருள்களும் கொண்டுவரப்படும். இதற்கான ஏற்பாட்டை ரஜமஹா விகாரையின் புதிய தேரர் மேற்கொண்டு வருகின்றார். (ச)




உலக எயிட்ஸ் தினத்தையொட்டி மட்டக்களப்பில் நேற்று முன்தினம் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

## முதலாவது மகப்பேற்று சத்திர சிகிச்சை

சம்மாந்துறை,டிசெ.3

சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையில் முதலாவது மகப்பேற்று சத்திர சிகிச்சை நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தச் சத்திர சிகிச்சை மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி யுரேக்கா ஸ்ரீ விக்ரமசிங்க, மகப்பேற்று பிரிவு பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.எம்.எம்.சபீர் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

## சட்டவிரோத மர ஆலைகள் பொலிஸாரால் முற்றுகை

கம்பளை, டிசெ.3

கம்பளை நகரை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமாக இயங்கி வந்த நான்கு மர ஆலைகளை கடந்த புதன்கிழமை சுற்றிவளைத்த பொலிஸ் குழு மற்றும் வன திணைக்கள அதிகாரிகள் அவற்றிலிருந்து சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான மரக் குற்றிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஆலைகள் தொடர்பாக கண்டி, அம்பகோட்டை வன வளத்துறை அலுவலகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே இந்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டுள்ளது. இந்தமர ஆலைகளிலிருந்து மஹோகனி, பலா, தூணா முதலிய மர வகைகளை சேர்ந்த 10 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

## தனியார் பல்கலை ஆரம்பிக்கும் முயற்சி இலவசக் கல்விக்கான முற்றுப்புள்ளி

### பேராதனை பல்கலைக் கழக மாணவர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

பேராதனை,டிசெ.3

தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் நாட்டில் இலவச கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்க எடுக்கப்படும் முயற்சியாகும்.

இதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தோன்றி வரும் எதிர்ப்புக்ளை அடக்குவதற்காக அரசு மாணவர்களை அடக்கி ஆள முற்படுகின்றது. மாணவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியும் வகுப்புத்தடைகளை ஏற்படுத்தியும் மாணவர்கள் மீது அடக்குமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் லங்கா மஹேல குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசு பல்கலைக்கழக கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சியைக் கைவிடுமாறு கோரி பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பிக்கு மாணவர்கள் இணைந்து பேராதனை, கலஹா சந்தியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தாவது:

நாட்டில் இலவசக் கல்வியை இல்லாமல் செய்ய மேற்கொள்ளும் சகல முயற்சிகளையும் வன்மையாக எதிர்க்கின்றோம். இந்த முயற்சியை எவர் மேற்கொண்டாலும் அது ஏழைகளின் கல்விக்கு வைக்கும் வேட்டு ஆகும். அரசியல் ஆதாயத்திற்காக ஏழைகளின் கல்வியில் கைவைக்க முயற்சிப்பவர்கள் உண்மையை உணர்ந்து செயற்பட வேண்டும். மாணவர்கள் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகள் மூலம் மாணவர்களின் குரலை ஒரு போதும் நசுக்க முடியாது.

எமது சகோதர மாணவர்கள் நால்வர் போகம்பரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்ய வேண்டும். இந்த மாணவ சகோதரர்களின் கல்வியைத் தொடர இடமளிக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டியவர்கள் தனியார் பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்க முயற்சிக்கின்றனர்.

அரசின் வரவு செலவுத்திட்டம் தனியார் கல்விக்கு ஊக்கமளிப்பதாகவுள்ளது - என்றார். (ச)

## இறக்குவானை ஆலயத்தில் 12 அடி உயரமான முருகன் சிலை



இரத்தினபுரி, டிசெ.3

இரத்தினபுரி - இறக்குவானை கதிர்வேலாயுத சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன் போது சுமார் 12 அடி உயரமான - இலங்கையிலேயே மிகவும் உயரமான முருகன் சிலையும் விசேட கிரியைகளுடன் ஆலயத்தில் ஸ்தாபனம் செய்து வைக்கப்பட்டது.

உதயன்
03 டிசெம்பர் 2011 சனிக்கிழமை

# 'கோப்' அறிக்கையை விவாதிக்க உரிய நடவடிக்கை எடுங்கள்!

## சபாநாயகரிடம் எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு,டிசெ.3

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட 'கோப்' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் மற்றும் ஊழல், மோசடிகளை அடிப்படையாகக் கொண்டு சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் நேற்றுமுன்தினம் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தன.

அதேபோல், இந்த அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் நடத்துவதற்கு சபா நாயகர் மிக விரைவில் நாளொன்றை ஒதுக்கித்தரவேண்டும் என்று அந்தக்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

அமைச்சரும் கோப் குழுவின் தலைவருமான டியூ குணசேகர கோப் அறிக்கையை சபையில் வாசித்து முடித்ததும் எதிர்க்கட்சிகள் தங்களது கருத்துகளைத் தெரிவித்தன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க, அந்த அறிக்கையில் காணப்பட்ட நிர்வாகச்சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டியமைக்காக அமைச்சர் டியூ குணசேகரவுக்கு நன்றிதெரிவித்ததோடு, இந்த அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்த இந்த வருடம் அல்லது அடுத்த வருடம் நாளொன்றை ஒதுக்கித்தருமாறு சபாநாயகரிடம் கோரினார்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த தயாசிறி ஜயசேகர, அமைச்சர் டியூ குணசேகர பக்கச்சார்பின்றி செயற்பட்டு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார் என்றும் கூறினார்.

கடந்த வருடம் 26 நிறுவனங்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளன. இந்த வருடம் 229 நிறுவனங்கள் விசாரிக்கப்பட்டன. இது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும்.

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுதொடர்பில் விவாதம் நடத்த விரைவில் நாளொன்றை ஒதுக்கித்தரவேண்டும் என்று தயாசிறி மேலும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த அநுர குமார திஸாநாயக்க:

நிறுவனங்களை ஆராயந்து பார்த்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும் ஒரு நடவடிக்கையாக இது இருக்கக்கூடாது .

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபாரிசுகள், நிர்வாக சீர்கேடுகள் மற்றும் ஊழல், மோசடிகள் தொடர்பில் சபாநாயகர் நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார்.

இந்த அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்த ரவி கருணாநாயக்க, கோப் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமை முக்கியமான விடயம் அல்ல, அதை அடிப்படையாகக் கொண்டு சபாநாயகர் எடுக்கும் நடவடிக்கையே முக்கியமான விடயமாகும் - என்றார்.



சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலைய முன்பள்ளிக்கென யாழ்.மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இந்த நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட பாண்ட் வாத்தியக் கருவிகளை நாடாளுமன்ற உறுப்பினரின் பிரதிநிதி இ.கந்தசாமி நிலையச் செயலாளர் ச.கனகசபாபதியிடம் கையளிக்கிறார்.

# நெடுந்தீவில் உள்ள தரிசு நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.3

நெடுந்தீவு மத்தி, கிழக்கு, மேற்குக் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள தரிசு நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பகுதிகளில் எழுபத்தி மூன்று ஏக்கர் நிலத்தில் உவரைத் தாங்கி வளரக்கூடிய ஏ.ரி.362 இனவிதை நெல் உற்பத்தி செய்யப்படும். உணவு விவசாய தாபனத்தின் அனுசரணையுடன் இதற்கென தெற்குப் பகுதிக்கு 100.5 புசலும் மத்தி 27புசலும், கிழக்குக்கு 33 புசலும், மேற்குக்கு 58.5 புசல் நெல்லும் வழங்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு, நயினாதீவுப் பகுதிகளில் 55 ஏக்கர் நிலத்திலும் ஏ.ரி.362 ரக நெல் உற்பத்திக்கென வழங்கப்பட்டுள்ளதாக வேலணை விவசாய போதனாசிரியர் செ.இராமநாதன் தெரிவித்துள்ளார்.

(ச-7)

# ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு வகுப்புத் தடை

ரஜரட்ட பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் ஆறு பேர் வகுப்புத் தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் கே.எச். நந்தசேன தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை துணைவேந்தர் உட்பட அதிகாரிகளை சாலியபுரவில் அமைந்துள்ள மருத்துவ பீட வளாகத்தில் 3 மணித்தியாலங்கள் வரை தடுத்து வைத்திருந்தமை தொடர்பான சம்பவத்திற்கு முன்னின்ற மருத்துவ பீடத்தின் இறுதிவருட மாணவர்கள் ஆறு பேர் ஐந்து வாரங்களுக்கு வகுப்புத் தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

(ச)

# பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிள் திருட்டு

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளொன்று இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்ட சம்பவம் மொனராகலை மாவட்டத்தின் மெதகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த மோட்டார் சைக்கிளை மெதகம அலிவெலவிலுள்ள தனது வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைத்திருந்தபோது இனந்தெரியாத நபர்கள் திருடிச் சென்றுள்ளதாக அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர், மெதகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதுதொடர்பாக விசாரிப்பதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ச)

# யாழ்.நகரின் குறுக்கு வீதிகளுக்கும் 'காப்பற்'

கொழும்புத்துறை,டிசெ.3

யாழ்.நகரப் பகுதியில் உள்ள குறுக்கு வீதிகள் காப்பற் வீதியாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மத்திய கல்லூரி வீதி, 3ஆம் குறுக்குத்தெரு வீதிகள் காப்பற் இட்டு செப்பனிடப்பட்டுள்ளன.

ஏனைய வீதிகளையும் காப்பற்றாக மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-135)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவு செய்யவும். தொடர்பு:
1. நல்லூர் பாம் சென்ரர் , 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், சந்தையடி, கிளிநொச்சி. 0776225944
(10964)(9-6-8)

**கார் விற்பனைக்கு**

HF xxxx தொடர் இலக்கமுடைய Gold colour மற்றும் Automatic சொகுசு கார் விற்பனைக்கு உண்டு. விலை13/50 மட்டுமே.
தொடர்புக்கு: 0772395904

**காணி விற்பனைக்கு**

வரணி வைத்தியசாலைக்கு அருகில் 12 பரப்பு தென்னங் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0778607151
(10854)(9-6-8)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து (புறோயிலர் 450/= மட்டும்) காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (10854)(9-6-8)

**பரிசுத்த ஆவிக்குச் செபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உனது திருநாமம் அச்சிர்க்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே! என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இந்தச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எந்தக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன். (10940)(6.3.9) அடியாள்.

**3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 05 - 02 - 1967

மறைவு 05 - 12 - 2008



**பரராஜசிங்கம் ஸ்ரீகுமார் (வவி)**

(பனை அபிவிருத்திச் சபை ஊழியர்)

பாசமிகு தந்தையாய்
அன்பை ஊட்டி அறிவைப் புகட்டி
அரவணைத்த எம் அப்பாவே!
ஒரு கூட்டுக்கிளியாய் ஒன்றாகக் கூடியிருந்தோம் - நாம்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்த மாயம் தான் என்னவோ?
எத்தனை ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே எம்மருகில்.

தற்காலிக முகவரி: இல.49/1, வில்வந் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
நிரந்தர முகவரி: இல.16/1, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
என்றும் நினைவில்: மனைவி, மக்கள்.
(11057) (2,6,25)

சங்கீதபூஷணம், கலாபூஷணம்

**லயனல் திலகநாயகம் போல்**

அவர்களின் ஈராண்டு நினைவொளியில்



எப்படித்தான் ஈராண்டுகள் சென்றதுவோ எம்முயிரே!
இப்படித்தான் வாழவேண்டுமென்று நும்
ஒப்பரிய குணத்தால் பண்பால் பாசத்தால்
எக்குறையுமின்றி எமை வாழவைத்தீரே!!
செப்பரிய இசைஞான அமுதசுரபியாய்
புதுமைகள் பல செய்த திலக நாயகனே!
இப்புவியில் என்றென்றும் அமரத்துவம் பெற்றீர்;
எம்முள் உயிராய் உறுதுணையாய் உறைந்திடுவீர்!!!

யாழ்ப்பாணம். - திலகநாயகம் போல் குடும்பத்தினர்.
(10988)(2-6-9)

# ராமேஸ்வரம் மீனவர்களை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழக காங்கிரஸ் வலியுறுத்து

ராமேஸ்வரம் மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அமைச்சரிடம் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 5 மீனவர்களை அவர்களது படகுடன் இலங்கை கடற்படையினர் கைதுசெய்திருப்பது கண்டிக்கத்தக்கது. இது சம்பந்தமாக மத்திய வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருக்கிறேன். 5 மீனவர்களையும் விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தது மட்டுமல்லாமல் அவர்களை விடுவிக்கும் முயற்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

இதுபோன்ற மீனவர்கள் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண்பதற்கான முயற்சியாக 4 நாள்களுக்கு முன்னர் மீனவ அமைப்புகளோடு காங்கிரஸ் மீனவ அமைப்பைச் சார்ந்தவர்களும் நானும் கலந்து பேசியிருக்கிறோம்.

பிரச்சினையின் தன்மையை உணர்ந்து விரைவில் இதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்று நம்புகிறேன். ராமேஸ்வரம் மீனவர்கள் எப்போதும் போல மீன் பிடிக்கச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ)

# முல்லைப் பெரியாறு அணை விவகாரம்: ஜெயலலிதாவுக்கு பிரதமர் கடிதம்



டில்லி, டிசெ.3

இந்திய மாநிலமான கேரளாவில் உள்ள முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வருக்கு பிரதமர் மன்மோகன் சிங் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக, கேரளா மக்களின் நலன்களை உள்ளடக்கிய முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் பதற்றத்தைத் தூண்டும் வகையில் கேரளா நடந்து கொள்ள வேண்டாம் என்றும் இதனால் தமிழக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கேரள அரசுக்கு அறிவுறுத்துமாறு பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்கனவே கடிதம் எழுதியிருந்தார்.

இந்தநிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் கடிதம் எழுதியுள்ளார். கடிதத்தில் முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக தன்னைச் சந்திக்க வந்த கேரளப் பிரதிநிதிகளிடம் பதற்றத்தைத் தூண்டும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தியாக பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

மேலும் கேரள பிரதிநிதிகளிடம் முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றம் நியமித்த குழு தற்போது அணையை ஆய்வு செய்து வருவதாகவும் அதுவரை எந்தவித குழப்பத்தையும் ஏற்படுத்தாமல் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் இரு மாநிலங்களும் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே மக்களின் பதற்றத்தைத் தணிக்க இரு மாநிலங்களின் அதிகாரிகளை சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு மத்திய நீர்வள அமைச்சகத்துக்கு பிரதமர் மன்மோகன் சிங் உத்தரவிட்டுள்ள்ார். (வ)

# மண்டபம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை கல் வீச்சு

மண்டபம் பகுதி மீனவர்கள் மீது, இலங்கை கடற்படையினர், கருங்கற்களை வீசி விரட்டியடித்துள்ளனர் என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

ராமேஸ்வரம் மீனவர்கள் ஐந்து பேரை, இலங்கை கடற்படையினர் பிடித்து, போதைப் பொருள் கடத்தியதாக, சிறையில் அடைத்துள்ளனர். இந்த நிலையில், மண்டபம் வடக்குப் பகுதியிலிருந்து, கடந்த புதன் கிழமை, 600 இற்கும் அதிகமான விசைப் படகுகள், கடலுக்குச் சென்று, நேற்றுமுன்தினம் கரை திரும்பின என்றும் தெரிவிக்கப்பட்டது.

கோவில்வாடி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள், தங்கச்சிமடம் கடல் பகுதியில் உள்ள கோடி என்ற இடத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினர், ஐந்து ரோந்து படகில் வந்துள்ளனர். மண்டபம் மீனவர்கள் மீது கருங்கற்களை வீசி விரட்டியதால், மீனவர்கள் வேறு பகுதிக்குச் சென்று விட்டனராம். (வ)

# எயிட்ஸ் நோயாளிகளுக்கு கேரளா அரசால் மாத ஓய்வூதியம்

கேரளா, டிசெ.3

சர்வதேச எய்ட்ஸ் தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் வேளையில், உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத ஓய்வூதியம் வழங்க உள்ளது கேரள அரசு.

இதுகுறித்து கேரள முதல்வர் உமன் சாண்டி கூறுகையில் -

மாநிலத்தில் இந்தநோயை அறவே அகற்றும் நடவடிக்கைகளில் மாநில அரசு ஈடுபட்டு வருகிறது. எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு வருகின்றனர்.

எய்ட்ஸ் நோய் பாதித்தவர்களுக்கு மாதாந்தம் ரூபா 400 ஓய்வூதியம் வழங்க கேரள அரசு தீர்மானித்துள்ளது என்று கூறினார்.

(வ)

# மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு பஸ் சேவை சென்னையில் ஆரம்பம்

சென்னை, டிசெ 3

மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பஸ் சேவைத் திட்டம் சென்னையில் முதற்கட் டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு பஸ்ஸில் ஏறி இறங்குவது மிகவும் சிரமமான ஒன்று. இதனால் அவர்கள் தங்களுக்கு சிறப்பு பஸ் வசதி வேண்டும் என்று பல கோரிக்கைகளை வைத்தனர்.

அதன் பயனாக இந்த பஸ் சேவை செயற்படுத்தப்பட்டுள்ளது.

சாரதியிடம் இருக்கும் 3 பொத்தான்கள் மூலம் இயக்கும் போது இந்த பஸ்ஸின் கதவு திறக்கப்படும். பின்னர் மாற்றுத் திறனாளிகள் நடத்துனரின் உதவியுடன் பஸ்ஸின் இருக்கையில் அமர்கிறார்கள். இந்த பஸ் கள் சென்னையில் 7 வழித் தடங்களில் இயக்கப்படுகின்றன. (வ)


# எயிட்ஸால் பாதிக்கப்பட்டோரை காக்க விரைவில் புதிய சட்டம்

டில்லி, டிசெ.3

எய்ட்ஸால் பாதிக்கப்பட் டோரிடம், ஏனையவர்கள் பாகுபாடாக நடந்து கொள்வதை தவிர்க்கும் வகையில், விரைவில் சட்டம் கொண்டு வரப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத் கூறினார்.

உலக எய்ட்ஸ் தினத்தை யொட்டி, டில்லியில் நேற்று முன்தினம் விழா நடந்தது. இதில், பங்கேற்ற மத்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத், செய்தியாளர்களிடம் கூறுகையில்:

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றவர்களால் பாகுபாடாக நடத்தப்படுவது வருத்தம் அளிக்கிறது. இதைத் தவிர்க்கும் வகையில், புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் துவங்கி விட்டன. இதற்கான சட்ட வரைவு, அடுத்த 10 நாள்களில், சட்ட அமைச்சகத்திடம் இருந்து, சுகாதார அமைச்சகத்துக்கு வந்துவிடும் - என்றார். (வ)



முல்லை பெரியாறு அணை விவகாரம் குறித்து கேரளா அரசைக் கண்டித்து அ.தி.மு.க. கட்சி உறுப்பினர்கள் தம்பித்துரை தலைமையில் நாடாளுமன்ற வளாகம் முன்பு பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஸ்டாலின் அவரது மகன் உதயநிதி மீது ஐந்து பிரிவுகளில் வழக்குப் பதிவு


சென்னை, டிசெ.3

இந்தியாவின் தமிழக மாநிலத்தின் முன்னாள் துணை முதலமைச்சரும், தி.மு.க கட்சியின் பொருளாளருமான மு.க.ஸ்டாலின் மீது கொலை மிரட்டல் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை ஆழ்வார் பேட்டை செயின்ட் மேரீஸ் ரோட்டைச் சேர்ந்தவர் என்.எஸ்.குமார். இவர் காவல்துறை உயர் அதிகாரி திரிபாதியைச் சந்தித்து கடந்த 29 ஆம் திகதி முறைப்பாட்டு மனு ஒன்றை கொடுத்தார்.அந்த முறைப்பாட்டு மனுவில் தெரிவித்துள்ளதாவது:

எனக்குச் சொந்தமான 2 1/2 கிரவுண்ட் நிலம் தேனாம்பேட்டை சித்தரஞ்சன் வீதியில் இருந்தது. அந்த இடத்தில் வீடு கட்டி வாடகைக்கு விட்டு இருந்தேன்.

அந்த வீட்டை மு.க.ஸ்டாலின் குடும்பத்துக்கு விற்க வேண்டும் என்று பலர் மிரட்டினார்கள். பக்கத்து வீட்டில் தான் மு.க.ஸ்டாலின் வசிக்கிறார். எனது வீட்டை பின்னர் வேணுகோபால் ரெட்டி என்பவர் பெயரில் மிரட்டி பத்திர பதிவு செய்து கொண்டனர்.





இதற்கு ரூ.5 1/2 கோடிக்கு வங்கிக் காசோலையாக கொடுத்தனர். பின்னர் ரூ.1 கோடியே 15 லட்சத்தை ரொக்கப்பணமாக கொடுத்தனர். என்னிடம் வாங்கிய வீட்டை பின்னர் மு.க.ஸ்டாலின் மகன் உதயநிதி ஸ்டாலின் பெயருக்கு மாதம் ரூ.20 ஆயிரத்துக்கு வாடகைக்கு விட்டது போல ஒப்பந்தம் போட்டு கொண்டனர்.

தற்போது அந்த வீட்டில் மு.க. ஸ்டாலினின் மகள் செந்தாமரை வசிக்கிறார். என் வீட்டுக்கு வந்து கொலை மிரட்டல் விடுத்து எனது வீட்டை எழுதி வாங்கிக்கொண்டனர். எனது வீட்டை மீட்டுத் தருவதோடு, இதில் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இந்த முறைப்பாட்டு மீது சென்னை மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் கொலை மிரட்டல், சதித்திட்டம், வீடு புகுந்து மிரட்டுதல் உள்ளிட்ட 5 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளதாக நேற்று முன்தினம் இரவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்தனர்.

மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின், வேணுகோபால் ரெட்டி, ராஜாசங்கர், சுப்பா ரெட்டி, சீனிவாசன் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மேலும் 6 வனவிலங்கு சரணாலயங்கள்

இந்தியாவில் மேலும் ஆறு வன விலங்கு சரணாலயங்களை அமைத்து, மக்களுக்கு இரவு நேரக் காட்சிகள் வழங்கிட மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியா முழுவதும் புதிதாக 6 வன விலங்கு சரணாலயங்களை அமைக்க மத்திய அரசு, வனத்துறை அமைச்சகத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் 3 சரணாலயங்கள் உத்தரப் பிரதேச மாநிலத்திலும், இரண்டு சரணாலயங்கள் மகாராஷ்டிரா மாநிலத்திலும், ஒரு சரணாலயம் மத்தியப் பிரதசேத்திலும் அமைய உள்ளது. (வ)

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



அன்புடையீர்,
கடந்த 22.11.2011 செவ்வாய்க்கிழமை ஆலடிப்புலம் நடராஜ முருகன் திருவடி நிழல் அடைந்த எமது அன்புத்தாய்

**ஸ்ரீமதி குமாரசாமிஜயர் சாரதாம்பாள் அம்மாவின்**

ஆத்ம சாந்திக் கிரியைகள் 01.12.2011 வியாழக்கிழமை தொடக்கம் 04.12.2011 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. 4 ஆம் திகதி நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

மீசாலை வடக்கு,
சாவகச்சேரி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(7861)(2-6-9)

## மரண அறிவித்தல்

### திருமதி அருள் ரஞ்சிதாதேவி



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள் ரஞ்சிதாதேவி 30.11.2011 புதன் கிழமை காலமானார்.

அன்னார் அருளின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - நாகம்மா தம்பதியின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அரியரத்தினம் தம்பதியரின் மருமகளும் உதயகுமாரி, வசந்தகுமாரி, சாந்தகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயும், கமலானந்தன், சுதன், சிவகணேசன், திலீபன் ஆகியோரின் மாமியும் சிவசரண், சிவகாணன், தேனுகன், யோகிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு.

(11114)(3,6,9)

தகவல்:
குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

B.Sc மொறட்டுவ கம்பஸ் ஆண் வெளிநாடு 10.08.1978 கிறிஸ்தவ எஞ்சினியருக்கு மணமகள் தேவை. T.P.0771249118

## வீடு விற்பனைக்கு

மீசாலை, அல்லாரை வீதியில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779711972

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, பிடாரி அம்மன் கோயிலடிச் சூழலில் ஆறு பரப்புக் காணியுடன் விசாலமான வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0785844048

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் இல.12 இல் ஒருபரப்பு 13 குளியுமுள்ள காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற் பனைக்குண்டு.

தொடர்பு:-
0213213278, 0718474943
தரகர் தேவையில்லை.

(11113)(2-6-9)

## சேவை

குறுகிய காலத்தினுள் இத்தாலி, கனடா Work permit பெற்றுத் தரப்படும். முற்பணம் ஏதும் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
தொடர்பு: 0774469962

## மண்டபம் வாடகைக்கு உண்டு

யாழ். பஸ்தியன் சந்திக்கு அருகில், சுவாட்ஸ் ஒழுங்கையில் (பிரதான வீதியில் 100m) 14 அடி உயரம், 29 அடி அகலம், 45 அடி நீளம் கொண்ட கட்டடம் (களஞ்சியத்துக்கு உகந்தது) வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
இல.18, சுவாட்ஸ் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P.No:
0772860084,
0212228087

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 24.03.1970
மறைவு: 15.12.2010

### பொன்னம்பலம் சிவானந்தன்



ஊரார் மனங்களில்
உத்தமனாய் வாழ்ந்திருந்தாய்
தேசத்தின் ஒளி விளக்காய்
தேசமெங்கும் பரந்திருந்து
எம்மைத் தேடி அலையவிட்டு
தேவலோகம் சென்றுவிட்டாய்
ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
மாறாது உன் நினைவுகள்

சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.

(11089) (1,6,9)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கணேசகுமாரன்



சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டியைப் புகுந்த இடமாகவும், தற்போது ஜேர்மனி யில் வசித்து வந்தவருமாகிய சின்னத்தம்பி கணேசகுமாரன் (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனி யில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத் தம்பி மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், மஞ்சுளேஸ்வரியின் அன்புக் கணவரும் அதிசன், வினுசன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிநாதன் (கனடா), இராஜேஸ் வரி(வல்வெட்டி), புவனேஸ்வரி(சுவிஸ்), குகனேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சிவபாதசுந்தரம், இராசலிங்கம், பாலகிருஷ்ணன், பகீரதி ஆகியோரின் சகலனும், அரவின், அரிசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ராகவி, அபிநயா, காவியா, லக்ஷியா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.12.2011)திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிங்காரம் வளவு,
வல்வெட்டி.

(11078)(6-9-8)

தகவல்:
பா. சிவபாதசுந்தரம் (சகலன்)

## நீங்கா நினைவுகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் மயில்வாகனம் சுந்தரலிங்கம்

(கிராம சேவையாளர் - J/66, J/67)
திதி: 03.12.2011

தோற்றம்:
15.03.1953


எப்படியோ நிகழ்ந்துவிடுகிறது
எதிர்பாராக் கொடுமைகள்
கண்ணெதிரே கண்டவுயிர்
கணப்பொழுதில் காலனோடு
விழியோரம் தொக்கி நிற்கும்
விழி நீரும் உணர்த்திச் செல்லும்
வேரினை பிடுங்கிச் சென்ற
வேதனை உரக்கச் சொல்லும்
வலிகொண்ட மனதிற்கு
மருந்தென்ன? மாற்றென்ன?
வருடங்கள் உருண்டாலும்
வலியின் வாசம் மட்டும்
விழிக்கருகில் வடுபோல
விலகாமல் என்றென்றும்
எம்முடன் இருக்கும்

மறைவு:
14.12.2010

நீங்கா நினைவுடன்,
மனைவி, பிள்ளைகள்.

(11115)(1,6,9)

# இந்தோனேசிய நிலச்சரிவில் சிக்குண்டு 35 பேர் சாவு



ஜகார்த்தா,டிசெம்.3

இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள கடும்மழையை அடுத்து ஏற்பட்ட நிலச்சரி வில் சிக்குண்டு 35 பேர் உயிரிழந்துள்ளனர்.30 பேரைக் காணவில்லை.

இந்தோனேசியாவின் பல பகுதிகளில் கடந்த மூன்று நாள்களாகக் கடும் மழை பெய்து வருகிறது. இதனால், நியாஸ் தீவின் மலைப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த நிலச்சரிவில் 37 வீடுகள் புதையுண்டன. இதுவரை ஐந்து பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்தக் கிராமத்தை இணைக்கும் பாலம், வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதால், மீட்புக் குழுவினர் அங்கு செல்ல முடியாத நிலை உள்ளது.அயல் கிராமத்தினரின் உதவியுடன் ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 30 பேரைக் காணவில்லை. அவர்கள் நிலச்சரிவில் புதையுண்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. (ந)

# சீனாவிடம் 3,000 அணுகுண்டுகள்

## அமெரிக்க பல்கலை ஆய்வில் தகவல்

வாஷிங்டன்,டிசெம்.3

சீனாவிடம் 3,000 அணுகுண்டுகள் இருக்கலாம் என்று அமெரிக்கப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வு செய்து தகவல் வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்காவின் ஜோர்ஜ் டவுண் பல்கலைக்கழக மாணவர்கள், கூகுள் எர்த், வலைப்பதிவு, ராணுவ இதழ்கள் உட்பட பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் 'அண்டர் கிரவுண்ட் கிரேட் வோல்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி மேற்கொண்டு ஆய்வறிக்கையை பேராசிரியர் பிலிப் கார்பரிடம் சமர்ப்பித்துள்ளனர். இந்தப் பேராசிரியர் அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகனில் அதிகாரியாகப் பணியாற்றியவர்.

இது குறித்து வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தியில் கூறப்பட்டதாவது; மாணவர்களின் ஆய் வறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

ஆனால், பென்டகனின் முக்கிய அதிகாரிகளுக்கு ஆய்வறிக்கையின் நகல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சீனாவிடம் 80 முதல் 400 அணு குண்டுகள் வரை இருக்கும் என்று அமெரிக்கா நினைத்து கொண்டிருக்கிறது. ஆனால் 3,000க்கும் அதிகமான மிகப் பெரிய அளவிலான அணு குண்டுகளை சீனா வைத்திருக்கும் என்று தெரிகிறது. அணுகுண்டுகளை மறைத்து வைக்க நாடு முழுவதும் ஆயிரக் கணக்கான கிலோ மீற்றர் தூரத்துக்கு மிகப்பெரிய சுரங்கப் பாதை களையும் இராணுவம் அமைத்துள்ளதாகத் தெரிகிறது எனக் கூறப்பட்டுள்ளது. (ந)

# ராணுவ நிலைகள் மீது நேட்டோ தாக்கினால் திருப்பித் தாக்கலாம்

## பாக்.தளபதி கயானி அதிரடி உத்தரவு



அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் பாகிஸ்தான் ராணுவ நிலைகளைத் தாக்கினால், பதிலடி கொடுக்க மேலிடத்து உத்தரவுக்காக காத்திருக்கத் தேவையில்லை என்று பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதி அஸ்பாக் பர்வேஸ் கயானி அதிரடி உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவால் பாகிஸ்தானுக்கும், அமெரிக்காவுக்கும் நேரடிப் போர் மூளும் அபாயம் எழுந்துள்ளது.

இது குறித்து கயானி தெரிவித்ததாவது;

ஆப்கானிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் நிலை கொண்டுள்ள பாகிஸ்தான் ராணுவத்தினரை எதிராளிகள் தாக்கினால் திருப்பித் தாக்கலாம். எதிரி யாராக இருந்தாலும் சரி, என்ன செய்ய வேண்டும் என்று மேலிடத்தின் உத்தரவுக்காகக் காத்திருக்கத் தேவையில்லை. உங்களிடம் உள்ள அனைத் துப் பலத்தையும் பிரயோகித் துப் பதிலடி கொடுக்க உங்களுக்கு உரிமை உள்ளது.

நேட்டோ படையினரே தாக்கினாலும் கூடத் தயங்காமல் பதிலடி கொடுங்கள். இதில் எந்தவித தயக்கமும் தேவையில்லை. இதற்காக யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை. எந்த மட்டத்திலும் அனுமதிக்காக காத்திருக்கத் தேவையில்லை. கையில் இருக்கும் ஆயுத பலத்தைப் பயன்படுத்தி பதிலடியைக் கொடுங்கள் என்றார். (ந)

# கயானா தேர்தலில் மக்கள் கட்சி வெற்றி

ஜோர்ஜ்டவுன்,டிசெம்.3

கயானா அதிபர் தேர்தலில் கயானா மக்கள் கட்சியின் டொனால்ட் ரமோட்டர் வெற்றி பெற்றுள்ளார்.

கயானாவில் கடந்த திங்கள் கிழமை அதிபர் தேர்தல் நடந்தது. இதில் கயானா மக்கள் கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ரமோட்டர் 49 சதவீதம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். எதிர்கட்சிக்கு 41 சதவீதம் வாக்குகள் மட்டுமே கிடைத்தன. இது குறித்து கயானா தேர்தல் ஆணையர் கூறியதாவது:

கயானா மக்கள் கட்சிக்கு மொத் தம் 32 இடங்கள் கிடைத்தன. எதிர்கட்சியான தேசிய ஐக்கிய கட்சிக்கு 26 இடங்கள் மட்டுமே கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார். (ந)



கிர்கிஸ்தான் நாட்டில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் புதிய அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட அல்மாஸ்பெக் அதாம்பையேவை (வலது), பதவி விலக இருக்கும் தற்போதைய அதிபர் ரோஸாஓடும்பையேவ், தலைநகர் பஸ்ஸாக் நகரில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் போது வாழ்த்துகிறார்.

# பிரிட்டன் தூதரகம் மீதான தாக்குதல் தூதரை திரும்பி அழைத்தது ஜேர்மன்

பெர்லின்,டிசெம்.3

ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் உள்ள பிரிட்டன் துதரகத்தில் நடந்த தாக்குதலுக்கு ஜேர்மன் எதிர்ப்புத் தெரிவித்தது மட்டுமல்லாமல், தனது நாட்டுத் தூதரை உடனடியாகத் தாய்நாடு திரும்ப வேண்டும் என்றும் கூறியுள்ளது.

இதுகுறித்து ஜேர்மன் வெளிவிவகாரத்துறையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாவது;

ஈரானில் உள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து தனது நாட்டுத் தூதரிடம் ஜேர்மன் வெளிவிவகாரத்துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர் வேலே பேச விரும்பியதால் அவரை இங்கு அழைத்தோம் என்றார்.

மேலும் கிரேக்க நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சரான ஸ்டாவ்ரோஸ் டிமாஸ் என்பவரோடு ஈரான் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து பேச்சு நடத்தியுள்ளோம். அத்துடன் சர்வதேச சட்டமீறலில் ஈரான் ஈடுபடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாக சந்தேகப்படும் வளர்ந்த நாடுகளில் ஜேர்மனியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# நேட்டோ படைத் தாக்குதல் தொடர்பான ஒளிநாடாவை வெளியிட்டது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத்,டிசெம்.3

நேட்டோ படைத் தாக்குதலில் ராணுவ வீரர்கள் 28 பேர் பலியானது தொடர்பான வீடியோ காட்சிகளை பாகிஸ்தான் வெளியிட்டுள்ளதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் சமீபத்தில் தாக்குதல் நடத்தின. இதில் ராணுவ வீரர்கள் 28 பேர் பலியாகினர்.

இது அமெரிக்கா - பாகிஸ்தான் உறவில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. தவறுதலாக நடந்த தாக்குதலுக்கு நேட்டோ படைகளும், அமெரிக்காவும் பாகிஸ்தானிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டன. அதை ஏற்க மறுத்த பாகிஸ்தான் பிரதமர் கிலானி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரபானிகர் ஆகியோர், அமெரிக்காவுடனான உறவு குறித்து முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று உறுதியாகக் கூறி விட்டனர்.

இந்நிலையில் நேட்டோ படைகள் தாக்குதலில் ராணுவ வீரர்கள் பலியான சம்பவத்துடன் தொடர்புடைய வீடியோ காட்சிகள் நேற்று முன்தினம் வெளியிட்டன. நேட்டோவின் தாக்குதலில் இனிமேல் ஒரு வீரர் கூடப் பலியாவதை பாகிஸ்தான் பொறுத்துக் கொள்ளாது என்று ஹினா ரபானிகர் கோபமாக கூறினார்.

# கடாபி மகனிடம் நன்கொடை பெற்ற லண்டன் கல்லூரி

லண்டன்,டிசெம்.3

லிபியாவின் முன்னாள் அதிபர் கடாபியின் மகன் சைப் அல் இஸ்லாமிடமிருந்து நன்கொடை என்ற பெயரில் 3 இலட்சம் பவுண்ஸை வாங்கிக் கொண்டே லண்டனில் உள்ள பொருளாதாரக் கல்லூரி ஒன்று முனைவர் பட்டம் வழங்கியதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சைப் அல் இஸ்லாம் இந்தக் கல்லூரியில் கடந்த 2003ஆம் ஆண்டு முதுகலை அறிவியல் பட்டம் பெற்றார். இதனையடுத்து 2008 ஆம் ஆண்டு முனைவர் பட்டமும் பெற்றார்.

இவருக்கு முனைவர் பட்டம் வழங்கி ஆறுவாரம் கழித்து இவர் முறைப்படி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெறவில்லை; பணம் கொடுத்துத் தான் பட்டத்தை விலைக்கு வாங்கியுள்ளார் என்ற குற்றச்சாட்டு இவர் மீது எழுந்தது.

இதுதொடர்பாக சைப் அல் இஸ்லாமிடம் நன்கொடை என்ற பெயரில் வழங்கிய லஞ்சம் குறித்து அறிக்கை வெளியிட்ட முன்னாள் நீதிபதி ஹேரி உலப் கூறுகையில், இந்தக் கல்லூரி தனக்கு இருந்த நற்பெயரையும், நன்மதிப்பையும் இந்த நன்கொடை கெடுத்து விட்டது. இனி இந்தக் கல்லூரி முதுகலைப் படிப்புக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது ஒரு குழுவின் கண்காணிப்பில்தான் செயற்பட வேண்டும்- என்றார். (ந)

# குறைந்த அளவில் லஞ்சம் பெறும் நாடுகளில் நியூசிலாந்து முதலிடம்

குறைந்த அளவில் லஞ்சம் பெறும் நாடுகள் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது.

லஞ்ச ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு உலகம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் டி.ஐ நிறுவனம் 183 நாடுகளில் குறைந்த அளவில் லஞ்சம் வாங்கும் நாடுகள் குறித்து சமீபத்தில் ஆய்வை நடத்தியது. இதில், நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது. டென்மார்க் மற்றும் சிங்கப்பூர் ஆகியன தற்போது முறையே 2 ஆவது மற்றும் 5ஆவது இடங்களில் உள்ளன. 8ஆவது இடத்தில் அவுஸ்திரேலியாவும், சுவிற்சர்லாந்தும் உள்ளன. இந்தப் பட்டியலில் ஜப்பான் 14 ஆவது இடத்திலும் சீனா 75ஆவது இடத்திலும் உள்ளன. (ந)

# கடத்தப்பட்ட சிங்கப்பூர் கப்பல் 215 நாள்களுக்குப் பின்விடுவிப்பு

சோமாலிய கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட சிங்கப்பூர் கப்பல் 215 நாள்களுக்குப்பின் விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கப்பலில் சென்ற தென் கொரியர்கள் நான்கு பேர் விடுவிக்கப்படவில்லை.

இந்தோனேசியாவின் சுமத்ரா துறைமுகத்திலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி சிங்கப்பூரின் குளோரி ஷிப் நிறுவனத்துக்குச் சொந்தமான ஜிமினி என்ற எண்ணெய் கப்பல் சென்றது.இந்தக் கப்பலை சோமாலியக் கொள்ளையர்கள் கடத்தி சென்றனர். இதனையடுத்து குளோரி ஷிப் நிறுவனம் நடத்திய பேச்சின் பலனாக நேற்று முன்தினம் இந்தக் கப்பல் விடுவிக்கப்பட்டதுடன் அந்தக் கப்பலில் இருந்த கப்பல் ஊழியர்கள் 21 பேர் விடுவிக்கப்பட்டனர்.

இதுகுறித்து குளோரி ஷிப் நிறுவனம் குறிப்பிடுகையில், அனைவரையும் விடுவிப்பதாக கூறியும் நான்கு பேரை இன்னும் விடுவிக்காமல் உள்ளனர் என்றார். (ந)

# ஜனாதிபதி தங்கக் கிண்ணப் போட்டி தென்மராட்சியில் மோகனதாஸுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.3

டயலொக் நிறுவனத்தின் ஆதரவுடன் இலங்கைக் கரப்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்கழுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கைதடி குமரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது

## கோப்பாயில் ஆவரங்கால் சம்பியன்

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 3 செற்களையும் வெற்றி கொண்டு சம்பியனாகி ஜனாதிபதி தங்கக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்கழுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட இறுதியாட்டம் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் இடம்பெற்ற ஆண்கழுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுப் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்கணக்கில் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கள் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 3 செற்களையும் வெற்றி கொண்டு சம்பியனானது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

மூன்று செற்கள் கொண்ட ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டு சம்பியனானது.

(த-23)

# மின்னொளியில் உதைபந்தாட்டம் அடுத்தவாரம் வவுனியாவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.3

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மின்னொளியில் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளது.

மேற்படி போட்டியில் 16 கழகங்கள் பங்குபற்றுகின்றன. இதேவேளை பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி 10 ஆம் 11 ஆம் திகதிகளில் வவு னியா நகர சபை உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் வடமாகாணத்தைச் சேர்ந்த வீரவீராங்கனைகள் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக செயலாளர் தீபனிடம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

(த-23)

# யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் உதைபந்தாட்டம் அடுத்தவாரம்

யாழ்ப்பாணம், டிசெ.3



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.ஏ. செல்லையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கல்லூரி விளையாட்டு அவை அழைக்கப்பட்ட பாடசாலைக்களுக்கு இடையே நடத்தும் 5 பேர் பங்குகொள்ளும் புட்சல்ட் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் ஆரம்பமாகும்.

காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது.

இந்தப்போட்டிக்கான ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு 7 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புக்கள் பிரிவில் இடம் பெறவுள்ளது எனவிளையாட்டுத் துறைபெறுப்பாசிரியர்பிஎஸ்மோகன் அறிவித்துள்ளார். (த-23)

# சிகான் தரத்துக்கு டினேஷ்




யாழ்ப்பாணம், டிசெம்.3

கராத்தே பிரதம ஆசிரியர் சென்சேய் அன்ரோ டினேஸ், சிகான் தரத்துக்கான பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

மலேசியாவில் நடைபெற்ற கராத்தே உயர்தேர்வில் சித்தியடைந்துள்ள டினேஸ் கராத்தே நிபுணர் சிகான். தான் லோதை மினால் 5 ஆம் கறுப்புபட்டிக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஜப்பான் கராத்தே கூட்டமைப்பின் கிராண்ட் மாஸ்டர் கியோஸி டிவைட் ஹோலியினால் நடத்தப்பட்ட உயர் தேர்விலும் சித்தியடைந்து 5 ஆம் கறுப்பு பட்டிக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளார். அன்ரே டினேஸ் தேர்வில் வெளிப்படுத்திய திறன், அவரது கராத்தே துறைசார் பங்களிப்பு, ஆர்வம், கற்பித்தல் திறன், அவரது கராத்தே நூல், இறுவட்டு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இவருக்கு சிகான் தரம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் ஆவார்.

(த-23)

## கூடைப்பந்தாட்டம்

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ளது.

(த-23)

# இந்திய வீரர்களுக்கு அச்சுறுத்தல்; கோடிக்கணக்கில் காப்புறுதி

இந்தியக்கிரிக்கெட் வீரர்களின் பெயர்கள் தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் இடம்பெற்றுள்ளமையால், அவர்களுக்கு தலா 6 கோடி ரூபாவரை காப்புறுதி வழங்கப்படவுள்ளது. அத்துடன் அவர்களது பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் இந்திய வீரர்களின் காப்புறுதித் தொகை 25 லட்சம் ரூபாக இருந்தமை குறிப்பிடத்தக்கு.

# அரையிறுதியில் இந்திய ஹொக்கி அணி

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் 'சம்பியன்ஸ் சலஞ்ச்-1' ஹொக்கித் தொடரின் அரையிறுதிச் சுற்றுக்கு இந்திய அணி முன்னேறியது.

நேற்றுமுன்தினம் நடந்த மலேசியாவுக்கு எதிரான காலிறுதியாட்டத்தில், 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் வட மாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான வதிவிட பயிற்சி முகாம் நடத்துகின்றது. நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று மெய்வன்மை தொடர்பான விளக்கங்களை பயிற்றுநர் ஒருவர் பயிற்சியாளர்களுக்கு வழங்குகிறார். (த-23)

# காலணி வாங்க ஆசனம் துடைக்கும் இந்திய உதைபந்தாட்ட வீரர்கள்!



கிரிக்கெட் மைதானத்தின் ஆசனங்களைத் துடைத்து காலணிகளை (பூட்ஸ்) வாங்கும் படுமோசமான நிலைமைக்கு இந்திய உள்ளூர் உதைபந்தாட்ட வீரர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்திய - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதும் நான்காவது ஒருநாள்போட்டி எதிர்வரும் 8ஆம் திகதி இந்தூர் ஹோல்கர் மைதானத்தில் நடக்கவுள்ளது.

இம்மைதானத்தைப் புதுப்பிக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

இதன் ஆசனங்களைத் துடைக்கும் பணியில் உள்ளூர் ஆனந்த் லெவன் உதைபந்தாட்டக் கழகத்தின் 15 வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதில், அணித்தலைவர் சஞ்சய் நிதான், மனோஜ் கரே, ரோஹித் கிரிஜி, அன்கித் சிரவாண்டே, விபன், சஞ்சு, தேஜ்கரண் ஆகிய 7 வீரர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹோல்கர் மைதானத்தில் சுமார் 30,000 ஆசனங்கள் உள்ளன. இதனைத் துடைப்பதன் மூலம் கிடைக்கும் சம்பளத்தில் காலணிகள் உள்ளிட்ட உதைபந்தாட்ட உபகரணங்களை வாங்க முடியும் என வீரர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அணியின் பயிற்சியாளர் ராமச்சந்திரசவுகான் கூறுகையில்,

''பெரும்பாலான வீரர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். உள்ளூரில் சம்பியன் பட்டம் வென்றபோது 12 ஆயிரம் ரூபாதான் பரிசு கிடைத்தது. கடந்த 3 நாட்களாக ஆசனங்களைச் சுத்தம் செய்தபோது,இதைவிடக்கூடுதல் தொகை கிடைத்தது'' - என்றார்.

துணை பயிற்சியாளர் சுதிர் கூறுகையில்,

''இந்தியாவில் உதைபந்தாட்டம் புறக்கணிப்படுகிறது. இவர்களைப் போன்ற இளம் வீரர்களின் திறமை வீணடிக்கப்படுறது. எமக்கு அனுசரணையாளர்கள்யாரும் கிடைப்பதில்லை'' என்றார்.

இந்தியாவில் கிரிக்கெட் வீரர்கள் கோடிகளில் மிதக்கின்றனர். ஐ.பி.எல். தொடரில் டோனி அடித்த எவ்வொரு ஓட்டத்துக்கும் தலா 4 லட்சம் ரூபா வரை கொடுக்கப்பட்டது.

உதைபந்தாட்ட வீரர்களுக்கோ ஆசனம் ஒன்றைத் துடைக்க வெறும் 7 ரூபாதான் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது.

# சர்ச்சையில் இலங்கை அணியின் பயிற்சியாளர்

கொழும்பு,டிசெ.3

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள், 'இருபது-20' போட்டிகள் அனைத்திலும் இலங்கை அணி தோல்வியைச் சந்திக்க, பயிற்சியாளர் ஜெப் மார்ஷ்தான் கார ணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சமீபத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஆஸ்திரேலிய அணி விளையாடிய போது, அந்த அணியில் இடம் பெற்றிருந்த தனது மகன் ஷேன் மார்ஷுக்கு, ஜெப் மார்ஷ், அடிக்கடி ஆலோசனை சொல்லுவதிலேயே கவனம் செலுத்தினார். அதனால், இலங்கை அணிக்குப் பயிற்சி வழங்குவதில் கவனம் செலுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.


# யூரோ கிண்ணத்தை வெல்வோம் என்கிறார் ஜேர்மன் பயிற்சியாளர்

பேர்லின்,டிசெ.3

'யூரோ'க் கிண்ணத்தை கைப்பற்றுவது உலகக் கிண்ணத்தைவிடக் கடினம். உலகின் பலம் வாய்ந்த பல அணிகள் இங்கு உள்ளன. எனினும், இவற்றைக் கண்டு நாம் மிரளப்போவதில்லை. ஜேர்மனி மிகச்சிறந்த அணி என்பதை இத்தொடரில் நிரூபிப்போம் என அந்த அணியின் பயிற்சியாளரான ஜக்கீம் கூறியுள்ளார்.

# இரண்டாவது ஆட்டத்திலும் வென்றது இந்தியா

**ஷோக்லி, ரோகித் சர்மா அதிரடியாய் ஆடி ஓட்டங்களைக் குவிக்க இந்திய அணி இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றி பெற்றது. மேற்கிந்தி யத்தீவுகளின் பத்தாவது வீரராக களமிறங்கிய ராம்போல் அதிரடியாய் விளாசிய அரைச் சதம் வீணானது.**



இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து மேற்கிந்தியத் தீவுகள் அணி விளையாடி வருகின்றது. முதலில் இடம் பெற்ற டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் இழந்திருந்தது. ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 'திரில்' வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் விசாகப்பட்டினத்தில் நேற்று இடம் பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் சேவாக் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.


முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னணி இலக்குகளை யுமேஸ் யாதவ் வீழ்த்தி சரிவை ஏற்படுத்தினார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பரத் 0, சாமுவேல்ஸ் 4, டரன் பிராவோ 13, கயாட் 0, ராம்டின் 2 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு திரும்ப மேற்கிந்தியத்தீவுகள் அணி 16.1 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகள் நஷ்டத்துக்கு 63 ஓட்டங்களைப் பெற்றுத் திணறியது. அதன் பின்னர் இணைந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சிம்மொன்ஸ், பொலாட் ஜோடி இந்திய அணியின் பந்து வீச்சுக்களை புரட்டி எடுத்தது. பொலாட்டின் அதிரடியில் சிக்கி சிதறியது இந்தியப் பந்து வீச்சு. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம்புகுந்து நின்றாடிய சிம்மொன்ஸ் 63 பந்துகளில் தனது 10 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இறுதியில் அணி 119 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பொலாட்டின் இலக்கு சரிக்கப்பட்டது. 30 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 35 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த அணித் தலைவர் சமி 2, ருசெல் 11 ஓட்டங்களுடன் வெளியேற 30.5 பந்து பரிமாற்றங்களில் 149 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தது. தனித்து நின்று போராடிய சிம்மொன்ஸும் 78 ஓட்டங்களுடன் வெளியேற மேற்கிந்தியத்தீவுகள் அணி 36 பந்து பரிமாற்றங்களில் 170 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்தது. 200 ஓட்டங்களை எட்டாது சுருண்டுவிடும் என்ற நினைப்பில் பந்து வீசிய இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு, இறுதி இலக்குக்காக இணைந்த ராம்போல், ரோச் ஜோடி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

இந்திய அணி பந்து வீச்சாளர்களை திணறடித்து அதிரடியாகக் ஓட்டங்கள் குவிக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 38.3 பந்து பரிமாற்றங்களில் 200 ஓட்டங்களைத் தாண்டியது. பத்தாவது வீரராகக் களமிறங்கி இந்தியாவுக்கு தண்ணி காட்டிய ராம்போல் 35 பந்துகளில் தனது கன்னி அரைச்சதத்தை கடந்தார். மறுமுனையில் ராம்போலுக்கு ஒத்துழைத்து ரோச் ஆட மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இறுதி இலக்குக்காக 99 ஓட்டங்கள் பிரிக்கப் படாத இணைப்பாட்டமாகப் பெறப்பட்டது. இந்திய அணி யின் சார்பில் பந்து வீச்சில் யுமேஸ் யாதவ் 3, வினய் குமார், ஜடேஜா தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட நுழைந்த இந்திய அணியின் முதலாவது இலக்கு 3 ஓட்டங்களில் வீழ்த்தப்பட்டது. பார்த்திவ் பட்டேல் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து நுழைந்த கம்பீர் 12 ஓட்டங்களுடன் ராம் போலின் பந்து வீச்சில் பரத்தின் அபார பிடியெடுப்பில் ஆட்டமிழந்து வெளியேறினார். இந்திய அணி 29 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்தது. இதன் பின்னர் சேவாக், ஹோக்லி இணைந்து அணியை வலுப்படுத்தினர். இவர்களின் இணைப்பில் இந்திய அணி 50 ஓட்டங்களைத் தாண்டியது. 55 ஓட்டங்களை மூன்றாவது இலக்குக்காகப் பகிர்ந்த நிலையில் சேவாக் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் இணைந்த ஹோக்லி, ரோகித் சர்மா இந்திய அணி வெற்றி வரை அழைத்துச் சென்றனர். இந்திய அணியின் பல பிடியெடுப்புக்களை மேற்கிந்தியத்தீவுகள் கோட்டை விட இந்தியாவின் வெற்றி வாய்ப்பு உறுதியானது. சிறப்பாக ஆடிய ஹோக்லி 113 பந்துகளில் 8 ஆவது சதத்தை கடந்தார். வெற்றிக்கு 22 ஓட்டங்கள் தேவையான நிலையில் ஹோக்லி 117 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து நுழைந்த ரெய்னா 'கோல்டன் டக்காகி' வெளியேறினார். இறுதியில் இந்திய அணி 48.1 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 270 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. ரோகித் சர்மா 90, ஜடேஜா 9 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். பந்து வீச்சில் ராம்போல், ரோச் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஹோக்லி தெரிவானார். (15)

## பொன்டிங்கின் அரைச்சதத்துடன் ஆஸி. வலுவானது



பொன்டிங்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 295 ஓட்டங்களைச் சேர்த்தது. பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, நேற்றைய ஆட்டம் முடியும்போது 3 இலக்குகள் இழப்புக்கு 154 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் 2 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று முன்தினம் பிரிஸ்பேன் மைதானத்தில் ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, முதல்நாள் ஆட்டம் முடியும்போது, 5 இலக்குகள் இழப்புக்கு 176 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. பிராத் வைட் 32 ஓட்டங்களுடனும், வெற்றோரி 45 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். முதல் நாள் ஆட்டத்தின் பெரும் பகுதி மழையால் பாதிக்கப்பட்டமையால், 51 பந்து பரிமாற்றங்களுடன் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இரண்டாம் நாளான நேற்று மீண்டும் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்து ஆடிய நியூஸிலாந்து அணிக்கு, முந்தைய நாள் களத்திலிருந்த பிராத் வைட்-வெற்றோரி ஜோடி, முதல்நாளைப் போலவே நேற்றும் தமது பங்களிப்பைத் திறப்படச் செய்தது.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த வெற்றோரி சதமடிக்கும் கட்டத்தை நெருங்கியவேளை துரஷ்டமாக சதத்தைத் தவறவிட்டுச் சென்றார். அவர் 96 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது நியூஸிலாந்து அணி 254 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

வெற்றோரியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து வந்த வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை. இதனால், அந்த அணி 295 ஓட்டங்களுள் சகல இலக்குகளையும் பறிகொடுத் தது. பிராத் வைட் 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, ஆரம்பத்தில் பெரும் அதிர்ச்சிக்குள்ளா னது. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய வோர்ணர் (3), ஹூயூ கெஸ் (10) ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்தனர். பின் னர் வந்த ஹவாஜா தனது பங்குக்கு 38 ஓட்டங்களைச் சேர்த் துச் சென்றார். இறுதியில் நேற்றைய ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக முன்கூட்டியே இடைநிறுத்தப் பட்டது. அப்போது ஆஸ்திரேலிய அணி 3 இலக்குகள் இழப் புக்கு 154 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

முன்னாள் அணித்தலைவர் பொன்டிங் 67 ஓட்டங்களுடனும், கிளார்க் 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், சௌத்தீ, மார்டின் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும். (15)

இந்த வாரம்...

## 40 சதவீதம் மட்டுமே!

இலங்கைக் கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும் என்றும் அதிலும் 40 வீதம் இந்த வாரமே வழங்கப்படும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் ரவி கருணாநாயக்க எம்.பி. நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையிடமிருந்து (ஐ.சி.சி) இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு 43 லட்சம் அமெரிக்க டொலர்கள் கிடைக்கவுள்ளது எனவும், அதன்மூலம் வீரர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்க முடியும் எனவும் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

வீரர்களுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வருடம் நடந்த உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்காக இலங்கை கிரிக்கெட் சபை அதிக நிதிகளை செலவிட்டது எனவும், எனினும் போட்டியில் எதிர்ப்பார்த்த வருமானத்தை ஈட்டமுடியவில்லை என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (15)

சம்பியன்ஸ் லீக்;

## மான்செஸ்டர், கிறிஸ்டர் பேலஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்

'சம்பியன்ஸ் லீக்' உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டத்தில் 2-1 என்ற கோல் கணக் கில் மான்செஸ்டர் யுனைடெட் அணியை வீழ்த்தி கிறிஸ்டர் பேலஸ் அரையிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு காலிறுதியாட்டத்தில் காடீப்சிட்டி அணி பிளாக்பேர்னை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

'சம்பியன்ஸ் லீக்' உதைபந்தாட்டத் தொடரில் ஒல்ட்டிரா போர்ட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதியாட்டம் ஒன்றில், மான்செஸ்டர் யுனைடெட்- கிறிஸ்டல் பேலஸ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியின் பிற்பாதியில் 66 ஆவது நிமிடத்தில் கிறிஸ்டல் பேலஸ் வீரர் டாரன் அம்புரோஸ் முதல் கோலை அடித்தார்.

அடுத்த 2 ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு ஒரு 'பெனால்டி' வாய்ப்புக் கிடைத்தது. இதனை மச்சேடா கோலாக மாற்ற 90 நிமிட ஆட்டமும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இதையடுத்து கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. இதில், 98 ஆவது நிமிடத்தில் கிளென் முரே அடித்த கோல் மூலம் கிறிஸ்டர் பேலஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் காடீப் சிட்டி அணி, பிளாக்பேர்ன் ரோவர்ஸை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

கென்னி மில்லர் 20 ஆவது நிமிடத்தி லும் அன்டனி ஜெரார்ட் 50 ஆவது நிமிடத்தி லும் அடித்த கோல்கள் காடீப் சிட்டியின் வெற் றிக்கு வித்திட்டன.

இந்தத் தொடரின் அரையிறுதியாட்டங்களில் மான்செஸ்டர் சிட்டி, லிவர்பூல் அணியையும், காடீப் சிட்டி, கிறிஸ்டல் பேலஸ் அணியையும் சந்திக்கின்றன. (15)



கிறிஸ்டர் பேலஸ் அணி வீரர் கிளென் முரே வெற்றிக்கோல் ...

## கண்ணீர் அஞ்சலி



யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்
திருமதி
சறோஜினி பாலகிருஷ்ணன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி இராசம்மா
கணபதிப்பிள்ளை
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(7864)(2-6-9)

சங்கத்தானை,
சாவகச்சேரி.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.



## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை இராசம்மா

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை இராசம்மா (02.12.2011) வெள்ளிக்கிழமை காலமானாரர்.



அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் மனைவியும், மார்க்கண்டு, கமலாதேவி, சித்திராதேவி, சந்திராதேவி, சறோஜினிதேவி (ஆசிரியை, சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை), காலஞ்சென்ற இராசகோபாலன் ஆகியோரின் அன்புத் தாயும், பொன்னுத்துரை, செல்லத்துரை, சின்னம்மா ஆகியோரின் சகோதரியும், செல்லப்பா, தர்மலிங்கம் (கீதாராசா), சுந்தரலிங்கம், பாலகிருஷ்ணன் ஆகியோரின் மாமியும், யோகநாதன் கீதா (கனடா), முகுந்தன் ஜீவா (டென்மார்க்), ராஜரூபன் கவிதா (கனடா), கீதவேங்கையன் (பிரான்ஸ்), அரவிந்தன் (சுகாதாரப் பரிசோதகர்), யசோதா, வரதன், சுஜீவா (குடும்ப நல உத்தியோகத்தர்), பாலமோகன் நளினி (UNHCR) ஆதிரை (சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி), வித்தியாதரன் (கனடா), சுலோஜன், பிரதாப், உதயசூரியன் (லண்டன்), றஜிதா (லண்டன்), தர்சிகா, ரகீசன் (பல்கலைக் கழக மாணவன் இறுதி ஆண்டு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2011) சனிக்கிழமை ந.ப.12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொம்பிகுளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(11131)(2,6,9)
தகவல்:
குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி



### சண்முகம் சங்கரலிங்கம்

(ரஞ்சன்)
(உரிமையாளர், ''கணேசா நகையகம்''
யாழ்ப்பாணம், வவுனியா)

01.12.2011 அன்று சிவபதமடைந்த எமது நண்பர் சண்முகம் சங்கரலிங்கம் (ரஞ்சன்) (உரிமையாளர்- கணேசா நகையகம்- யாழ்ப்பாணம், கணேசா நகையகம்- வவுனியா) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

K.ராம்
(அக்ஷா நகைமாடம்),
34, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## கொல்லங்கலட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் அனைத்தையும் பலாலி உயர் பாதுகாப்பு வலயத்துடனான இணைந்த பகுதிகளில் மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும்.

அச்செழு, ஊரெழு மற்றும் சுன்னாகம் அகிய பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களையும் பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்துடன் இணைக்கும் வகையில் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிய வந்தது.

இதற்கான இடங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் இதனடிப்படையில் உடுவிலில் அமைந்திருந்த 513 பிரிகேட் இராணுவத்தினர் காங்கேசன்துறை சிமெந்துச் சாலைக்கு சொந்தமான மாவை கலட்டியில் உள்ள காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை உயர்பாதுகாப்பு வலயத்தில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்ட பின்னரே மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படவுள்ளனர். என்று கூறப்படுகின்றது.

(ஓ-15)

## சர்வாதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

படையினர் யுத்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மறுத்துள்ள இலங்கை அரசு, இதுதொடர்பான விசாரணையை நடத்துவது குறித்தும் மறுப்புத் தெரிவித்துள்ளது.

அரசின் நிலைப்பாட்டுக்கு எதிரான ஐ.நா.வின் அண்மை அறிக்கையை ஜோன் பயட் பாராட்டியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, யுத்தக் குற்றச்செயல்கள் குறித்து விசாரணையை முன்னெடுக்கப்பட வேண்டுமென இலங்கைக்கு மேற்குலக நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களான போதிலும் தமிழ்ச் சமூகத்தவருடனான அர்த்தமுள்ள நல்லிணக்கமொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை காணவில்லை என்றும் அமைச்சர் ஜோன் பயட் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் வளர்ந்து வரும் சர்வாதிகாரப் போக்கையே நாங்கள் கண்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஓ-சி)


## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலி



R.M. ஜீட்றொனில்

தோற்றம்: 15.08.1962
மறைவு: 02.09.2011

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளி விளக்கே
அறிவின் இருப்பிடமே
90 நாள்கள் ஆகியும்
ஆறவில்லை எம் மனம்

காந்தி சனசமூக நிலையம்,
நாவற்குழி கிழக்கு,
கைதடி.
(11135)(1,6)



Student Visa
SPOT ADMISSION
December 4th 2011 - 10.00 AM-12:30 PM

இதோ அரிய சந்தர்ப்பம்
2012 Jan/Feb யில் UKயில் கல்வியை தொடரலாம்

GLYNDWR UNIVERSITY
(HIGHLY TRUSTED SPONSOR)

20 HOURS WORK PERMIT, 3 1/2 வருட விசா
NO NEED IELTS
Entry Qualifications: 3 Passes at A/Ls

Courses: Bachelor of Degree Courses £4000 Per year
Master Degree Courses £6500 Full Program

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No. 22A, Frankfort Place, Bambalapitiya, Colombo -04, Srilanka.
Tel : 011 2508443 / Mob : 0777 849 853,
Web : www.etbclanka.com / E-mail : etbc@etbclanka.com

Jaffna Branch - 82/12A Chetty Street, Nallur.
Tel : 0777849853, 0774454646



## கண்ணீர் காணிக்கை

வல்வெட்டித்துறை அம்பாள் பேக்கரி உரிமையாளரும் எமது சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினருமாகிய இ.அமரசேனாபதி அவர்களின் அன்புச்சகோதரன்
அமரர் இளையபெருமாள் சிவலிங்கம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்.
அங்கத்தவர்கள். பணியாளர்கள்.



### தொல்லியற் திணைக்களம், வடபிராந்தியக் காரியாலயம்

## கட்டடப்பொருள்கள், தொழிலாளர்கள் வழங்குவதற்கான கூறுவிலைகோரல் விண்ணப்பம் - 2012

யாழ்ப்பாணக் கோட்டையை 2012ஆம் ஆண்டில் மீள்நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய கட்டடப் பொருள்கள், தொழிலாளர்கள் வழங்குவதற்கான கூறுவிலை விண்ணப்பம் கோரல்

கூறு விலை கோரல் விண்ணப்பங்களை இல.160, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தொல்லியல் திணைக்கள வட பிராந்திய காரியாலயத்தில் 2011.12.03 தொடக்கம் 2011.12.06 வரை வேலை நாள்களில் முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலை கோரல் விண்ணப்பப் படிவங்களை 2011.12.16 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் இல.160, கோயில் வீதி, தொல்லியல் பிரதேச காரியாலயத்தில் உள்ள கூறுவிலைப் பெட்டியில் போடலாம். கூறுவிலை கோரல் விண்ணப்பங்கள் 2011.12.16 பிற்பகல் 3 மணிக்கு பரிசீலிக்கப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். அப்போது விண்ணப்பதாரி அல்லது அவரின் பிரதிநிதி நேரில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்கும் போது தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2012 ஆம் ஆண்டுக்கான கட்டடப் பொருள்கள், தொழிலாளர்கள் வழங்குவதற்கான கூறுவிலைகோரல் விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கூறுவிலை கோரல் சபை, தொல்லியல் பிரதேச காரியாலயம், இல. 160, கோயில் வீதி, நல்லூர், யாழப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை காரியாலய தொலைபேசி இலக்கம் 0212224574 மூலம் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

கலாநிதி செனரத் திஸாநாயக்கா
தொல்லியல் பணிப்பாளர் நாயகம்,
கொழும்பு - 7
(c/6476)(6,8,9)

# இந்துநாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சிப்பட்டறை

கொழும்பு, டிசெ.3

அரச பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் இந்து நாகரிக பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இந்து நாகரிகம் தொடர்பாக மேலதிக ஆலோசனைகளையும் விடய அறிவினையும் வழங்கும் முகமாக பயிற்சிப் பட்டறையொன்றினை 5,6,7 ஆம் திகதிகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

முதற்கட்டமாக, கொழும்பு, கம்பாஹா, களுத்துறை, நுவரெலியா, கண்டி, ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் உள்ளடக்கப்படவுள்ளனர். இப்பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்ள விரும்பும் ஆசிரியர்கள் பெயர் விவரங்களை 2552826, 2552641 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளுமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில் -

இரகசியமான அறிக்கை யொன்றின்படி சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மாவீரர் தினத்தை கொண்டாட முற்பட்டபோது சிறைச்சாலை அத்தியட்சகர் உரிய நேரத்தில் நடவடிக்கை மேற் கொள்ளாவிட்டிருந்தால் பெரும் அழிவு ஏற்பட்டிருக்கும்.

ஏனெனில், சிங்கள சிறைக் கைதிகள் அவர்களை தாக்கத் திட்டமிட்டனர் என்றம் அவர் தெரிவித்தார்.

## வைத்தியசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் நான்கு வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் தலையீடு இருப்பதால் இத்திட்டம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர்கள் சிலர், அமைச்சரவைக் கூட்டத்தின்போது கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், அரசின் இந்தத் திட்டம் குறித்து தேசப்பற்று தேசிய இயக்கத்தின் நிலைப்பாடு என்னவென்பது தொடர்பாக அந்த அமைப்பின் ஊடகச் செயலாளர் வசந்த பண்டாரவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமெரிக்க இராணுவத்தின் நிதி உதவியுடன் அரசு வடக்கில் நான்கு வைத்தியசாலைகளை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தின்போது சில அமைச்சர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என நாம் அறிகின்றோம்.

நிதியுதவி மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். ஏனைய நடவடிக்கைகளை அரசுதான் முன்னெடுக்கும் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். குறித்த திட்டம் நிறைவேற்றப்படும் வரை ஜனாதிபதி தனது உறுதிமொழியைத் தளர்த்திக்கொள்ளக்கூடாது.

வெளிநாடுகளின் நிதியுதவியின்றி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் இந்த விவகாரத்தில் அரசு செயற்பட்டுள்ளது என நாம் கருதுகின்றோம்.

எது எப்படியிருப்பினும், வைத்தியசாலை அமைக்கிறோம் என்ற போர்வையில் எமது நாட்டுக்குள் அமெரிக்க இராணுவம் உட்புக முயன்றால் அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்; எவரும் இடமளிக்கவும் கூடாது.

இந்தத் திட்டம் குறித்து நாம் கூடுதல் கவனம் செலுத்துகின்றோம். அமெரிக்க இராணுவம் எமது நாட்டை உளவு பார்ப்பதற்கோ அல்லது ஏனைய நடவடிக்கைக்கோ முனைந்தால் அதற்கு இங்கு ஒருபோதும் அனுமதியில்லை - என்று அடித்துக் கூறினார் வசந்த பண்டார.

(ஒ-சி)


## மரண அறிவித்தல்



திருமதி.

**சமரக்கொடி மேரிஜெயராணி**

தோலகட்டி, வயாவிளானை பிறப்பிடமாகவும் கல்திட்டி வீதி, ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சமரக்கொடி மேரிஜெயராணி நேற்று 02.12.2011 வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நேசராசா மற்றும் தவமணி தம்பதியரின் அன்புமகளும் றூபிகா, ஜெனிஸ்ரன் காலஞ்சென்ற தர்சினி ஆகியோரின் பாசமிகு தாயும் குவேந்திரன் பிறேமினி ஆகியோரின் பாசமிகு மாமியும் கிளஸ்ரீகன், நேருஷா, லக்ஸ்சுயன் ஆகியோரின் பேர்த்தியும் ஜெயா(லண்டன்), பாப்பா, ஜெயந்தி, சூட்டி காலஞ்சென்ற ஜெசி ஜெயநேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌரி(லண்டன்) இராஜமோகன் அன்ரன் சர்மிளா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை 04.12.2011 ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் காக்கைதீவு கரயாம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்திட்டி வீதி,
ஆறுகால் மடம்.

தகவல்:
குடும்பத்தினர்.


## ஹிக்கடுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தல் விடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முறைகேடான நடவடிக்கைகள் காரணமாக நகர சபைக்கு 6 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டது என நகர சபை உறுப்பினர் ஒருவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அவருக்கு மேற்படி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டார். சந்தேகநபர்கள் தமது உடல்களில் தாங்களாகவே காயங்களை ஏற்படுத்திக் கொண்டு, அவற்றை வெளிநாடுகளில் இருந்து இயங்கும் இணையத் தளங்களுக்கு அனுப்பி வைத்து இலங்கையின் மதிப்பையும் நற்பெயரையும் கெடுக்க முனைந்திருக்கிறார்கள் என்று அந்த அதிகாரி நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரி தலைமையில் நடைபெற்ற தேடுதலில் 19 கைத்தொலைபேசிகள், அவற்றுக்கான 'சார்ஜர்கள்' 19, இரும்புக் கம்பிகள், கூர்மையான ஆயுதங்கள் என்பன கண்டெடுக்கப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## திருநெல்வேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு அவற்றில் இருந்த பணமும் பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

நன்கு திட்டமிட்ட முறையில் இரும்பினால் ஆன ஆயுதங்களைப் பயன்படுத்தி கடைகளின் பூட்டுக்கள் அடித்து உடைக்கப்பட்டு கதவுகள் பிரிக்கப்பட்டு இந்தத் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணினி நிலையத்தில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும், நல்லைக் கந்தன் களஞ்சியத்தில் 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும், மருதடி அழகு சாதன நிலையத்தில் 75 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட ஆடைகளும் 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் திருடப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர்கள் தெரிவித்தனர். ஏனைய வியாபார நிலையங்களில் திருடப்பட்ட பணம் மற்றும் பொருள்களின் பெறுமதி உடனடியாகத் தெரியவரவில்லை.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கடைகளின் உரிமையாளர்கள் சிலர் தமது வியாபபார நிலையங்களை இரவு 10 மணிக்கே மூடிவிட்டுச் சென்றதாகத் தெரிவித்தனர். அதுவரை அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான எவரும் இல்லை எனவும் அவர்கள் கூறினர். நள்ளிரவு நேரமே பெரும்பாலும் இந்தத் திருட்டு இடம்பெற்றிருக்கலாம் என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை சம்பவ இடத்துக்கு சென்ற கோப்பாய்ப் பொலிஸார் திருட்டுப்போன வர்த்தக நிலையங்களின் தடயங்களைப் பெற்றதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையும் இந்தப் பகுதியில் சில கடைகளை உடைத்துத் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் பூட்டுக்கள் உடைக்கமுடியாமல் போனதால் அந்த முயற்சி கைவிடப்பட்டிருந்ததாகவும் அப்பகுதி வர்த்தகர்கள் கூறினார்கள். அண்மையில் திருநெல்வேலியில் உள்ள மதுபான நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான மதுபான வகைகள் திருடப்பட்டதாகவும் தெரிவித்த திருநெல்வேலி வர்த்தகர்கள் ஒரே நேரத்தில் 7 கடைகள் உடைக்கப்பட்டமை அதிர்ச்சி அளிப்பதாகவும் கூறினார்கள். பிரதான வீதியில் இவ்வாறான ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளமை பாதுகாப்பற்ற நிலையையே காட்டுவதாகவும் இதனால் தாம் தொழிலை தொடர முடியாத நிலை ஏற்படும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டனர்.

(த-7)

## தெரிவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஜனாதிபதியிடம் நேற்று விளக்கியுள்ளனர். இதனையடுத்தே இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருடன் நேரடிப் பேச்சு நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

நாட்டின் தலைவர் என்பதற்கு அப்பால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற கோதாவில் இருந்து கொண்டு இந்தப் பேச்சை நடத்துவதற்கு ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் என்றும் வெகுவிரைவில் இந்தப் பேச்சு இடம்பெறும் என்றும் தெரியவருகின்றது. (ஒ-சி)


## மரண அறிவித்தல்

*குமாரசாமி விசாலாட்சி*

*(மகேஸ்)*

மீசாலையைப் பிறப்பிடமாகவும், தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி விசாலாட்சி 02.12.2011 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் (நல்லையா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஏரம்பு மற்றும் கார்த்திகேசு, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், பாலசுப்பிரமணியம், கமலகுமாரி, வசந்தகுமாரி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயும், தம்பபூபதி, விக்கினேஸ்வரமூர்த்தி, தியாகேஸ்வரன், தர்சினி ஆகியோரின் மாமியும், சிவகரன், சிவலதா, சிவதீபா, கோபிகரன், பவித்திரா, சிவசங்கர், வீஸ்மன், சுகிர், சுவேதா, குறிஞ்சன், சுதர்சன், கோஷினி ஆகியோரின் பேர்த்தியும், கஜி, நேத்ரா, விஷ்ணுகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
பாஸ்கரன் (பாலா-மகன்)



**தவறிவிட்டது:** செல்லையா பத்மராணி என்பவரது தேசிய அடையாள அட்டை (565472585V) வங்கிப் புத்தகம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பேஸ் விசுவமடுவில் இருந்து கிளிநொச்சி சென்ற பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 173, விவேகானந்த நகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தொ.பே: 0774801037



## யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

**பரிசளிப்பு விழா- 2011**

இன்று நடைபெறும் பரிசளிப்பு விழாவில்
பரிசில்கள் பெறும் அனைத்து மாணவர்களையும்
மற்றும்
ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற
செல்வன் ம. சஞ்சயன்
செல்வி க.மதுஜா
*ஆகியோரையும் இவர்களுக்கு கல்வி போதித்த*
*ஆசிரியை திருமதி த.பத்தராசா அவர்களையும்*
*பல்கலைக்கழக அனுமதி பெற்ற*
செல்வி இ. துஷ்யந்தி
செல்வி ச. விஜிதா
செல்வி ர. தர்சிகா
செல்வி த. சரளா
செல்வி சி. கபில்டா
செல்வி இ.நித்தியா
**ஆகியோரையும் கற்பித்த ஆசிரியர்களையும்**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்.**
*பாடசாலை சமூகம்.*



## கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் 47 ஆவது நினைவு தினவிழா

**இடம்** : கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
**காலம்**: 05.12.2011 திங்கட்கிழமை மு.ப 10.00 மணி
**தலைமை**: இ.இராஜாராம் அவர்கள் தலைவர்,
யாழ்.மாவட்டக்கூட்டுறவுச் சபை
**பிரதமவிருந்தினர்**: திருமதி இமெல்டாசுகுமார் அவர்கள்
அரச அதிபர் - யாழ்.மாவட்டம்.

*இந்த விழாவில் 89 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப் படும். கூட்டுறவாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இல.12,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6477) (3,6,9)

யாழ்ப்பாணம்
மாவட்டக்கூட்டுறவுச் சபை

# NALRAVI
## SPOKEN ENGLISH

பயிற்சி நெறியைப் பற்றி:

- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்

யாருக்காக:

- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:

- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்




NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond

Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004

Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)


## எயிட்ஸ் நோய் விழிப்புணர்வு கருத்தரங்கும் ஊர்வலமும்

வவுனியா,டிசெ.3

வவுனியா மாவட்ட பாலியல் நோய்கள், எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப் பட்ட எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, ஊர்வலம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா வைத்தியசாலை வைத் திய கலாநிதி கே.சந்திரகுமார் தலை மையில் ஆரம்பமான இக்கருத்தரங் கில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி எம்.மகேந் திரன் உட்பட வைத்திய கலாநிதிகள், பொலிஸார், முச்சக்கர வண்டி உரிமை யாளர்கள், சாரதிகள் வைத்தியசாலை பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

எயிட்ஸ் நோய்த்தொற்றை பூச்சிய மாக்குவோம், தொற்றுடையவர் களுக்கு வேறுபாடு காட் டலைத் தவிர்ப் போம், எயிட்ஸால் ஏற்படும் மர ணத்தை பூச்சிய மாக்குவோம் என்ற தொனிப் பொருளில் இந்தக் கருத்தரங்கும் ஊர் வலமும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

(எ)


### வீடு விற்பனைக்கு

2½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடுவில், அம்பலவாணர் வீதி, காளிகோவிலடி வடக்கு என்னும் முகவரியில் விற் பனைக்குண்டு.

தொடர்பு: 0212221982


## பாராட்டி வாழ்த்து

### நந்தகுமார் வித்தியாசாகன்



நெடுந்தீவைப் பிறப்பிடமாக வும் யாழ்ப்பாணத்தை வதி விடமாகவும்கொண்ட நந்தகுமார் கௌரிதேவி தம்பதியின் தவப்புதல்வன் **வித்தியாசாகன்** 2011 ஆம்ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் யில் 180 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவருக்கு கல்வி ஊட்டிய யாழ்.இந்து ஆரம்பப்பாட சாலை அதிபர், ஆசிரியை திருமதி ம.பத்மநாதன் ஆகியோருக்கும் எமது நன்றியை உளமாரத் தெரிவித்துக்கொள்கின்றோம். நயினை நாகபூஷணி அம்மனின் அருளுடன் கல்வியில் மேலும் பல சாதனைகள் புரிந்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
அப்பா, அம்மாவுடன் அக்கா -அபர்ணா, தங்கை - அங்கவை, சூரியா -மாமா,மாமி, கௌரி மாமி, நந்தாமாமி ஆகியோருடன் அம்மம்மா(சிவகாமி-லண்டன்), சின்ன மாமா( கருணா- லண்டன்), ஆச்சமாமா (சிவம் - லண்டன்),பெரியம்மா( கோசலா -லண்டன்), குட்டிமாமா (தவராசா- லண்டன்),சித்தி (டைசி-லண்டன்)


### CBF, DBF

வகுப்புகள் அனைத்தும் ஆரம்பம்
இன்று 03.12.2011 பி.ப 3 மணி

CBM
33, Temple Road,
Kokuvil East, Kokuvil.
(0777110756- N. Umakanth)

(11122)(6,8,9)


## மரண அறிவித்தல்

### சிவசம்பு செல்வராசா (மாம்பழம்)



வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டம், யாழ்ப் பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு-செல்வராசா (01.12.2011) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு -சிவபாக் கியத்தின் மகனும், இராஸலட்சுமியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (லண்டன்), சுகேந்திரன் (ஆசிரியர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பிரபா கரன் (ஜேர்மனி), சுரேஸ்கரன் (ஜேர்மனி) கிருபாகரன், சிவகரன், நிசாந்தினி (ஜேர்மனி), ரவிசங்கர் ஆகியோரின் தந்தையும், பவா னந்தி (லண்டன்), சந்திரகலா, யோகராணி (ஜேர்மனி), வேணுகா (ஜேர்மனி), செல்வக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், பிரியங்கா, பிரவீன், பிரதிஷா, அனோஜன், லக்ஷன், பிரவீனா, பிரவிசா, பிரவீகா, வேணுஜன், பானுஜன், அனுஸ்கா, ஷாருகன், ஷாமினி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான பரமு-சின்னம்மா தம்பதியரின் மருமகனும், தியாகராசா, சரஸ்வதி, காலஞ்சென்றவர் களான சண்முகராசா, சற்குணராசா மற்றும் புஸ்பராணி, வசந்தராசா, சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2011) ஞாயிற் றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7/1, பால்குளம் புதுவீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

(11123)(6,8,9)


# STUDY IN UK
## Spot Admission!

லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

- GCE(O/L) தகமை போதுமானது
- 20 மணித்தியாலம் வேலை (per week)
- 4 வருட visa உத்தரவாதம்
- இலவச IELTS வகுப்புகள்

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**Jaffna**

| | |
|---|---|
| காலம் | 3rd & 4th December 2011: 10.30 a.m. - 3.00 p.m. |
| வழங்குபவர் | MR.S.SRINIMAL |
| இடம் | Exponet -Jaffna Branch NO197,ARASADY ROAD,JAFFNA(BETWEEN KANTHARMADAM JUNCTION & JAFFNA HINDU LADIES COLLEGE) |

icp

International College of Portsmouth(ICP) இல் இருந்து வருகை தரவிருக்கும் College Representative உடன் நேரடியாக கலந்துரையாடி உங்கள் கல்வி கற்பது தொடர்பாக இலவச ஆலோசனைகளையும் உடனடி அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**Colombo**

| | |
|---|---|
| காலம் | 05th December 2011: 1.30 p.m. - 4.30 p.m. |
| வழங்குபவர் | MR. CHARLIE MEGGY (INTERNATIONAL MARKETING OFFICER) |
| இடம் | தலைமைக் காரியாலயம்-EXPONET- COLOMBO NO379 1/2,GALLE ROAD,COLOMBO-06 |

எமது சேவை முற்றிலும் இலவசமானது* *CONDITION APPLY

பதிவுகளுக்கு
Jaffna - 021 222 7230,021 753 8395
Colombo - 0117 555511,Fax - 0117 555517

EXPONET Overseas Consultants
Head Office : 379 - 1/2, GALLE ROAD, COLOMBO 06.
Jaffna Branch : 197,ARASADY ROAD, JAFFNA.
London Branch: 56, THE GRADENS HARROW MIDDLESSEX, HA1 4EY, UK.
Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk



CHEMISTRY
S.Vasu
A/L 2013
சத்தியியல்
sat, sun 4.30 - 5.30pm
ஆரம்பம்: 03.12.2011 (இன்று)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



### காணி விற்பனைக்கு

நல்லூர் சுற்றாடலில் 2 பரப்புக் காணி விற் பனைக்குண்டு. தொடர்புகள் மாலை 4 மணி முதல் 8 மணி வரை.

தொடர்புகளுக்கு: 0726803408


## மரண அறிவித்தல்

### முத்தையா மகேஸ்வரன்



ஏழாலை கிழக் கைப் பிறப்பிடமா கவும் வசிப்பிடமாக வும் கொண்ட முத் தையா மகேஸ்வரன் 02.11.2011 நேற்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.12.2011) சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக காடகம்பை இந்து மயா னத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனவாவோடை,
ஏழாலை தெற்கு, ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.


CHEMISTRY S.Vasu
A/L DAY CLASS
புதிய பிரிவு ஆரம்பம்: 03.12.2011 இன்று
வாயுக்கள், பொது இரசாயனவியல்
sat, sun - 9.30-11.00 am
அடிப்படை இரசாயனவியல்
sat, sun - 6.30-7.30 pm
சத்தியியல்
wed, thur - 3.30-4.30 pm
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

### Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)

(With Practical Electronic)

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - 04/12/2011 நேரம்11மணி காலம் 2 மாதங்கள்
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.